நிகரி
NIHARI நிகரி
"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 09, 24th March 2002

இது ஒரு ராவய வெளியீடு
இதழ் 09 - மார்ச் 24, 2002
விலை ரூபா 12/=

**கவனம் !**

*பொங்கு தமிழென்று பொங்கிப் பிரவகித்து*
*எங்கள் தமிழர் எழுச்சி பெற்றார் - பங்கமில்லை !*
*பங்கமுண்டு கவனம் மரம் பழுத்தால் வருபவற்கு*
*எங்குமுண்டு எச்சில் இலை !*

**- ஈழமோகம்**


# சமாதானத்தைக் குழப்பாதே !

## மட்டு நகரில் மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் !

*மட்டக்களப்பு கிரானில் அன்னை பூபதி நினைவுப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தவெனப் போடப்பட்டிருந்த பந்தலைக்குலைத்த விஷமிகள் படையினரே என்றுகுற்றஞ்சாட்டியும் அவர்களின் இச்செயலைக் கண்டித்தும் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று (௨.03.௨00௨) நடைபெற்றது. பெருமளவு மக்கள், படையினரின் இச்செயலைக் கண்டித்து திரளாகக்குவிந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.*

*"சமாதானத்தைக்குழப்பாதே" என்று படையினரை நோக்கிக் கோஷம் எழுப்பியும் எதிர்ப்பு சுலோகப் பதாகைகளை தாங்கிய வண்ணமும் இவ்வார்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.*





இரு பிரிவாக நடைபெற்ற இவ்வூர்வலத்தின் ஒரு பிரிவு மொரக் கொட்டாஞ் சேனையிலிருந்தும் மறு பிரிவு வாழைச்சேனை புகையிரத நிலைய வீதியிலிருந்தும் ஆரம்பமாகி அன்னை பூபதியின் கிராமமான கிரான் சந்தியைச் சென்றடைந்தது. இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந் தத்தின்படி நாட்டில் நிரந்தர போர் நிறுத்தம் கடைபிடிக்கப்படுவதை மட்டக்களப்பிலுள்ள படையினர் விரும்பவில்லையோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்கனவே இருந்த போதும் சமீப கால சம்பவங்கள் இதை மேலும் உறுதிப்படுத்தி வருகின்றன.

இலங்கையில் அமைதிகாக்கவென வந்த இந்தியப்படையின் அத்துமீறல்களைக்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...

**பூபதி நினைவுப் பூங்கா புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரா? 7**



**திருமலையில் பொங்கு தமிழ் 4**



**புலியைப் பூனையாக்கும் முயற்சி 5**





**வேண்டாம் விபரீத விளையாட்டு 8**



**ராஜஸ்தானத்து பெருமாள் 5**



# என்று அடங்குமிந்த அமெரிக்க அச்சுறுத்தல்?

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க உதவி அரசுச் செயலர் கிறிஸ்ரினா ரொக்கா, புலிகளை மாத்திரம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அமெரிக்கா கருதவில்லை, ஏனைய தமிழ் கட்சிகளையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவே அமெரிக்கா காண்கிறது என அறிவித்துள்ளார்.

நான்கு தமிழ் கட்சிகள் ஒரு கூட்டமைப்புக்குள் வந்து, புலிகளையே தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்ததன் மூலமாக தமிழரின் வாக்குகளைப் பெற்று இன்று பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றனர். கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் முக்கிய தலைவர்கள் அனைவருமே புலிகளே தமிழரின் ஏக பிரதிநிதிகள் என்றும் பிரபாகரனே தமிழரின் தலைவர் என்றும் பிரச்சாரப்படுத்தியும் வருகின்றனர்.

தமிழ்ச் சூழலில் தலைமை மற்றும் பிரதிநிதித்துவம் சார்ந்த உரையாடல் இவ்வாறிருக்க, கிறிஸ்ரினா ரொக்கா இந்த அரசியலையே அறியாதவராக உரையாற்றியிருக்கிறார்.

இப்படித்தான் கடந்த வருடம் யாழ்ப்பாணம் சென்ற அமெரிக்க தூதுவர் வில்ஸ் தமிழர்கள் சுய நிர்ணயம் கோருவதை கைவிட வேண்டும் என எச்சரிக்கை செய்து, தமிழ் மக்களின் அனைத்துப் பிரிவினரிடம் இருந்தும் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டார்.

தாம் யாரைப் பிரதிநிதியாகக் கொள்வது என்பதை தாம் தாமே தீர்மானிக்க வேண்டும்? அமெரிக்கா யார் தமக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்ய? என தமிழ் மக்கள் எரிச்சலுற்றுள்ளனர்.

அத்துடன், புலிகள் மாத்திரமல்ல ஏனைய தமிழ் கட்சிகளும் தமிழரின் பிரதிநிதிகளே என அமெரிக்க உதவி அரசுச் செயலர் கூறியதற்கு தமிழ் கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்காது மௌனமாயிருப்பது அவர்கள் அமெரிக்க நோக்கங்களுக்கு பணிந்து விட்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

மறுப்பார்களா?

# தேர்தல் வன்முறை: எது உண்மை?

நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் பெரிதும் அமைதியுடன் நடைபெறுவதாக லக்பிம, லங்காதீப, திவயின, தினமின ஆகிய முன்னணி சிங்கள நாளிதழ்கள் தலைப்புத் தீட்டியுள்ளன. மிகவும் குறைந்தளவு வன்முறைகளே இடம் பெற்றுள்ள தேர்தலாக இத்தேர்தலை தினமின விபரித்து கட்டுரையும் வெளியிட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனநாயக, சமாதான பண்பை இதனூடாக உயர்த்திக்காட்ட இவ்வூடகங்கள் முயற்சித்தி ருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

எனினும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) மற்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் (சி.எம்.இ.வி.) ஆகியன வெளியிட்டிருக்கும் தகவல்கள் வேறுவிதமாயுள்ளன. தேர்தல் சமயத்தில் வன்முறைகள் அதிகரித்ததாக இவ்விரு அமைப்புகளும் அறிக்கை விட்டிருப்பதாக தி ஐலன்ட் குறிப்பிட்டுள்ளது. எதுவாயினும் வாக்களித்தோர் எண்ணிக்கை வீழ்ச்சியுற்றிருப்பதாக தேர்தல் தயானந்த திசாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்ற தேர்தல் ஆட்சி அதிகாரத்திற்கான தேர்தலாக இருப்பதால், அதிகாரத்தை கைப்பற்ற அனைத்துக் கட்சிகளும் உயர்ந்த பட்சம் போட்டிப் போடுகின்றன. அதிகளவு வன்முறையில் ஈடுபடுகின்றன. இரண்டில் ஒன்று எனும் நிலையில் எதையும் செய்யத் துணிகின்றன. உள்ளூராட்சி முறையில் அதிகாரங்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாலும், ஏற்கெனவே ஒரு கட்சி அரசாங்கத்தை நடாத்திக் கொண்டிருப்பதாலும் இத்தேர்தலின் போது அதிகாரத்தைக் கைப்பற்ற தீவிரமாக போட்டியிடுவதும் வன்முறைகளில் ஈடுபடுவதும் குறிப்பாக எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு சாதகமானதாக அமைவதில்லை.

பொதுசன முன்னணியைப் பொறுத்த வரையில் அனுருத்த ரத்வத்த மற்றும் புத்திரர்களே நீதி விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் நிலையில் அது வன்முறைகளை மட்டுப்படுத்தித்தான் ஆக வேண்டியுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியும் தற்பொழுது ஒரு சமாதான ஜனநாயக அரசாக தன்னை சர்வதேச அரங்கில் நிரூபித்திட வேண்டிய தேவை இருப்பதால் தனது அரசாங்கத்தின் கீழ் நடைபெறும் முதலாவது தேர்தலில் வன்முறைத் தவிர்ப்பை கடைப்பிடிக்க எத்தனிக்கிறது.

இத்தேர்தல் ஒப்பீட்டளவில் வன்முறை குறைவான தேர்தலாக உள்ளது என்பது உண்மையானால், அதற்கான காரணம் பிரதான கட்சிகள் எதிர்கொண்டிருக்கும் புறச்சூழலே தவிரஅரசியல் களம் ஜனநாயகமாகி விட்டது என்பதல்ல.

# கணேசப்பாவின் சேட்டுக்குள் வெடிகுண்டு

கடந்த மார்ச் 3ம் திகதி ஞாயிறு மாலை வந்தாறுமூலை, களுவன்யேணியில் குடிமகன் ஒருவர் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி காயமடையக் காரணமாயிருந்த ராசிக்குழு உறுப்பினர் இன்னமும் கைது செய்யப்படவில்லை, கைக்குண்டை வீசியவர் இவரே என கண்கண்ட சாட்சியங்கள் கூறிய போதிலும் இவரைக் கைது செய்யாத படையினர் விடுதலைப் புலிகளே கைக்குண்டை வீசியதாக சரடு விட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை செய்தபோது சுவாரஸ்யமான பல தகவல்கள் வெளிவந்தன. கணேசப்பா என அழைக்கப்படும் களுவன்கேணியைச் சேர்ந்த மீனவர் ஒரு செல்வந்தர். சிறந்த மீனவர் என ஜனாதிபதி பரிசு பெற்ற இவரின் மீன்வாடியையும் உள்ளடக்கியே ராசிக் குழுவினர் முகாமமைத்துள்ளனர்.

கோப்ரல் மகேஷ் என அழைக்கப்படும் மாசிலாமணி யோகராசா ஆறுமுகத்தான் குடியி ருப்பைச் சேர்ந்தவர். இவரின் பொறுப்பிலேரயே கடற்கதை முகாம் இயங்கிவந்துள்ளது. இவர் கேட்கும் நேரமெல்லாம் இவருக்கு கணேசப்பா பயம் கொடுத்து வந்துள்ளார். அச்சம் காரணமாகவும், நமக்கேன் வீண்வம்பு என்ற எண்ணத்தினாலும், கணேசப்பா தொடர்ந்து பணத்தை வழங்கி வந்துள்ளார்.

ஆனால், போர் நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தம் எனபவை ஏற்பட்டபின் ராசிக் குழுவினருக்கு பணம் தர இவர் மறுத்துவிட்டார்.

இதற்கிடையில் மீன்வாடிகளில் முகாம் அமைந்துள்ளதால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவதாக மகஜரொன்று ஜனாதிபதி வரை சென்று விட்டது. இது கணேசப்பாவின் வேலையே என சந்தேகம் கொண்ட கோப்ரல் மகேஷ் தருணம் பார்த்துக் காத்திருந்தார்.

3ம் திகதி மாலை கடற்கரையில் கணேசப் பாவைக் கண்ட மகேஷ் பணம் தருமாறு கோரியிருக்கிறார். அவர் மறுக்கவே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு எதிராக பெட்டிசன் அனுப்பியது நீதானே யடா? எனக் கேட்ட மகேஷ் கையிலிருந்த கைக்குண்டின் கொழுவியை இழுத்து விட்டு குண்டை கணேசப்பாவின் சேர்ட்டுக்குள் வைத்து வெருட்டியிருக்கின்றார்

பின்னர் மீண்டும் கொழுவியை மாட்ட நினைத்து முடியாமல் போகவே குண்டை வீசியெறிந்திருக்கின்றார். இந்நிலையில் எதிரே நின்ற கணேசப்பாவின் உறவினர் வைரமுத்து சிவஞானம் (38வயது) காயங்களுக்க இலக்காகியுள்ளார்.

## வரவேற்பு

புரிந்துணர்வு ஒப்பந்தந்திற்கு அமைவாக விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் யாழ் நகரில் திறக்கப்படவுள்ளன. இதன் மூலம் தமது அரசியல் உடவடிக்கைகளை விரிவாக முன்னெடுக்க விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது. ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை பார்வையிட விடுதலைப் புலிகளின் ஒரு குழுவினர் படகுகள் மூலம் இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர். இவ் அலுவலங்களில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களே கடமை புரியவுள்ளனர். புலிகளின் செயற்பாடு யாழில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அரச அதிகாரிகள் முதல் கசிப்பு காச்சுவோர்வரை இச்சவச்சம் தொடர்கிறது. கலாசார சீரழிவுகள் பற்றி தொடர்ந்து கடும் தொனியான கருத்துக்களையே புலிகள் கூறி வருகின்றனர். இதேவேளை புலிகளை வரவேற்கும் முகமான சுவரொட்டிகளும் பதாகைகளும் யாழில் ஆங்காங்கே காணப்படுகின்றது

## உடைப்பு

மட்டக்களப்பு கிரான் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அன்னைபூபதியின் நினைவுப் பந்தல் பங்குனி 20ம் திகதியன்று படையினரின் அடாவடித்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. முன்பகல் 10.30 மணியளவில் அவ்விடத்திற்கு ட்ரக்டரில் வந்த இராணுவத்தினர் அலங்கரிக்கப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை வெட்டி எறிந்தனர். அவ்விடத்தில் நின்ற பொதுமக்களையும் மிரட்டி சென்றுள்ளனர். இதற்கான காரணகர்த்தாவாக தமிழ் குழு உறுப்பினறொவர் விளங்குகிறார். கும்புறுமுனை முகாமை சேர்ந்த படையினரே இச்சம்பவத்தில் தொடர்புபட்டதாக தெரிய வருகிறது. படையினரின் இவ் அடாவடித்தனங்களை கண்டித்து கண்டனப்பேரணியும் இடம்பெற்றுள்ளது. கண்டனப் பேரணிகள் வாழைச்சேனை புகையிரத நிலையத்திலிருந்தும் முறக்கொட்டாஞ்சேனையிலிருந்தும் ஆரம்பமாகி கிறான் சந்தியை வந்தடைந்தன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

## திறப்பு

பங்குனி 24ம் திகதியன்று யாழ் - கண்டி வீதி (ஏ9) திறக்கப்படலாமென எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்கான புலிகளின் ஆயத்த வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் சோதனை நிலையம் பளையில் அமைக்கப் பட்டுள்ளது. யாழ் நுழைவாசலின் இராணுவத்தினரின் தற்காலிக சோதனை நிலையம் முகமாலைப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. திறக்கப்படும் பட்சத்தில் நேரடியானதா இல்லை பரிமாறல் போக்குவரத்தா என முடிவெடுக்கப் படவில்லை. இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களினூடாக நீண்ட தரைப்போக்குவரத்து நடைபெறவுள்ளது. இதற்கு தயாராக தமது கட்டுப்பாட்டு பிரதேசத்திலுள்ள கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தை நவீனமயப்படுத்தியுள்ளனர். வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கையின் போது பிரதான வழங்கல் பாதையாக இருந்த (MSR)யாழ் - கண்டி வீதி மீண்டும் ஏ9 ஆகின்றது.



## வயிற்றெரிச்சல் பத்திரிகை!

"பாட்டெழுதிப் பெயர் வாங்கும் புலவர்கள் பலர் இருக்கிறார்கள். கேள்வி பட்டிருக்கிறோம். ஆனால் பிழை பிடித்துப் பெயர் வாங்கும் புலவரை இன்றைக்குத்தான் காண்கிறேன்."" என்று நக்கீரனைப் பார்த்து தருமி கேட்ட புகழ் பெற்ற வாசகம் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது என்று வாதித்த நக்கீரனை நோக்கி தருமி சொன்ன வாசகம் இது.

திருமலையில் நடை பெற்ற பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக 'தி ஐலன்ட்" பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி ஒன்று திடீரென தருமி சொன்ன வாசகத்தை எனக்கு ஞாபகப்படுத்திற்று.

எப்படியாவது எங்காவது பிழைபிடித்து ஆகவேண்டும் என்ற வயிற்றெரிச்சலுடன் திருமலையில் நடந்த பொங்கு தமிழ் எழுச்சி விழாவில் கலந்து கொண்ட பிக்கு ஒருவரின் வயிற்றெரிச்சலை செய்தியாக வெளியிட்டிருக்கிறது அது.

நக்கீரனுக்கு பெண்களின் கூந்தலில் இயற்கையான வாசனை வீசுகிறதா? இல்லையா? என்ற பாண்டிய மன்னனது கோமாளித்தனமான கேள்வி வயிற்றெரிச்சலைக் கிளப்பியிருந்ததோ என்னவோ, இந்தப் பிக்குவுக்கு பெரும் வயிற்றெரிச்சலை பொங்கு தமிழ் நிகழ்வு ஏற்படுத்தி விட்டிருந்தது. 50,000 க்கு மேற்பட்ட மக்கள் வெள்ளமாய் திரண்டிருந்ததைக் காண அவருக்குப் பொறுக்கவில்லை அங்கு திரண்டிருந்த மக்கள் 'தாயகக் கோட்பாட்டை" உயர்த்திப் பிடிக்கும் முழக்கங்களை முழங்கியது, பிரபாகரனின் உருவப்படம் பொறித்த இலட்சினைகளை பாடசாலை மாணவர்கள் தரித்திருந்தமை, எல்லாமே அவருக்கு பெரும் சினத்தை ஏற்படுத்திவிட்டிருந்தன. 'மக்களை கூட்டிவந்தார்கள், மாணவர்களைக் வற்புறுத்தி அழைத்து வந்தார்கள் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்தது". என்று அவர் கவலைப்பட்டதுடன், இப்படியான ஒரு சமாதானம் எமக்குத் தேவைதானா? என்றும் கேட்டிருக்கிறார் எமக்கு தேவை ஒரு தேசியக் கொடி, ஒரு நாடு, ஒரு தேசிய கீதத்துடனமைந்த சமாதானமே என்றும் அவர் கூறினாராம்!

பிக்குதான் சொல்லிவிட்டுப் போகட்டுமே என்று விட்டுவிடலாம். அவரை விட மோசமான வைத்தெரிச்சல் 'ஐலண்ட்"டுக்கு! அந்தப்பிக்குவின் புலம்பலை முன்பக்கத்துச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது அது.

சமாதான முயற்சி தொடங்கிய நாளிலிருந்து அதை எப்படியாவது முடக்கி விடவேண்டும் என்ற இனவாதக் காய்ச்சலுடன் செயற்பட்டு வரும் ஐலண்டின் இந்தச் செய்திக்கு அது கொடுத்திருந்த தலைப்பு இதுதான்.

"வற்புறுத்தலின் பேரில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வில் பிரபாவின் புகழ்பாடல்!""

வாழ்க ஐலண்ட்!

## நிம்மதிக்கு மருந்து !

பொலிஸ் படையை வைத்து உள்ளூராட்சி தேர்தல் நடாத்த முடியாது. இராணுவத்தையும் போடவேண்டும் பாதுகாப்பதற்கு என்று கேட்டார் ஜனாதிபதி சந்திரிகா. தமது கட்சிக்காரர்களுக்கு பாதுகாப்பு தர பொலிசை நம்ப முடியாது என்பது அவரது கருத்தாக இருந்தது.

பொலிஸ் படையே போதும் என்று ரணிலின் அமைச்சரவை மறுத்துவிட்டது. ஆனால் இராணுவத்தைப் போட்டிருந்தால் கூட சந்திரிகாவால் ஒன்றும் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அம்மையாரின் அத்தனகலை பிரதேசத்தை கூட ஐக்கிய தேசிய முன்னணிக்கு பறிகொடுத்து விட்டு நிற்கிறார் அவர்.

ஒரு வகையில் இன்றைய அரசியல் சதுரங்கத்தில் காய்கல் நகர்த்தப் பட்டுவரும் வேகத்தைப் பார்கையில், ஜனாதிபதியைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருக்கிறது.

எல்லா அதிகாரங்களும் இருந்தும் கையாலாகாத் தனத்தை அனுபவிப்பதைப் போன்ற துயரம் எவ்வளவு ஆழமானது என்பதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

அம்மாவுக்கு இன்றுள்ள ஒரேயொரு நிம்மதியான செய்தியை ஒரே ஒருவரால்தான் கொடுக்க முடியும்.

ஆம், அந்தச் செய்தியை புலிகளின் தலைவர் பிரபாகரனால் தான் கொடுக்க முடியும்.

அது என்ன அந்த நிம்மதி தரும் செய்தி என்று கேட்கிறீர்களா?

செய்தி இதுதான்

"ரணிலை நாங்கள் நம்பத் தயாரில்லை. உடன் படிக்கையை முறித்துக் கொள்கிறோம். மீண்டும் யுத்தத்தில் இறங்குவதை தவிர எமக்கு வேறு வழியில்லை.

வாழ்க தமிழீழம்!"

## பாவம் கடவுள் !

"உன் கடவுள் எங்கே இருக்கிறார் காட்டு பார்ப்போம்"" என்று கேட்டான் இரணியன், மகன் பிரகலாதனிடம்.

"கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்"" என்று சொன்னாள் பிரகலாதன்.

"காட்டு உன் கடவுளை இந்தத் தூணில்" என்று இரணியன் அருகிலிருந்த தூணை உதைத்துத் தகர்க்க அதிலிருந்து கடவுள் தோன்றியதாக ஒரு கதை உண்டு.

கடவுள் தூணிலும் துரும்பிலும் இருக்கிறாரோ இல்லையோ எல்லாத் தெருமூலையிலும் முளைத்து விடுகிறார்.

எங்கெல்லாம் ஒரு சிறிய மூலை பாதை ஓரத்தில் ஒதுக்கமாக இருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு கடவுள் சிலை முளைத்து விடுகிறது.

இந்தச் சிலை முளைப்பிற்கு காரணம் அபரிமிதமான கடவுள் பக்தி வளர்ந்து விட்டது தான் என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு ஏமாற்றம்தான்.

மற்ற மதத்தவர்கள் வந்து தமது கடவுளர் சிலையை வைத்து விடுவார்கள் என்ற கவலை முதல், வீடுவாசல் அற்றவர்கள் குடிசை போட்டு விடுவார்கள் என்பது வரையான 'சமூக அக்கறை"யே இத்தகைய கடவுள் சிலைகள் முழைப்பதற்கு காரணமாகி விடுகின்றன.

இது கொழும்புக்கும் கண்டிக்கும் மட்டுமான ஒரு தனிப்பட்ட விடயம் அல்ல. இலங்கை முழுவதற்குமான, இன மத வேறுபாடின்றி நிலவும் ஒரு விடயம்.

மடுவில் இரவோடிரவாக முளைத்த திருவுருவத்தின் கதையும் இதுதான்!

பாவம் கடவுள், இந்த நாட்டில் தனக்கு ஏற்பட்டு வரும் 'மவுசைப்" பார்த்தால் இந்த உலகை விட்டே ஓடிவிடலாம் என்று அவர் நினைத்தாலும் நினைக்கக் கூடும்.

- தவா

அமைதிப்படையென்ற பெயரில் இலங்கையில் காலடிவைத்து அட்டூழியங்கள் பல புரிந்த இந்திய படையினரை அம்பலப்படுத்தியோரில் ஒருவரே அன்னை பூபதி.

அஹிம்சைத் தத்துவத்தின் அடிப்படையிலேயே சுதந்திரம் பெற்றோம் எனப் பெருமை பேசும் இந்திய வல்லாதிக்கத்தின் முகத்திரை கிழிக்கப்பட்டு அவலட்சணமான உண்மை முகத்தை தெரியச் செய்தவர் அவர்.

அவரின் நினைவு தினம் மார்ச் 19 முதல் ஏப்ரல் 19 வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவரின் 'ஈகைச்சுடர்' சமாதி அமைந்துள்ள மட்டக்களப்பு நாவலடியில் சமாதியை உள்ளடக்கி நினைவு மண்டபமும் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டு வருகின்றது.

நாவலடி இளைஞர் கழகத்தால், உரிய முறைப்படி சகல அனுமதியும் பெறப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த நினைவு மண்டப நிர்மாணப் பணிகள் இராணுவத்தினருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனை எவ்வழியிலாவது தடுத்து நிறுத்திவிட முயற்சி செய்து வரும் படையினர் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

மேற்படி நிர்மாணப்பணிகள் எவ்வித சலசலப்பும் இன்றி மிக எளிமையான முறையிலேயே நடைபெற்று வந்தன. ஆனால் படைப்புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பாக தகவல் தெரிவித்ததும் மாவட்ட கட்டளையதிகாரியின் பணிப்புரையின் பேரில் மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேணல் எஸ்.எல்.குணசேகர கடந்த மார்ச் 14ம் திகதி ஸ்தலத்துக்கு விரைந்துள்ளார்.

முன்னதாக மோட்டார் சைக்கிள் குழுவினர் எனப்படும் விசேட படைப்பிரிவினர் நாவலடிக்குச் சென்று இளைஞர் கழகத் தலைவர் கண்ணனின் வீட்டுக்குச் சென்று அவரை அச்சுறுத்தும் பாணியில் அவரது வீட்டைச் சுற்றி மோட்டார் சைக்கிளில் பலதடவை வட்டமடித்துள்ளனர்.

வீட்டிலிருந்த கண்ணனின் சகோதரியை அச்சுறுத்திய இவர்கள் கண்ணனின் இருப்பிடம் தொடர்பாக விசாரித்துள்ளனர். தான் தேடப்படுவதாக அறிந்த கண்ணன் நேரடியாக நிர்மாணப் பணிகள் நடைபெறும் இடத்துக்குச் சென்றுள்ளார். அங்கு கேணல் குணசேகரவைச் சந்தித்த போது அவர் கண்ணனை 'வீட்டுக்குச் சென்று ஒரு தடவை பார்த்துவிட்டு வருமாறு' கேட்டுள்ளார்.

இதன்நோக்கம் கண்ணனை அச்சுறுத்தி மனத்தைரியத்தைக் குறைக்கும் ஓர் நடவடிக்கையே தவிர வேறில்லை. வீடு சென்று வந்த கண்ணனிடம், அன்னை பூபதியின் நினைவு மண்டப நிர்மாணத்தை நிறுத்துமாறு கேணல் குணசேகரா கேட்டுக் கொண்டார். அன்னை பூபதி ஒரு புலியெனவும், அவருக்கு நினைவு மண்டபம் அமைப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த கண்ணன் அன்னை பூபதி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் அல்ல எனவும், அவர் ஒரு சாதாரண பிரஜை எனவும் தெரிவித்தார்.

எனினும் இக்கருத்தை படையினர் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை இந்த நிர்மாணப்பணிக்கு பொதுமக்களிடமிருந்து பலவந்தமாகப் பணம் அறவிடப்பட்டுள்ளதாகத் தங்களுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கேணல், இந்த நிர்மாணப்பணிக்கு உதவியோரின் பெயர் விபரங்களைத் தருமாறு கோரினார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த கண்ணன் நிர்மாணப்பணிகள் யாவும் முடிவுற்றதும், அவற்றை ஒப்படைப்பதாகத் தெரிவித்தார்.

மறுபுறம், மனிதவலு முகவர் நிலையத்துடனும், படையினர் மோதலில் ஈடுபட்டுள்ளனர். நாவலடி இளைஞர் கழகத்தினர் மனிதவலு முகவர் நிலையத்தை அணுகி, தமது 'சிறுவர் பூங்கா' நிர்மாணத்துக்கு மனிதவலு முகவர் நிலைய ஊழியர்களை வழங்கி உதவுமாறு கோரினார். இந்த நிலையத்துக்குப் பொறுப்பான பிரிகேடியர் அமுனுகம இதற்கு இணக்கம் தெரிவித்து தமது ஊழியர்களையும் வழங்கியுள்ளார்.

'விடுதலைப் புலி' அன்னை பூபதிக்கு நினைவு மண்டபம் அமைக்க மனிதவலு முகவர் நிலையம் உதவுவதா எனக் கொதித்தெழுந்த இராணுவத்தினர், இதற்கு உதவவேண்டாம் என பிரிகேடியர் அமுனுகமவைக் கோரியுள்ளனர். இதற்கு மறுத்த பிரிகேடியர், தான் தொடர்ந்தும் 'சிறுவர் பூங்கா' நிர்மாணத்துக்கு உதவப் போவதாகத் தெரிவித்துள்ளார். இதனால் தற்போது இராணுவத்தினர் பிரிகேடியர் அமுனுகமவையும் ஒரு 'புலி'யாகவே கருதத் தொடங்கியுள்ளனர்.

தமது முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தனைப் போல மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் எல்.ஏ.ஆர். அன்ரனிஸ் இந்த நிர்மாணம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.கதிர்காமநாதன், மாநகர ஆணையாளர் ச.நவநீதன் ஆகியோரை அழைத்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிர்மாணம் சட்ட விதிகளுக்குட்பட்டே நடப்பதாகத் தெரிவித்த அதிகாரிகள், அது உண்மையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவதாக இருந்தால் அது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவிடமே முறையிட வேண்டும். தங்களிடம் அல்ல எனத் தெரிவித்துள்ளனர்.

இது நாள் வரை தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில் அதிகாரிகளையும், பொதுமக்களையும் உருட்டி மிரட்டிக் காரியமாற்றி வந்த படையினர் தமது அதிகாரம் இனிமேலும் எடுபடாத நிலை தோன்றியுள்ளதை முதன் முதலாக உணர்ந்துள்ளனர்.

அதேவேளை தேவையற்ற ஒரு விடயத்தில் மூக்கை நுழைத்ததன் மூலம் அன்னை பூபதிக்கும், நினைவு மண்டபத்துக்கும் மேலதிக விளம்பரத்தை தேடித் தந்துமுள்ளனர்.

அதற்காக படையினருக்கு நாம் நன்றி சொல்லலாம் அல்லவா?

# அன்னை பூபதி நினைவுப் பூங்கா

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுகிறதா?



மட்டக்களப்பு நாவலடியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அன்னைபூபதி நினைவுப் பூங்கா

### யார் இந்த அன்னை பூபதி?



*1932 நவம்பர் 3ம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் கிரானில் சாதாரண குடும்பத்தில் பிறந்து நாவற்குடா எனுமிடத்தில் கணபதிப்பிள்ளை என்பவரைக் கரம் பிடித்து சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்தவர் தான் பூபதி அவர்கள்.*

*தியாகராஜா, நவரெத்தினம் எனத் தன் இரு பிள்ளைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆயுத வெறிக்குப் பலிகொடுத்திருந்த பூபதி இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் அன்னையர் முன்னணிக்கு ஊடாக பொது வாழ்வில் பிரவேசித்தார்.*

*இந்தியப் படையின் அட்டூழியங்களை எதிர்த்து தமிழ் மக்கள் போர்க் கொடி உயர்த்திய போது "இந்தியப் படை உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த வேண்டும்" ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து அன்னையர் முன்னணி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தது.*

*முதலில் சுழற்சி முறையில் அடையாள உண்ணாவிரதம் மட்டக்களப்பு — ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் ஆரம்பமானது. இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நயமாகப் பேசியும் பயமுறுத்தியும் முடிவுக்குக் கொண்டுவர இந்தியப் படை பகீரதப் பிரயத்தனம் செய்தது. தொடர்ச்சியான ஊரடங்கை அமுல்படுத்தியதுடன், மாமாங்கேஸ்வர் ஆலய முன்றலில் படைமுகாமும் அமைக்கப்பட்டது.*

*எந்த முயற்சியும் வெற்றியளிக்காத நிலையில் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதென அன்னையர் முன்னணி தீர்மானித்தது. யார் உண்ணாவிரதம் இருப்பது என்பதிலேற்பட்ட போட்டி காரணமாக திருவுளச் சீட்டு மூலம் தெரிவு இடம் பெற்றது.*

*இதன் போது டேவிட் அன்னம்மா தெரிவாகி 1988 பெப்ரவரி 16 இல் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இந்த உண்ணாவிரதம் காரணமாக ஏற்பட்ட எழுச்சி கண்டு பயந்த இந்தியப்படை கட்டளை அதிகாரி பிரிகேடியர் தார் தமிழ் இயக்கங்களின் உதவியுடன் டேவிட் அன்னம்மாவை பேச்சுவார்த்தைக்கென அழைத்து மட்டக்களப்பு வாடிவீட்டு முகாமில் சிறைப்படுத்தினார்.*

*அதேநேரம் தமது தாயாரின் சுயவிருப்பு இன்றி பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் என அவரது பிள்ளைகளை மிரட்டி கடிதம் பெறப்பட்டது. இதனால் டேவிட் அன்னம்மா தனது உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டியேற்பட்டது.*

*இந்நிலையில் பூபதி சாகும்வரை உண்ணாவிரதத்தில் இறங்க முன்வந்தார்.*

*"எனது சுயவிருப்பின் பேரில் கோரிக்கைகள் நிறைவேறும் வரை சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடுகிறேன். நான் நினைவிழந்து போகின்ற நிலையிலும் எனது கணவனோ பிள்ளைகளோ உறவினர்களோ என்னைக் காப்பாற்றவோ தூக்கிச் செல்லவோ முயலக் கூடாது" என மரண சாசனம் எழுதி வைத்து விட்டு மார்ச் 19ம் திகதி முற்பகல் 10.45 அளவில் உண்ணா நோன்பை ஆரம்பித்தார். இந்திய அரசின் மனச் சாட்சியை தட்டியெழுப்ப முடியாத நிலையில் ஏப்ரல் 19ம் திகதி காலை 8.45 அளவில் வீரகாவியமானார்.*

0

# தமிழர்களைப் பெருமிதப்படுத்திய திருமலை பொங்குதமிழ் எழுச்சி விழா !

- விவேகி

திருகோணமலை மாவட்டத் தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு எழுச்சி கொண்ட தினம் தான் மார்ச் 19. பல்கலைக்கழக மாணவர்களாலும் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட "பொங்குதமிழ்" நிகழ்வு திருகோணமலை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்திருந்தது.

இதுவரை காலமும் திருகோணமலைத் தமிழர்கள் வரலாற்றில் ஒரு சிறு தொகையினர் செயற்பாட்டாளர்களாகவும் மிகப் பெரும் தொகையினர் பார்வையாளர்களாகவும் தான் நிகழ்ச்சிகள் அமைந்து வந்துள்ளன. செயற்பாட்டாளர்கள் என்போர் எல்லாவகையான செயற்பாடுகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றவர்களாகவும், பார்வையாளர்கள் என நிற்போர், ஆடையில் அழுக்குப்படாத உத்தியோகத்தர்களாகவும், தம்மை புத்திஜீவிகளாகவும் மேல்தட்டு வர்க்கமாகவும் கற்பனை பண்ணிக் கொண்டு பெருமிதத்துடன் திரிபவர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். "இதுகளுக்குள் நாங்கள் போய் சிக்கிக் கொள்ளக் கூடாது" என்று வாய்விட்டுச் சொல்பவர்களாகவும் இவர்கள் இருந்து வந்தனர்.

ஆனால் பொங்கு தமிழ் நிகழ்வில் அவ்வாறான வேறுபாடு, உயர்வு, தாழ்வு எவையும் காணப்படவில்லை. அமைச்சர் முதல் ஆண்டிவரை, மதகுரு தொடக்கம் சாதாரணர் வரை ஆர்வத்துடனும் சமஉரிமையுடனும் கலந்து கொண்டனர். ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பல திசைகளிலிருந்தும் பதாதைகள் சகிதம் கோஷங்களை எழுப்பியவாறு "இன்னிய" அணி முன்னேவர முற்றவெளி மைதானத்தை நோக்கி வந்தனர்.

நகரின் தூரக் கிராமமான மூதூரை அண்டிய கிராமப்புற மக்கள் முதல் நாளே நகரிற்கு வந்து உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியிருந்து தமது பங்களிப்பை ஆர்வத்துடன் செய்தனர். வடபுலக் கிராம மக்களும், மேற்புலக் கிராம ம்க்களும் அதிகாலையிலேயே ஊர்வலம் ஆரம்பமாகும் மையங்களில் வந்து குவியத் தொடங்கினர்.

ஊர்வலம் ஆரம்ப மையங்களிலும் நகரின் பிரதான சந்திகளிலும் பல அடி உயரமான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் "கட்அவுட்"களும் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. நகரின் வீதிகள் சிவப்பு, மஞ்சள் நிறத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.




நான்கு மையங்களிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்களில் "இன்னிய" அணி, மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் என்ற பிரிவுகளாக காலை எட்டரை மணிக்கு ஆரம்பித்து சுமார் பத்து மணியளவில் மைதானத்தை அடைந்தனர்.

ஊர்வலத்தில் பங்குபற்றியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப் படத்தைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். அத்தோடு பெரும்பாலானோர் பிரபாகரனின் உருவப்படம் உள்ள "பட்ஜ்"களையும் அணிந்திருந்தனர்.

ஊர்வலத்தின் முன்னணியில் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கலந்து கொண்டனர். மாவை சேனாதிராஜா கையில் கட்டுடனும், சிவாஜிலிங்கம் ஊன்றுகோலுடனும் ஊர்வலத்தில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

இரண்டு நிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம் பெற்றது. ஈகைச் சுடரை மாவீரர் சாள்ஸ் அன்ரனியின் தாயார் ஏற்றிவைத்தார்.

அதன் பின்னர் பேச்சாளர்களின் உரைகள் இடம் பெற்றன. தீபன்ராஜ் தலைமை உரையை நிகழ்த்தினார். பிரசாந்த் விளக்கவுரை ஆற்றினார். "புலிகள் மீதான தடை அகற்றப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கான தீர்வு அணுகப்பட வேண்டும்" என்பவையே பேச்சின் பிரதான சாரமாக இருந்தது.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திர சேகரன் சிறப்புரை ஆற்றினார். வடக்கு கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் சி.தண்டாயுதபாணி ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், இரா. சம்பந்தர் உட்படப் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சிப் பிரமுகர்களும் உரையாற்றினர்.

இடையிடையே எழுச்சி கீதங்களும் இசைக்கப்பட்டன. இக்கீதங்கள் மக்கள் மனதை ஆகர்ஷிப்பவையாக அமைந்திருந்தன.

சரியாகப் பன்னிரண்டரை மணிக்கு பொங்கு தமிழ் பிரகடனம் செய்யப்பட்டது. ஒரு கையை உயர்த்தியபடியே மேடையில் நின்று ஒருவர் பிரகடன வாசகங்களைக் கூற மக்கள் அதைத் தொடர்ந்து தாமும் கூறிப் பிரகடனம் செய்தனர். பிரகடனத்தையடுத்து மக்கள் இரு கைகளையும் உயர்த்தி நிமிர்ந்து நின்றபடி எழுச்சி கீதத்தை இசைத்ததும் பொங்கு தமிழ் நிகழ்வு நிறைவேறியது.

இலவசப் போக்குவரத்து வசதிகளும் உணவு ஒழுங்குகளும் செய்யப் பட்டிருந்தமை தூர இடத்து மக்களுக்கு அனுகூலமாக அமைந்திருந்தது. தாக சாந்தி வசதிகளும் தாராளமாகச் செய்யப்பட்டிருந்தன. ஊர்வல அமைப்புகள் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தமை, பிற இனத்தவர்களைப் புண்படுத்தாத சிறப்புக்களாகத் தென்பட்டன.

பொலிஸார் நிராயுத பாணிகளாக கடமையில் ஈடுபட்டிருந்தனர். ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

சில இனவாதிகள் குழப்பத்தை உருவாக்க முனைந்த போதிலும் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தனின் தலையீட்டாலும் பொலிசாரின் சாதுரியமான நடவடிக்கைகளாலும் தவிர்க்கப்பட்டன. அபயபுரப் பகுதிக்கு அண்மித்ததாகவுள்ள சுற்று வட்டாரத்தில் காணப்பட்ட பொங்கு தமிழ் அலங்காரங்களுக்கு மேலாக இனவாதக் கொடிகளைப் பறக்கவிட இனவாத சக்திகள் முயன்றவேளை தமிழ் சிங்கள இளைஞர்களிடையே முறுகல் நிலை தோன்றிய போது பொலிசார் தலையிட்டு இனவாதிகளை அப்புறப்படுத்தினர்.

மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவத்தினர் கையாலாகாதவர்கள் என்று குத்திக் காட்டியும் இராணுவ உடை, சப்பாத்துகள் எரிக்கும் நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிசார் தீவிரமாகச் செயற்பட்டு இனவாதிகளின் திட்டத்தை முறியடித்தனர்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் திருகோணலைத்தள ஊழியர்கள் "பொங்குதமிழ்" நிகழ்வுக்குச் சென்றதையடுத்து அங்கு பணியாற்றிய ஏழே ஏழு சிங்கள ஊழியர்கள் "தமிழர்கள் பொங்குதமிழ் நிகழ்வுக்குச் சென்று விட்டார்கள். நாங்கள் ஆபத்திலிருக்கிறோம்" என்ற தொலைநகல் செய்தி யொன்றை கொழும்பு தலைமைப்பீடத்துக்கு அனுப்பி வைத்து விட்டு வீட்டுக்குச் சென்ற சம்பவமும் இடம் பெற்றிருக்கிறது.

எவ்வாறாயினும் மொத்தத்தில் இது தமிழர்கள் தலை நிமிர்ந்து பெருமிதம் அடைந்த ஒரு எழுச்சி நிகழ்வு என்பதில் சந்தேகமில்லை.

# பொலிஸ் வேண்டாம் இராணுவமே வேண்டும் என்கின்றார் ஜனாதிபதி !

- விவேகி

உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்பதற்கு பொலிசாருக்கு உள்ள 'ஆற்றல்' தொடர்பாக தனது கட்சிக்கும், ஜனாதிபதி என்ற முறையில் தனக்கும் நம்பிக்கை கிடையாது என்று கூறிய ஜனாதிபதி, பொலிசுக்குப் பதிலாக இராணுவத்தை இந்தப் பணியை ஆற்றப் பயன்படுத்துமாறு உள்ளக அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கோரியிருந்தார்.

தேர்தல் நடவடிக்கைகளை கையாள்வதில் பொலிஸ் செயற்படும் விதம் நம்பகம் அற்றது. பல பொதுசன ஐக்கிய முன்னணி 'தொண்டர்கள்' ஐக்கிய தேசிய முன்னணி 'குண்டர்களினால்' தாக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு பொலிசாரின் ஒத்துழைப்புக் கிடைத்திருக்கின்றது என்று தனக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்திருப்பதாக அவர் அமைச்சருக்குத் தெரிவித்திருந்தார்.

ஒரு பக்கத்தில் ஜனாதிபதியின் இந்த முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டில் ஏதாவது உண்மை இருக்கிறதா? என்று ஆராய்வது மிகவும் முக்கியம் என்பதை ஒத்துக் கொள்ளும் அதேவேளை இன்னொரு கேள்வி எழுகிறது.

முப்படைகளுக்கும் இன்னும் பொறுப்பாக இருக்கும் ஜனாதிபதி, தனது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள படைகளுக்கு மட்டுமல்ல, பொலிஸ் படையும் கூட அவரது அதிகாரக் கட்டுப்பாட்டுக்கு கீழ்ப்பட்டுத் தான் இருக்கிறது. அப்படியிருக்க, போதிய ஆதாரங்கள் கிடைத்த பின்னும், அந்த குறிப்பிட்ட பொலிசாரை விசாரணைக்கு உட்படுத்தும் செயலில் ஏன் அவரால் இறங்க முடியவில்லை?

போதிய தகவல்கள் கிடைத்த பின்பும், தனது அதிகார கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு பிரிவில் சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை நடவடிக்கையை மேற் கொள்ளாமல், தனக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்! ஜனாதிபதி குறைந்தபட்சம் தனக்கு கிடைத்துள்ள தகவல்களை வெளியிடுவதன் மூலமாகவே நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட முடியும்

ஆனால் அவர் அப்படிச் செய்ய விரும்பவில்லை.

பதிலாக அமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அத்துடன் தேர்தல் கண்காணிப்புக்கு இராணுவத்தைப் பயன்படுத்தக் கோரியுள்ளார்.

ஆனால், ஜனாதிபதியின் இந்தத் தகவல்கள் உண்மையல்ல. இராணுவத்தை தேர்தல் கடமைக்கு அழைக்க வேண்டிய அளவுக்கு நிலமை மோச-மாக இல்லை என்று அமைச்சர் பிறகு பதிலளித்திருக்கிறார்!

இதற்குப் பிறகும் ஜனாதிபதி அதே கோரிக்கையை விடுத்ததுடன், மறுத்தால் தான் ஜனாதிபதி என்ற அடிப்படையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இராணுவத்தை அழைக்க வேண்டிவரும் என மிரட்டியும் பார்த்தார். அதற்கும் அமைச்சர் அசையவில்லை.

இது ஜனாதிபதிக்கு உண்மையில் நேர்மையான தேர்தலை நடாத்தும் நல்லெண்ணம் இருந்து, அதற்கு அவசியமான பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு விடப்பட்ட ஒரு கோரிக்கையாகத் தெரியவில்லை.

மாறாக, தேர்தலில் மோசடிகளையும் வன்முறையையும் தாம் (தமது கட்சி)க்கு சார்பான விதத்தில் செயற்படுத்த வசதியாகவே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தி-ருப்பதாக சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

ஏனென்றால், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த நாள் முதலாக பொலிசாரினால் செய்யப்பட்டு வரும் விசாரணைகள், ஒவ்வொன்றும் ஜனாதிபதியின் முன்னைய அரசாங்கத்தின் பல செயற்பாடுகளை அம்பலமாக்கி வருகின்றன. குமார் பொன்னம்பலம் கொலை முதல் பிந்துனுவேவ, மடவலை படுகொலைகள் வரையான பல சம்பவங்கள் ஜனாதிபதிக்கும் அவரது கட்சிக்கும் பெரும் அரசியற் சவால்களாக வளர்ந்து வருகின்றன.

இதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என்ன செய்வது?

அதிகாரத்தை கையில் வைத்திருப்பது மட்டும் போதாது. வேண்டிய போது அதை பயன்படுத்தவும் வேண்டும். இல்லாவிட்டால் யாராவது அதைச் செய்வார்கள். பொறுப்பை மட்டும் அதிகாரத்தை வைத்திருப்பவர் எடுத்துக் கொள்ள வேண்டி வரும்.

அதிகாரம் பிழையான முறையில் பயன்படுத்தப்படுவது துஷ்பிரயோகம் என்றால் அதை பயன்படுத்தாமல் இருப்பது அதைவிட மோசமானது. சந்திரிகா இப்போது இரண்டாவதைச் செய்ததன் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அதிலிருந்து மீள அவர் முதலாவதில் இறங்கவும் முயல்கிறார். இந்த முயற்சி அவரது அரசியல் வாழ்வின் வாயில் மண்ணைப் போடவே உதவப் போகிறது.

அவருக்கு இது எங்கே புரியப் போகிறது?

## விடுபட்டுப் போய்விடக் கூடாத சில விடயங்கள் -9

*- சி. சகாதேவன் -*

# புலியைப் பூனையாக்கும் முயற்சி

## அமெரிக்க எச்சரிப்புக்களின் ஓர் பின்புலம் நோக்கங்கள் பற்றிய "ஆராய்வு" (ஆராய்ச்சி அல்ல)

இலங்கையின் சமாதானத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் கைச்சாத்திட்டதன் பின்னர், இலங்கையில் தமிழ் நிலை சாரா நலன் வட்டங்களிலிருந்து பல பலத்த சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன. மக்கள் விடுதலை முன்னணி முதல் றவூப் ஹக்கீம் வரை அக்குரல் பல நிலைப்பட்டதாக உள்ளது.


நன்கு கட்டமைக்கப்பட்ட மேனாட்டுச் "சிம்ஃபனி" இசையமைப்புக்கள் சிலவற்றிற் காணப்படுவது போன்று, ஒரு தனி ஒலி (வாத்தியம் - பெரும்பாலும் வயலின்) அந்தக் கூட்டொலிகளை ஊடறுத்து மேற்கிளம்பி நின்றொலிக்கத் தொடங்கும். அதன் வருகையில், மற்றைய வாத்தியங்களின் ஒலி, மந்த நிலைப்பட்டு விடும்.

நமது 'சிம்ஃபனி'யில் அந்தப் பீறிவந்த வயலின் ஒலி, அமெரிக்கத் தூதுவருடையது. அவர் புலிகளை, சற்றும் எதிர்பாராத வகையிலே சாடியுள்ளார். குழந்தைப் போராளிகள், நிதிப்பறிப்பு, குறிப்பாக முஸ்லிம்களிடம் அதைச் செய்வது பற்றிய பூடகமான சுட்டுகை, சர்வதேச ஒதுக்கற்பாட்டு எச்சரிக்கை என அமெரிக்கத் தூதுவர் விளாசியுள்ளார்.

சொல்லி வைத்தாற் போலப் பாதுகாப்பு அமைச்சர், புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறவில்லை என்றும், அன்ரன் பாலசிங்கம் அமெரிக்கக் குற்றச்சாட்டுக்களை மறுதலித்தும், அறிக்கைகள் வெளியிட்டனர். எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல் அமெரிக்கப் பிரதி அமைச்சர் புலிகளின் பதிற்குறி பற்றிய தன் திருப்தியைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திடீர் "மழை"யின் பின் வந்த ''தூவானம்" இன்னும் ஓயவில்லை. உண்மையில் ஓய நியாயமுமில்லை.

அமெரிக்கத் தூதுவரின் இக்கூற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அது அமெரிக்காவின் நிலைப்பாட்டிலும் பார்க்க, அமெரிக்காவின் பலத்தையே காட்டுகிறது. கிராமத்தில் பாடசாலைத் தலைமை ஆசிரியர், "என்ன. அந்த வகுப்பிலே சத்தம்" என்று அதிகாரத்துடன் கேட்பது போல இருக்கிறது.



அமெரிக்கா சொன்னதைக் கண்டித்தவர்கள் பலர். ஆனால் எதற்காக அப்படிச் செய்தது என்பது பற்றி அதிகம் பேசவில்லை.

அதிகம் ஆலோசிக்கப்படாத அந்த விடயம் பற்றிச் சிறிது யோசிப்பது நல்லது.

அமெரிக்காவின் இந்தக் கூற்றுக்கு இரண்டு பின்புலம் உண்டு.

ஒன்று - இலங்கை நிலைப்பட்டது.

மற்றது - தென்னாசியா (மேற்காசியா) நிலைப்பட்டது.

முதலாவதைப் பார்ப்போம். அது பற்றிச் சிந்திக்கும் பொழுது, இலங்கையில் தமிழ்த் தேசிய வட்டத்துக்கு வெளியே நடப்பது பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும்.

அவற்றை வரிசைப்படுத்தலாம்.

1) ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கு நிறைய (அதிகம்) கொடுத்து விடுவாரோ என்ற சிங்களப் பயம் (இதில் சமாதான விரும்பிகளும் வருவர்)

2) பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் கொங்கிரஸ் சேர்க்கப் படாதது பற்றி ரவூப் ஹக்கீமின் ஒளிக்கப்படாத மனக்குறைகள்.

3) கிழக்கிலங்கையில் நடைபெறுவன பற்றிய சில முறைப்பாடுகள்.

4) புலி விரோதத்தையே தமது ஒரேயொரு அரசியற் செயற்படாகக் கொண்டுள்ள தமிழர்கள், தமிழ் நிறுவனங்கள் (என்.ஜி.ஓ. க்கள்).

நான்காவது மிக முக்கியம் ஏனெனில் அமெரிக்கத் தூதுவரின் எச்சரிக்கைக்குச் சமாந்தரமாக சர்வதேச மன்னிப்புச் சபை பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் "குழந்தைகளின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டமை.

இவற்றுள் முதலாவது முக்கியமானது. சமாதான முயற்சிகள் பற்றிய படையினர் நிலைப்பாடு பற்றிய தெளிவு இன்னும் இல்லை. ரணில் படையை விஸ்தரிக்க, வளப்படுத்த அமெரிக்க உதவியைக் கோரியுள்ளார் என்ற உண்மையை மறந்து விடக்கூடாது.

ஜனாதிபதி(னி)யின் நிலைப்பாட்டின் பின்புலத்திலும், உள்ளூராட்சித் தேர்தலின் பின்புலத்திலும், ரணிலின் கையைப் பலப்படுத்த வேண்டிய ஒரு தேவையுள்ளது. அந்தத் தேவையை அவரே கூறியிருக்கலாம்.

அமெரிக்கா முற்றுமுழுதாக நமது பக்கமென்று சிங்கள மக்களுக்கு ஒரு உத்தரவாதம் தேவைப்படுகின்றது.

ரணில் சார்ந்த இந்தச் சந்தேகங்களுக்கான தடயம் இல்லாமலும் இல்லை. ஏனெனில் சமாதான முயற்சி பற்றி யு.என்.பி.ப் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவோ, காமினி திசாநாயக்கவினதும், பிரேமதாசாவினதும் மகன்மாரோ இன்னும் ஒன்றும் சொல்லவில்லை.

அமெரிக்கக் குரலின் பின்னர் சிங்கள உரிமையினதும், மக்கள் விடுதலை முன்னணியினரதும் ஸ்தாயி சற்றுக் கீழிறங்கி விட்டது.

ஹக்கீமின் பதிற்குறி (response) யிலும் ஒரு நியாயம் இருக்கிறது. இந்த நேரம் பேசாவிட்டால், எந்த நேரமும் பேசமுடியாது போய் விடலாம் என்ற பயம் அவருக்கு. (அவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்றாலும் கல்முனைக்காரர் அல்லவே. அத்துடன் கண்டியை விட்டுக் கல்முனைக்கு வரவும் தவறி விட்டார்)

அமெரிக்காவின் இந்த "உள்ளீடு" அவரை எத்தனைச் சந்தோஷப்படுத்தியுள்ளது என்பது பத்திரிகைகள் மூலம் தெரிய வந்தது. (துரதிஷ்டவசமாக அவர் மறந்தது அமெரிக்காவின் இந்தப் போக்கு ஆப்கானிஸ்தானிலும், மேற்கு ஆசியாவிலும் இஸ்லாத்துக்கு எதிராகத் தொழிற்படுகிறது என்பதை)

எப்படியோ, அமெரிக்காவின் இந்தக் குரல் கொடுப்பு ரணிலுக்குப் பலவகையில் உதவியுள்ளது.

(ரணிலையும் நாங்கள் குறைத்து மதிப்பிடக்கூடாது. அவர் ஜே.ஆரின் வாரிசு. பிரேமதாசவின் பிரதமர்.)

இதற்குமேல் முக்கியமான ஒரு விடயம் உண்டு. அது தான் தென்னாசியாவில் இன்று பயங்கரவாதத்தைக் கூட்டுக்குள் வைத்திருத்தல்.

சரியோ, பிழையோ, இன்று தென்னாசியாவின் மிகுந்த பலம் வாய்ந்த தீவிரவாதக்குழு விடுதலைப் புலிகளே. உலகத் தீவிரவாத எதிர்ப்புக்களுக்கு அவர்கள் வழி காட்டிய பல போதனைகள் உள்ளன.

ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தான் எல்லையிலும் தீவிரவாதக் குழுக்கள் பல தொழிற்படும் இந்தச் சூழலில், விடுதலைப் புலிகளை இலங்கைக்குள்ளேயே வைத்திருப்பது. அதுவும் மிகுந்த கவனத்தோடு இருக்கும்படி வைத்திருப்பது புஷ்ஷின் இன்றைய அரசியல் தேவைகளில் ஒன்று.

அமெரிக்காவின் இந்தச் "செருமலு"க்குள் அந்த அர்த்தமும் உள்ளது.

இராக்காவற்காரன், தன் காவற் பிரதேசம் பிழையற இருக்கிறதா என்பதற்கு இருந்தால் இருந்தாற்போல் போடும் பாரா உஷார் சத்தம தான் இது.

இப்படிச் சத்தம் போடும் உரிமை உண்டோ, இல்லையோ அதிகாரம் இருக்கிறது.

அதுவும் இந்தியா தன் குளத்துக்குள் தானே முக்குளித்துக் கொண்டிருக்கும் பொழுது, அமெரிக்காவும் பேசாமல் விட்டு விடுவதா?

அமெரிக்கா பேசியுள்ளது. பேசும் அதுதான் அரசியல் நிஜம் (real politick)

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ராஜஸ்தானின் செல்லப் பெருமாள் !

*- ஒரிஜினல் ஊர்சுற்றி*

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாண சபை என ஒரு சபை உருவாக்கப்பட்டது பலருக்கும் நினைவிலிருக்கும்!

இந்த மாகாண சபையின் முதலமைச்சராக வி.ஆர்.வரதராஜப் பெருமாள் என்றொருவர் தெரிவாகியிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரான வரதராஜப் பொருமாள் இலங்கையில் இந்திய அமைதிப்படை என்ற இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது அதன் உதவியுடன் இந்த வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி மாகாண சபை உருவாக்கப்பட்டது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகவே இலங்கையில் மாகாணசபை முறை கொண்டு வரப்பட்டது. இப்பொழுது தமிழர்கள் தாயகமான வடக்கு கிழக்கு மாகாண சபை தவிர இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் சபைகள் இயங்குகின்றன.

வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாள் இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் திரும்பிச் சென்ற போதே அதனுடன் கூடவே தமது குடும்பத்துடன் சென்றுவிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த வரதராஜப் பெருமாளும் அவரது அமைப்பினரான தொண்டர்களும் இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து நாடு திரும்பிய பின் வடக்கு கிழக்கில் இருக்க முடியாத நிலை. அவர்கள் மக்களுக்குப் பயந்தனர்.

இந்தியாவுக்கு இவர்கள் இந்திய இராணுவத்தின் துணையோடு கப்பலில் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டதுமே தமிழ் நாட்டுக்கு இவர்களைக் கொண்டு வரவேண்டாம் என்று தமிழ் நாடு அரசு அறிவித்துவிட்டது.

வரதராஜப் பெருமாளின் நிர்வாகத்தில் அவரது சகாக்களாகச் செயல்பட்டவர்கள் வருகிறார்கள் என்றதுமே தமிழ் நாடு அச்சம் கொண்டது.

இந்தியாவின் இதர மாநிலங்களும் இவர்களை ஏற்றுக் கொள்வதற்கு மறுத்து விட்டன. கடைசியில் ஒரிஸா மாநிலம் ஒருவாறு ஒப்புக் கொண்டு இவர்களை "அகதிகளாக" ஏற்றுக் கொண்டது.

ஆனால், இந்திய மாநிலங்கள் பற்றி நன்கு தெரிந்திருந்த வரதராஜப் பெருமாள் தனக்கு மட்டும் ராஜஸ்தான் மாநிலத்தில் இடம் கேட்டுத் தேடிக் கொண்டார்.

ராஜஸ்தானின் தலைநகரான அஜ்மீரில் அமைச்சர்களின் குடியி-



ருப்புப் பகுதியில் வரதராஜப் பெருமாள் குடும்பத்துக்கும் ஒரு இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

சகல வசதிகளும் கொண்டவர்கள் தலம் இது. இங்குதான் தொடர்ந்தும் வரதராஜப் பெருமாள் குடும்பம் வசித்து வருவதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. வரதராஜப் பெருமாள் குடும்பத்தின் பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும் ராஜஸ்தான் மாநில அரசு ஆண்டு தோறும் கோடிக் கணக்கில் செலவிடுகிறது. இத் தொகையைப் பின்னர் இந்திய மத்திய அரசு ஈடு செய்துவிடுகிறது.

ராஜஸ்தானில் வரதராஜப் பெருமாள் குடும்பம் அனுபவிக்கும் ராஜபோகவாழ்க்கை ராஜஸ்தான் மக்கள் மத்தியிலேயே எதிர்ப்பைக் கிளப்பி வருகிறது.

எதற்காக வரதராஜப் பெருமாள் குடும்பத்துக்கு இந்தியா இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டும் என்பது சில பத்திரிகைகளே காலத்துக்குக் காலம் எழுதத் தவறுவதில்லை.

ராஜஸ்தான் மாநிலத்தில் சில நிலங்களையும் வரதராஜப் பெருமாள் வாங்கியிருப்பதாகவும் இதுவும் ராஜஸ்தான் மக்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ராஜஸ்தானில் பெரிய மாட்டுப் பண்ணை ஒன்றை ஆரம்பித்து வரதராஜப் பெருமாள் நடத்தி வருவதாகவும் இந்தப் பண்ணையிலிருந்து பெறப்படும் பால் ராஜஸ்தான் அரச பால் பண்ணைகளுக்கு விற்கப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் வரதராஜப் பெருமாள் குடும்பம் இப்பொழுது அவுஸ்திரேலியாவில் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அவுஸ்திரேலியாவில் குடியேறிய போதிலும் ராஜஸ்தான் வாழ்க்கையையும் சுகபோகங்களையும் கைவிடுவதற்கு வரதராஜப் பெருமாள் குடும்பத்துக்கு மனமில்லையாம். இதனால் வரதராஜப் பெருமாளின் துணைவியும் பிள்ளைகளும் இடையிடையே ராஜஸ்தானுக்கும் சென்று சில வாரங்கள் தங்கியிருந்து திரும்பிச் செல்கிறார்களாம்.

வரதாராஜப் பெருமாளை நம்பி அவரைப்பின் தொடர்ந்து ஒரிஸாவில் அகதிகளாகக் குடியேற்றப்பட்ட பெருமாளின் சகாக்கள் ஒருவர் இருவராக ஒரிஸாவை விட்டு வெளியேறித் தமிழ் நாட்டிலும் பின்னர் இலங்கைக்கும் மற்றும் வாழக் கூடிய இடங்களுக்கும் நழுவிச் சென்று விட்டனர்.

இப்பொழுது இலங்கையில் வரதராஜப் பெருமாளை நம்பி சிலபேர் உள்ளனர். வரதராஜப் பெருமாள் அம்மா துதிபாடி "சம்மிற்" இட்த்தில் வசதியான வீட்டிலிருக்கிறார். நினைத்த நேரம் இந்தியாவுக்கும் போய்வருகிறார்.

இந்நிலையில் தங்களுக்கும் பாதுகாப்பில்லை என்ற சர்வதேச சமூகத்திடம் வரதராஜப் பெருமாள் பாதுகாப்புக் கோரி நிற்கிறார்?

பெருமாள் யாருக்குப் பாதுகாப்புக் கோருகிறார்? எதற்காகப் பாதுகாப்புக் கேட்கிறார்? எப்படிப் பட்ட பாதுகாப்பை எதிர் பார்க்கிறார்?

அதுசரி ஈ.என்.டி.எல்.எப். என்று ஒன்று இருந்ததாமே அது எங்கே?

* (1958 ம் ஆண்டில் வீரகேசரியில் ஆரம்பித்த ஊர்சுற்றி ஈழநாடு, ஈழமுரசு என்று ஊர்சுற்றி இப்போது நிகரிக்கு வந்திருக்கிறார்.)

# நடக்கக் கூடியவையும் நடக்க வேண்டியவையும்

- விக்டர் ஐவன்

இந்தப் பிரதேச சபைத் தேர்தலின் போது பிரதான அரசியல் கட்சிகள் பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகள் எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் தீர்ககமான மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாக அமையும்.

தாம் இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தலின் போது பெற்றுக் கொண்ட வாக்குகளையும் விட குறிப்பிடத்தக்களவு வாக்கு விகிதாசாரத்தை உயர்த்திக் கொள்ள முடியுமா என்பது அரசாங்கம் எதிர் நோக்கும் பிரதான சவாலாகவும் உள்ளது. சென்ற பொதுத் தேர்தலின் போது பெற்றுக் கொண்ட வாக்குகளையும் விட அதிக வாக்கு விகிதாசாரத்தைப் பெற்றுக் கொள்வது, எவ்வாறாயினம் முன்னர் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அளவை இம்முறை பாதுகாத்துக் கொள்ள முடியுமா? என்பதே பொதுசன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் எதிர் நோக்கும் சவால்களாக உள்ளன.


ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சென்ற பொதுத் தேர்தலில் 4086026 வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. பொதுசன ஐக்கிய முன்னணி 3330815 வாக்குகளையும் மக்கள் விடுதலை முன்னணி 815353 வாக்குகளையும் பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசிய முன்னணி அதிக அளவான தொகுதிகளில் வெற்றி பெற்றாலும் பொதுசன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் பெற்றுக் கொண்ட வாக்குகளை ஒன்று சேர்த்தால் அதிக அளவிலான வாக்குகளை தமது இரண்டு கட்சிகளும் பெற்றுக் கொண்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

தாம் முன்னர் பெற்றுக் கொண்ட வாக்கு விகிதாசாரத்தில் குறிப்பிடத்தக்களவு வாக்குகளை நடைபெறும் பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டால் அந்த இரண்டு கட்சிகளுக்கும் சமாதானச் செயற்பாடுகளுக்கு எதிராக உள்ள நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள அரசாங்கத்திற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதோடு, தமது எதிர்கால நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனாதிபதியிடமிருந்து வரும் தடங்கல்களுக்கு எதிராக பலமான முறையில் எதிர்த்து நிற்பதற்கான சந்தர்ப்பங்களும் கிடைக்கும்.

பொதுசன ஐக்கிய முன்னணி பெற்றுக் கொள்ளும் வாக்குகளின் அளவு குறையுமேயாயின் அவர்களது அரசியல் பலம் குறைவதற்குக் காரணமாக அமைவதோடு ஜனாதிபதியின் எதிர்கால நடவடிக்கைகளிலும் அது தாக்கங்களை விளைவிக்கும். அதேபோன்று ஜனாதிபதிக்கு எதிராக பொதுசன ஐக்கிய முன்னணியினால் நிலவும் கிளர்ச்சி நிலை பலம் பெறுவதும் தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும்.

தேர்தல் பெறுபேறுகள் தீர்க்கமான தாக்கங்களை ஏற்படுத்துவது மக்கள் விடுதலை முன்னணிக்கேயாகும். சமாதானச் செயற்பாடுகளுக்கு எதிராக தீர்க்கமான போராட்டத்தில் இறங்கியிருப்பவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினரே. அவர்கள் இனங்களிடையே நிலவும் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி மேற்கொள்ளும் முயற்சிகளை தேசத் துரோக முயற்சியாகவே காண்கிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியினர் சென்ற பொதுத் தேர்தலின் போது பெற்றுக் கொண்ட 8 இலட்சம் வாக்குகளைப் பாதுகாத்துக் கொள்வதில் தோல்வியடைந்தால் அது அவர்களின் இறுதிக் கட்டத்தின் ஆரம்ப கட்டமாக அமையவும் இடமுண்டு. அது மக்கள் விடுதலை முன்னணியின் சமாதானத்திற்கு எதிரான இனவாத நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் மட்டுமன்றி, அவர்களுக்கு வாக்குகளையளித்த மக்களும்கூட அதனை அனுமதிப்பதில்லை யென்ற அடையாளமாக அமைவது தவிர்க்க முடியாததாகி விடும். அவ்வாறு ஏற்படுமேயாயின் விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா, நந்தன குணதிலக போன்ற அக்கட்சியின் பிரபல்யமான தலைவர்கள் கட்சியினால் பாரிய சிக்கல்களினுள் மாட்டிக் கொள்வர் என்பதில் சந்தேமில்லை.





இந்தக் குறிப்பு பிரதேச சபைத் தேர்தலுக்கு முன் தினமே எழுதப்படுகின்றது. தேர்தல் தினமன்று எதுவும் நடக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு. இருந்தாலும் இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது பொதுசன ஐக்கிய முன்னணியையும் விட நல்ல பன்புகளை அரசாங்கத்திடம் காணக்கூடியதாக உள்ளது. வன்முறைகள் மிகக் குறைவாகும். பகிரங்கமாகவே தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொதுச் சொத்துக்களை பயன்படுத்தப்படுவதும் குறைவாகும். மிக முக்கியமானது என்னவெனில் பிரதமர் தேர்தல் நடவடிக்கைகளோடு தொடர்பு கொள்ளாமலிப்பதே. அதனால் தேர்தல் நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் பாரிய தலையீடு இல்லாமல் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன.

பிரதேச சபைத் தேர்தலின் பின்னர் சமாதானத்திற்கான ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆயத்தமாக இருப்பதோடு ஜனாதிபதியோடு மேற்கொள்ளவுள்ள கொடுக்கல் வாங்கல்களும் முடிவுக்கு வரவுள்ளது.

அதற்காக வேண்டி மேற்கொள்ளப்படவுள்ள மாற்று வழிகள் பல இருந்தாலும் மிகச் சிறந்த முறையாக இருப்பது நிறைவேற்று அதிகார முறையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனில் அந்த முறையில் நிலவும் பொருத்தமற்ற தன்மைகளை நீக்கிக் கொள்வதற்காக வேண்டி அரசியலமைப்புச் சீர்திருத்த மொன்றை நோக்கிச் செல்வதேயாகும். அதன் மூலம் ஜனாதிபதிக்கு தன்னிச்சைப்படி பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்காக உள்ள சந்தர்ப்பங்கள் இல்லாமல் ஆக்கப்படும். ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்குவதற்காக வேண்டியுள்ள கேலிக்குரிய சட்டதிட்டங்களிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு சத விகிதத்தினர். ஜனாதிபதியை எதிர்ப்பார்களேயாயின் அவரை நீக்குவதற்காக வேண்டி அரசியல் குற்றச்சாட்டொன்று தேவையில்லை. மூன்றில் இரண்டு பங்கு ஆதரவில் மட்டும் ஜனாதிபதியை நீக்குவதற்கான சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும். இருந்தாலும் ஜனாதிபதியொருவர் அரசியலமைப்புச் சட்டதிட்டங்களை மீறும் சந்தர்பங்களில் அல்லது பாரதுாரமான குற்றச்சாட்டுக்கள் முன்னெடுக்கப்படும் சந்தர்பங்களில் பாராளுமன்றப் பெரும்பான்மையினருக்கு அரசியல் குற்றச் சாட்டொன்றை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருத்தல் வேண்டும். அதுபோன்ற தீர்மானமொன்றில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்டும் விசாரணைகளின் போது அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஜனாதிபதி குற்றவாளியென உயர் நீதிமன்றம் தீர்மானிப்பின் ஜனாதிபதியைப் பதவியில் இருந்தும் நீக்குவதற்கு உயர்நீதிமன்றத் தீர்ப்பு மட்டும் போதுமானதாக அமைதல் வேண்டும்.

இனங்களிடையே நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் முன்னர் காணமுடியாத ஒழுங்கு முறைகள் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இரு சாராரும் தமக்கான நிபந்தனைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி அர்பணிப்போடு செயற்படுவதையும் காண முடிகின்றது. பேச்சுவார்த்தைகளுக்கான அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல முடிவது புலிகள் இயக்கத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தற்காலிகமாகவேனும் நீக்கினால் மாத்திரமேயாகும். மிகவும் சிக்கலான பிரச்சினைகள் எழுவது பேச்சுவார்த்தைக் கட்டத்திற்குச் செல்லும்போதே. இறுதியில் அனைத்தும் தீர்மானிக்கப்படுவது புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஆயுதம் போராட்ட மார்க்கத்தைக் கைவிட்டு ஜனாநாயக பிரவாகத்தோடு சேர ஆயத்தமா இல்லையா என்ற கேள்வியின் பிரகாரமேயாகும். தற்போது உலகில் நிலவுவது ஆயுத பலத்தால் ஒரு சிறுபான்மை இனத்தை. ஒடுக்கி வைக்கச் சந்தர்ப்பம் இல்லாத சூழலாகும் அதுபோன்றே ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கூட ஆயுத மேந்திச் செயற்பட சந்தர்ப்பங்கள் இல்லாத ஒரு சூழலே உண்டு. இந்த அர்த்தத்தால் பார்க்கும் போது இலங்கையில் நிலவுவதும் அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் யுத்தத்தில் இருந்தும் விலகி நிற்க வற்புறுத்தப்படும் சந்தர்ப்பமே. இருந்தாலும் புலிகளுக்கு அதிலிருந்தும் விடுபடுவது இலகுவான காரியமல்ல. கஷ்டமாகவேனும் சமாதான மார்க்கத்திற்குப் புறம்பான முறையில் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக வேண்டி அரசியல் ரீதியாகப் போராடும் நிலையை நோக்கி செல்வதால் புலிகள் வெற்றி கண்டால், அவர்கள் அரசியல் ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்த இடத்தைப் பெற்றுக் கொள்வது தவிர்க்க முடியாத தொன்றாகி வரும்.

தேவையான சந்தர்ப்பத்தில் ஆயுதங்களுக்கு விடை கொடுப்பதற்கு தயாராக இருந்த புத்தி சாதுர்யமான பண்பு காரணமாக வட ஆபிரிக்காவின் மண்டேலாவுக்கு மிகவும் பலம் கொண்ட ஒரு அரசியல் தலைவராக மாற முடிந்தது. இது பிரபாகரனுக்கும் பொருத்தமானதே. தனது இன உரிமைகளை வென்றெடுப்பதற்காக வேண்டிக் கையாளும் வன்முறையிலான வழியிலிருந்தும் விலகி சமாதான வழியில் நுழையும் விடயத்தில் பிரபாகரன் வெற்றி கொண்டால் அவர் மிகவும் பலம் கொண்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைவராக மாறுவது மட்டுமன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு கௌரவமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளிலும் வெற்றியடைவார்.

இருந்தாலும் இரண்டு சாராரும் எல்லோரினது நம்பிக்கைக்கும், கௌரவத்திற்கும் காரணமாக அமையும் தீர்வொன்றை நோக்கிச் செல்ல வேண்டியது சர்வதேச தாக்கங்களின் காரணமாக இருக்கக் கூடாது. இரு சாராரினதும் கௌரவமான எதிர்கால வாழ்க்கை பற்றிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

O

---

# வடக்கு கிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தல் தவிர்ப்பு குறித்து

தென்பகுதி எங்கும் உள்ளூராட்சி தேர்தல்கள் சூடு பிடித்திட, தமிழர் பிரதேசமான வடக்கு கிழக்கில் மாத்திரம் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்துவது ஒத்திப் போடப்பட்டுள்ளது. அநேகமாக தேர்தல் நடாத்தாதும் விடப்படலாம்.

உள்ளூராட்சி தேர்தலை வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நடாத்துவது என்பது ஸ்ரீலங்கா அரசின் நிர்வாக இயந்திரத்தை தமிழ் பகுதிகளில் பரவலாக திடப்படுத்துவது என்பதாகும். இது தமிழர்கள் தமக்கான சுயாதீன நிர்வாக அலகுகளை உருவாக்குவதற்குப் பதில் சிறிலங்கா நிர்வாகத்திற்குள் தம்மை கட்டிப் போட்டுக்கொள்வதாக அமையும் என்றவகையில் இந்த தேர்தல் நடாத்தப்படாதிருப்பது, தமிழரின் நிர்வாக சுயாதீனத்திற்கு சாதகமானதாகும்.

பல்வேறு சமூக, வர்க்க நலன்களை சார்ந்த பிரிவினரின் தொகுப்பாக தமிழ் சமூகம் இருப்பதால், தேசிய நலன்கள் என்பதையும் மீறி வர்க்க, சமூக நலன்கள் செயற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதிகார நிலையிலுள்ள வர்க்க பிரிவுகளும் சமூக சக்திகளும் தமது நலன்களை பாதுகாத்திட தேசிய நலன்களையே விட்டுக் கொடுத்திட முனைவார்கள். பொதுவாகவே சமூக அளவில் அதிகாரம் செலுத்தும் நபர்கள்தான் தேர்தல்களில் போட்டியிடுவதும் அதிகாரங்களை கைப்பற்றுவதும் நடைபெறுகிறது.

தற்போதைய யுத்த நிறுத்த காலத்தை பயன்படுத்தி அரசு தனக்குச் சார்பானவர்களை தமிழ் சமூகத்தில் இருந்து வென்றுகொள்வதில் ஈடுபடும். குறிப்பாக சமூக செல்வாக்கை கொண்டுள்ள அரசியலில் ஈடுபடும் ஆதிக்க நலன்சார் சமரசவாத பிரிவினரை நலன்களைக் காட்டி அதனால் இலகுவாக வென்று கொள்ள முடிகிறது. இத்தகைய பிரிவினரும் இலகுவில் அரச தரப்பிற்கு சார்பானவர்களாக மாறிவிடுகிறார்கள்.

எனவே உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு கதவுகளை திறந்து விடுவதானது தமிழர்களில் அதிகார வர்க்கங்களினதும் ஆதிக்க சக்திகளினதும் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினர் தேசிய நலன்களுடன் முரண்படும் நிலைமைகளை இலகுவில் தோற்றுவித்திடும்.

இது தமிழர்கள் தமது சுயநிர்ணயத்திற்காக ஒரே குரலில் செயற்படுவதற்கும், போராட்டம் இதுவரை அடைந்துள்ள வெற்றிகளுக்கும் பாதகமாயமைந்திடுகிறது. அவ்வகையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடாத்தப்படாதிருப்பதில் தமிழர்களுக்கு அரசியல் நன்மைகள் உண்டு.

இந்த அரசியல் நியாயங்கள் ஒருபுறமிருக்க, ஒரு மக்கள் சமூகம் எவ்வளவு காலத்திற்கு தனக்கான நிர்வாக அலகுகளை தானே சுயமாக தெரிவு செய்யாதிருக்க முடியும் எனும் கேள்வியும் கூடவே எழுகிறது. மக்களது அடிப்படை பிரச்சினைகளை மக்களின் நிலையில் இருந்து கவனிப்பதற்கு அவர்களின் விருப்பத்திற்கு பாத்திரமான, அவர்களாலேயே தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தேவை. தமிழ் மக்களின் உள்ளூர் அளவிலான நிர்வாக அலகுகளை தமிழ் மக்களின் தேசிய நலன்களிலிருந்து சற்றும் நழுவிச் செல்லாத பிரதிநிதிகள் நிர்வகிக்க வேண்டும்.

தேர்தல் என்பது ஜனநாயக நடைமுறையை வெளிப்படுத்தும் ஒரு விடயமாக இருப்பதால், வடக்கு கிழக்கில் தேர்தல் தவிர்ப்பு என்பது விடுதலைப் புலிகள் ஜனநாயகமாக இல்லை எனும் சர்வதேச குற்றச்சாட்டிற்கு புலிகளை இலக்காக்கிடும் ஆபத்தும் உண்டு. எனவே மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தலை நடாத்தி ஒருங்கே ஜனநாயக பண்பையும் தமிழ் தேசிய நலன்களையும் பாதுகாப்பது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாயுள்ளது.

தமிழ் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று அரசும் தேர்தலை நடாத்துவதை தவிர்க்கிறது என்றால் அதில் அரச நலன்களும் உள்ளடங்கியிருக்கிறது என்பதே உண்மை. தமிழர்களின் கோரிக்கைக்கு விட்டுக் கொடுத்து செயற்படுவதன் மூலம் சிறந்த சமாதான முன்னெடுப்பாளராக தன்னை சர்வதேச அரசியல் அரங்கில் அடையாளப்படுத்துவது, தமிழ் தரப்பு தேர்தலை தவிர்ப்பதன் மூலமாக ஜனநாயக முறைமைகளுக்கு எதிரானது என தமிழ் தரப்பை, குறிப்பாக விடுதலை புலிகளை அடையாளப்படுத்துவது ஆகிய உள்நோக்கங்களை அரசு கொண்டுள்ளது. இதில் ஐக்கிய தேசிய முன்னணி சிறந்த சாணக்கியத்துடன் செயற்படுவதாகவே தெரிகிறது.

குவேனி

# அரசாங்கத்தின் பாதுகாப்பாளர் அமெரிக்காவா?

-சுனந்த தேசப்பிரிய

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சென்ற திங்கட் கிழமை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பகிரங்க-மாகவே ஓர் எச்சரிக்கையை விடுத்திருந்தது. உண்மையாகவே அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக குற்றம் சுமத்துவது மாத்திரமல்ல, அதையும் விட முழுச் சர்வதேச சமூகத்தவரும் ஏற்றுக் கொண்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு விடுதலைப் புலிகள் மதிப்பளிப்பதில்லை என்பதை உணர்த்துவதே. இதனை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் மாத்திரம் அறிவிக்க வேண்டுமென அமெரிக்க அர-சாங்கம் நினைத்திருப்பின் அதனை இவ்வாறு பகிரங்கமாகக் கூறாமல் இராஜ தந்திர முறையில் அறிவிக்கச் சந்தர்ப்பங்கள் இருந்தன. இருந்தாலும் அமெரிக்கா பகிரங்-கமாக விமர்சிக்கும் கொள்கையையே கையாண்டது.

இலங்கையின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக இலங்கைக்கு அடுத்த-படியாக அதிகமாகக் கவனம் கொள்ளும் நாடு அமெரிக்காவேயாகும். முக்கியமாக 9/11 என அழைக்கப்படும் சென்ற செப்டம்பர் மாத பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் தீர்க்கமான மாற்றங்கள் ஏற்படலாயின. உலகம் பூராவும் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிராக நேரடியாகத் தலையிடும் கொள்கையே அந்த மாற்றம். ஆப்கானிஸ்தானிய தாலிபான்களுக்கு எதிராக நேரடியாக மேற்கொண்ட தலையீட்டின் பின்னர் அமெரிக்கா இப்போது பிலிப்பைன்ஸிலும், கொலம்பியாவிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச விரோத ஆயுத ரீதியான அரசியல் பயங்கரவாதத்திற்கு எதிராக அவர்கள் நேரடியாகவே மோதலில் இறங்கியுள்ளனர்.


விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகக் குற்றம் சுமத்தி விடுக்கப்பட்டிருந்த அறிக்கையில் அமெரிக்கா மிக முக்கியமான மூன்று காரணங்கள் பற்றியும் சுட்டிக்காட்டியிருந்தது.


முதலாவதாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருவதாக தமக்கு நம்பகரமான வழிகளால் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறியுள்ளது. இந்தத் தகவல்கள் வடகிழக்கு சிவில் இயக்கங்கள் மூலமாகவும், செய்மதிப் புகைப்படங்கள் மூலமாகவும் பெற்றுக் கொண்டிருக்கலாமென நினைக்க முடியும். இரண்டாவதாக அமெரிக்க அரச திணைக்களம் தான் இன்னும் ஒரு பயங்கரவாத இயக்க மொன்றென்பதை விடுதலைப்புலிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளது. அதன் மூலம் கூறப்படும் மறைமுகமான செய்தி யாதெனில், பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச கூட்டொன்று உண்டு என்பதும் அதன் தலைமை தாமே என்பதுமாகும்.

அதன் மூலம் கூறப்படும் மூன்றாவது செய்தி யாதெனில் ஐக்கிய அமெரிக்காவிடம் விடுதலைப்புலிகள் நல்ல பெறு பேறுகளை எதிர்பார்ப்பார்களேயாயின் தமிழ் ஈழம் என்ற கனவிலிருந்தும் விடுபட்டு பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தேடிக்கொள்ளும் சமாதான மார்க்கத்துள் பிரவேசிக்க வேண்டும் என்பதுமாகும்.

புலிகளின் பேச்சாளரான அன்ரன் பாலசிங்கம் அதுசம்பந்தமாக விடுத்த அவசரமான அறிக்கையொன்றின் மூலம் அமெரிக்காவின் அந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். அவர் தனது அறிக்கையின் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கமும் தலைவர் பிரபாகரனும் இந்த ஒப்பந்தத்திற்காக வேண்டி அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதாகவும், அதனை மீறும் தமது இயக்க அங்கத்தவர்களுக்கு தண்டனைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறியுள்ளார். இதற்குப் பதில் கூறிய இலங்கையின் அமெரிக்க ஸ்தானிகர் ஆஷ்லி வில்ஸ் விடுதலைப்புலிகளின் இந்த உத்தரவாதம் சம்பந்தமாக தான் மகிழ்ச்சி கொள்வதாகக் கூறியுள்ளார். சாதாரணமாக ஒளிவு மறைவின்றி கருத்துக்களை எடுத்துக் கூறும் சுபாவம் கொண்ட ஆஷ்லி வில்ஸ் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் வைத்து ஆற்றிய உரையொன்றின் போது இலங்கையில் தனியான இன்னொரு ராஜ்ஜியம் உருவாவதற்கு அமெரிக்கா எந்தவிதமான ஒத்துழைப்பையும் வழங்கப் போவதில்லை யெனக் கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடையை விட அதிக தாக்கங்கள் ஏற்படுத்துவது சர்வதேச தடையேயாகும். சர்வதேச தடைகளின் காரணமாக விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அதக அளவில் பணம் வந்து சேர்வதற்காக உள்ளமார்க்கங்கள் தடைப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி சர்வதேச அளவில் அதன் பகிரங்கமான செயற்பாடுகளுக்கும் அது தடையாகவே உள்ளது. கடந்த மாவீரர் தினமன்று தலைவர் பிரபாகரன் தனது உரையை சர்வதேச சமூகத்தினர் தனது இயக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்காகவே பயன்படுத்தினார். தனது விடுதலைப் பேராட்டத்தை பயங்கரவாதக் கிளர்ச்சி யொன்றென அறிமுகப்படுத்துவது தவறானது என அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பேசினார். இருந்தாலும் சர்வதேச சமூகத்தினர் பிரபாகரனின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பிரபாகரனின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமன்றி தமிழ் ஈழம் என்ற கொள்கையிலிருந்தும் விடுபட்டு பேச்சு வார்த்தைகளுடனான சமாதான மார்க்கத்துள் பிரவேசிக்க வேண்டுமென இப்போது அமெரிக்கா உட்பட பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச அணி விடுதலைப்புலிகளுக்கு ஆலோசனை கூறவும் முன்வருகின்றது. உயிர் தியாகங்கள் செய்து தொடர்ந்து இருபது வருடங்கள் யுத்தம் செய்து பலம் கொண்ட நிலையில் இருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இதனை சீரணிப்பது கஷ்டமான காரியமாகவே இருக்கும். இந்த அமெரிக்க ஆலோசனையின் மூலம் கூறப்படுவது விடுதலைப்புலிகள் பிரதானமான தமது இரண்டு துறைகளைக் கைவிட வேண்டுமென்பதே. ஒன்று தமிழ் ஈழம் என்ற கோரிக்கை. மற்றையது ஆயுதப் போராட்டம். இது பாராளுமன்றத்தில் ஜே.வி.பிக்கு கதவுகளைத்திறந்து விட வேண்டுமானால் முதலாளித்துவ முறையை ஒழித்துக் கட்டி சோஷலிஷ முறைமையை ஏற்படுத்திட வேண்டும் என அக்கட்சி கொண்டிருக்கும் கொள்கையையே அடிப்படையில் கைவிட்டாக வேண்டும் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும். மக்கள் விடுதலை முன்னணியினர் பாராளுமன்ற முறையினுள் பிரவேசிப்பதற்காக வேண்டி தமது கொள்கை நிலையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டதோடு மட்டுமல்லாமல் திரும்பவும் ஆயுதப் போராட்டமொன்றில் ஈடுபடுவதில்லையெனவும் வாக்குறுதியளித்தனர்.





தற்போது விடுதலைப்புலிகள் முகம் கொடுத்திருப்பதும் அது போன்றதொரு பிரச்சினையே. அதாவது தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு ஒரு நாட்டினுள் அதிகாரப் பகிர்வையேற்படுத்தும் முறையொன்றை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியதே. இரண்டவதாக ஆயுதக் கிளர்ச்சியென்ற மார்க்கத்திற்குப் பதிலாக பேச்சு வார்த்தை மார்க்கத்தையும், பகிரங்கமான அரசியல் செயற்பாடுகளை நோக்கியும் வர வேண்டுமென்பதே. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தங்கிநின்று பேச்சு வார்த்தையென்ற வழியில் முன்னோக்கிச் செல்ல வேண்மெனில் விடுதலைப்புலிகள் இந்தக் கஷ்டமான தடையை ஒரு சந்தர்ப்பத்தில் கடக்க வேண்டியேற்படும்.

இது வரைக்கும் ரணில் விக்ரமசிங்கவும் அவரது சமாதானக் குழுவினரும் போட்டியின் சட்டதிட்டங்களை மீறாமலிருப்பதில் கவனம் கொண்டுள்ளனர். உண்மையான விளையாட்டு மைதானம் சர்வதேச நிலையிலும் வடகிழக்குப் பிரதேசத்திலுமே இருக்கிறது என்ற திட்டவட்டமான உண்மையிலிருந்தே ரணில் தனது ஆட்டத்தை நிகழ்த்துகிறார்.

தென்னிலங்கையில் நிலவும் பொதுமக்கள் அபிப்பிராயத்தை சமாதானத்திற்கு எதிரான யுத்த வாதிகளினால் கொள்ளையடிக்க முடியாதென்பதை 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் 2001ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் கண்டு கொள்ள முடிந்தது. சர்வதேச அளவில் ரணிலின் நம்பிக்கை யாளர்களாக இருப்பவர்கள் மிலிந்த மொரகொடவும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுமாகும். ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னர் அமெரிக்காவிற்கும், ஐரோப்பிய யூனியனிற்கும் மிலிந்த மொரகொடவே சென்றார். டிரோன் பெர்னாண்டோ அவுஸ்திரேலியாவில் வைத்து ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரித்தானிய பிரதம மந்திரியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் போதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும் தமது பலமான ஒத்துழைப்பாளராகவும், பாதுகாப்பாளராகவும் கருதுவது அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்தவர்களையேயாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் பிரதான லீவராக இருப்பவர்கள் சர்வதேச சமூகத்தவரே என்பது உண்மை தான். இதன்படி பார்க்கும் போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாடங்களைப் படிப்பது லக்ஷ்மன் கதிர்காமத்திடமிருந்தேயாகும். ○

# புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் திருப்பி அனுப்பப்படுவார்களா?

எஸ். எம். ஜி

அந்தச் சிறுவனுக்கு இப்போது பத்துவயது.

நாட்டின் சமாதானம் அவனது எதிர்காலம் பற்றி முடிவு செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறது.

இந்த ஒருவனுடைய கதை நமக்குத் தெரிந்த கதை. இப்படி பல்லாயிரம் சிறுவர்கள் சிறுமிகள் இருப்பர்.

1990 ஆம் ஆண்டுகளிலும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் படகுகளில் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்ற குடும்பங்கள்பல.

தாய் தந்தையுடன் மகனும் தன் காதல் மனைவியுடன் தமிழகம் சென்றான். தமிழகத்தில் பின் தங்கிய மாவட்ட ஒன்றிலுள்ள ஒரு கிராமத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தித் தங்கியிருந்தனர். வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோவில் அந்தக் கிராமத்தில் இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் அந்தக் கிராமத்துக்கு அதிக அளவில் வந்து போவதால் அந்தக் கிராமம் முன்னேறிவரும் நகரமாக மாறிக் கொண்டிருக்கிற தென்று சொல்லலாம்.

தமிழ் நாட்டில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டாலும் அங்குள்ள அரச ஊழியர்களின் போக்கில் மட்டும் மாற்றம் ஏற்படாது.

நான் முதலில் குறிப்பிட்ட சிறுவன் 1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அந்த இளம் தம்பதிக்கு மகனாகப் பிறந்தான்.

அவன் தமிழ் நாட்டில் பிறந்திருந்தாலும் முதலில் அவனுக்கு குடும்ப அட்டையில் வழங்கப்பட்ட சீனி, மண்ணெண்னை போன்ற பங்கீட்டுப் பொருள்கள், அவன் இலங்கையரான தாய் தந்தையருக்கும் பிள்ளையாகப் பிறந்ததென்பதை அரச அதிகாரிகள் கண்டு கொண்டதால் அவன் சுவையறிந்து விருப்பமான உணவைக் கேட்கும் முன்பே பங்கீட்டை நிறுத்தி விட்டார்கள்.

சில இலட்சங்களைக் கடன் பட்டு வெளிநாடொன்றில் பலரைப் போலவே இச்சிறுவனின் தந்தையும் தஞ்சம் புகுந்தான்.

சிறுவன் இரண்டு வயதாக இருக்கையிலேயே வெளிநாடு செல்வதற்காக அவன் தந்தை பல இடங்களுக்கும் சென்று முயற்சி செய்தான். மூன்று வயதில் சிறுவன் பாலர் பாடசாலையொன்றில் கல்வி பயிலச் சேர்க்கப் பெற்றான். அங்குள்ள பல பெற்றோர்களைப் பின்பற்றி இச்சிறுவனும் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட பாலர் பாடசாலையில் சேர்ந்து ஆங்கில மூலம் கல்வி கற்று வந்தான். நான்காவதாண்டில் அவன் கல்வி கற்கும் வேளையில் வெளி நாட்டிலிருக்கும் அவன் தந்தையுடன் செல்வதற்கான ஏற்பாடுகளை அவனது தாயார் மேற்கொண்டார். எத்தனை காலம் இளம் குடும்பம் பிரிந்திருக்க முடியும்?

வெளி நாட்டுப் பயணம் இலங்கையிலிருந்து தான் மேற்கொள்ள முடியும். சிறுவனும் தாயும் 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை திரும்பினர். சிறுவன் இலங்கையில் தனது கல்வியைத் தொடர வேண்டும்.

மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட பாடசாலையில் அவனுக்கு நாலாம் ஆண்டு வகுப்பிலேயே இடம் கிடைத்தது. இங்கு தமிழ் மொழியே போதனா மொழி. அவன் தமிழ் நாட்டில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு கற்ற கல்வியில் மாற்றம். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ் மக்களே வாழ்ந்து வருவதால் சூழ்நிலையில் பெரும் மாற்றம் நிகழவில்லை.

அவன் தொடர்ந்து தமிழ் மொழி மூலம் கல்வி கற்று ஐந்தாம் ஆண்டிற்கும் சென்றான். சில மாதங்களிலேயே முயற்சி வெற்றியளித்து அவனும் தாயும் வெளிநாட்டில் அவனுடைய தந்தையிடம் போய்ச் சேர்ந்து விட்டனர்.

இப்பொழுது ஜேர்மனியில் அவன் டொச் மொழியில் கல்விகற்று வருகிறான். ஜெர்மன் பிள்ளைகளுடன் நட்புறவுடன் பழகி வருகிறான். சூழலும் மொழியும் கலாசாரமும் அவனுக்கு முற்றிலும் புதியவை. அவன் மகிழ்ச்சியாகவே பள்ளிக்கூடம் போய் வருகிறான்.

இலங்கையில் போருக்கு முடிவு கட்டி சமாதானம் நிலவ வேண்டு மென்று ஆவலும் ஆசையும் கொண்டிருக்கும் குடும்பங்கள் பலவற்றில் இந்தச் சிறுவனின் குடும்பமும் ஒன்று. நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் நாங்கள் எல்லோரும் நாடு திரும்ப வேண்டுமா? என்று அந்தச் சிறுவன் கேட்கிறான்.

அவனது பாடசாலை நண்பர்கள் இதேகேள்வியை அவனிடம் கேட்கத் தொடங்கி விட்டார்களாம். "உன்னைப் போகவிடமாட்டோம்" என்ற அவனது மிகநெருங்கிய பாடசாலைத் தோழர்கள் சொல்கிறார்களாம்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்து நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் வெளிநாடுகளில் போய்த் தஞ்சமடைந்துள்ளவர்களின் நிலை என்ன என்ற கேள்வி வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் மட்டுமல்ல வெளிநாடுகளில் உள்ளவர்களின் உள்நாட்டு உறவினர்களின் மத்தியிலும் பெரும் கேள்விகளாக எழுந்து நிற்கின்றன. எல்லோருமே திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்களா? யார் யார்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# வேண்டாம் விபரீத விளையாட்டு

-அலியார் மவ்சூக்

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம். அதுபோல் நாம் போராடுவது முழுக்கத் தமிழ் இனத்துக்கே என்றாலும் ஆங்காங்கே எம்மத்தியில் வியாபித்துள்ள முஸ்லிம் மக்களுக்கும் இப்போராட்டத்தின் பலன் போய் சேரும் என்று, 20 வருடத்துக்கு முன் எனது தமிழ் நண்பரொருவர் சொன்னார். நீங்களும் எப்போதும் எங்களுடன் தான் இருப்பீர்கள் என்ற நல்ல நோக்குடன் தான் அன்று அவர் கூறினார், கூறியிருப்பார். ஆனால் வருமுன் காக்கும் சில பண்ணையாளர்கள் விதைக்க முன்னரே புல்விதைகளை நீக்கி விடுவார்கள். ஏன் அந்தப் புல்லுக்கு "வேஸ்ராக" நீர் பாய்ச்ச வேண்டுமென்ற நோக்கில் அவ்வாறு வடக்கில் இருந்த முஸ்லிம்களை ஒருசில மணி நேர காலக்கெடு கொடுத்து வெளியேற்றிய பெருமை விடுதலைப் புலிகள் அமைப்பினரையே சேரும்.

அன்று அவசர அவசியமாக முஸ்லிம்களை துப்பாக்கி முனையில் வெளியேற்றிய விடுதலைப் புலிகளிடம் இன்று ரொம்ப அவசரமாக முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டும் என அறிக்கை மேல் அறிக்கை விடுபவர்கள் முதலில் சில பின் விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இன்று நோர்வேயின் அனுசரணையுடன் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை, உடன்படிக்கை என ஒரு தூரத்துப்பச்சையா? கானல் நீரா? முடிந்த முடிவா? என தீர்மானிக்க முடியாத "முடிச்சு"ப் போடப்பட்டுள்ளது. இந்த முடிச்சு "சுருக்காக" இல்லாமல் "முடிவாக" இருக்க வேண்டும் என்பது தான் மனிதநேயமுள்ளவர்களின் பேராசை.

நோர்வேயும், ரணிலும், பிரபாகரனும் போட்டுள்ள முடிச்சினால் வட-கிழக்கில் தமது செல்வாக்குக் குறைந்து விடுமோ என்ற பயத்தில், தயக்கத்தில் அவசர அவசரமாக முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்று, என அறிக்கை விட்டு தமது இருப்பை பலப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையே ஒரு சிலரிடம் தெரிகிறதே தவிர வட-கிழக்கு முஸ்லிம்களின் நீண்ட கால நலனின் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

நாரே தக்பீர் "அல்லாஹூ அக்பர்" என்ற ஒரே ஒரு வசனத்துடன் அரசியலுக்கு வந்த இந்த அறிக்கை மன்னர்கள், மாவனல்லை வன்செயல், மடவளை படுகொலை என சாக்காக வைத்து நிறைய மந்திரிப் பதவிகளை அறுவடை செய்து விட்டனர். இப்போது நோர்வேகாரர்களின் வரவால் தமது இருப்பு பாதிக்கப்பட்டு விடுமோ! என்ற பயத்தில் முஸ்லிம்களை வடக்கில் குடியேற்ற மேன்மை தங்கிய பிரபாகரன் கருணை காட்ட வேண்டும் என அறிக்கைகளும், கடிதங்களும் எழுதத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் குடியேறிவிட்டால் முஸ்லிம்கள் ஜென்ம சாபல்யம் அடைந்து விடுவார்கள், பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விடும் எனக் கனாக் காணுபவர்களுக்கு சில உண்மைகளைப் புரிய வைக்கலாம் என நினைக்கின்றேன்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஸ்ரீலங்காவை ஆக்கிரமித்த போது முஸ்லிம்களாகிய நாம் ஸ்ரீலங்காவில் சகல பகுதிகளிலும் கூடியவரை வியாபாரிகளாகவே இருந்தோம். 1948 சுதந்திரத்துக்கு பின் 1980 வரை வட-கிழக்கில் உள்ள முஸ்லிம்களில் 99 வீதமானவர்கள் விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவுமே இருந்தோம். அனைத்து சமூகத்தவருடனும் சுமூகமாகவும், அன்னியோன்னியமாகவுமே இருந்தோம். எமது கடை, எமது வயல், எமது ஆடு, மாடு, எமது மீன் பிடிபடகு, எமது பள்ளிவாசல் என ஒரு அமைதியான வாழ்வே வாழ்ந்து வந்தோம். பேசுவதற்கும், ஒரு கடிதம் எழுதுவதற்கும், படித்தால் போதும் என்ற ஒரு நிலையே இருந்தது.

1980க்குப் பிந்திய காலகட்டத்தில் தான் தமிழ் குழுக்களின் அத்து மீறல்கள் வட-கிழக்கு முஸ்லிம்கள் கனவிலும் எதிர்பார்க்காத பாரிய அழிவுகளுக்கு அவர்களை இட்டுச் சென்றது. அழிவுகள் பற்றிய புள்ளிவிபரங்களை நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்பவில்லை. இவற்றை



எல்லாம் எடுத்துச் சொல்லிச் சொல்லியே முஸ்லிம் கொங்கிரஸ் போராளிகளே விழித்தெழுங்கள் என ஒரு கட்சி நிறைய அறுவடை செய்து விட்டது.

1982-1991 நிறைய அழிவுகளைச் சந்தித்த பின் தான் முஸ்லிம்கள், குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்கள் கல்வியில் கவனம் செலுத்தத் தொடங்கினர். அதுமட்டுமல்ல வட-




கிழக்குத்தான் எமது உலகம் என்றிருந்தவர்கள் உயர் கல்வி, தொழில் வாய்ப்பு, ஆங்கில மொழி தேடி கொழும்பு, கண்டி எனப் புறப்பட்டனர். இந்தியாவைத் தேடி புறப்பட்ட கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது போல், அகதிகளாக எல்லாவற்றையும் இழந்து கல்வி தேடிச் சென்ற வட-கிழக்கு முஸ்லிம்கள் சகல துறைகளிலும் முன்னேறலாம் என்ற உண்மையைக் கண்டனர்.

முஸ்லிம் தபாலதிபர், முஸ்லிம் பாடசாலை அதிபர், முஸ்லிம் பொலிஸ் அதிபர், முஸ்லிம் A.G.A. முஸ்லிம் வக்கீல்கள், ஆசிரியர்கள், வீட்டுக்கொரு டொக்டர், தெருவுக்கு 10 இன்ஜினியர், கூப்பிட்ட குரலுக்கு கிராம சேவகர்கள், வங்கி மனேஜர்கள், கிராமத்துக்கு 100 ஜப்பான் வாகனங்கள், கண்டியிலும் குருநாகலிலும் காணிகள், பூமிகள், கொம்பியூட்டர் நிறுவனங்கள், கொழும்பு 2ம் 3ம் 4ம் குறுக்குத் தெருவில் வெங்காயம், மிளகாய், சீனியின் விலையை தீர்மானிக்கும் திறன், வெள்ளவத்தை, பம்பலபிட்டி, கொள்ளுப்பிட்டியில் வீட்டு மனைத் தொகுதிகள், பேங்கொக் சேலோம், பட்டாயாவில் இறால், கடல் அட்டை கொள்வனவு, சென்னை மண்ணடி, தி.நகரில் புடைவை ஆலைகளில் முதலீடு, பம்பாய் விமான நிலையத்தில் கஸ்டம்ஸ் ஒபீஸர்களுக்கு தண்ணி காட்டல், பிலிப்பைன் வக்ளயரனில் தக்காலோ மொழியில் பாண்டித்தியம், லண்டன், பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்ரேலியா, கனடா, நைஜீரியா, மாலை தீவு என உலக வலம், அமெரிக்கா நாசாவில் ஆலோசகர்கள் என ஒரு அசுர முன்னேற்றம்.

இவை அனைத்தும் தமிழ் குழுக்கள் ஆயுதம் தூக்கி நம்மை விரட்டி, மிரட்டிய பின்னர் தான் நடந்தது. இவர்கள் ஆயுதம் தூக்காமல் இருந்திருந்தால், பொத்துவில் முஸ்லிம் மாடு வளர்த்துக் கொண்டும், அக்கரைப்பற்று முஸ்லிம்கள் கடை வைத்துக் கொண்டும், ஒலுவில், பாலமுனை முஸ்லிம்கள் மீன் பிடித்துக் கொண்டும், நிந்தவூர், கல்முனை, சம்மாந்துறை முஸ்லிம்கள் அரிசி ஆலை வைத்துக் கொண்டும், காத்தான்குடி முஸ்லிம்கள் ஊர் ஊராக சென்று பொட்டணி வியாபாரம் செய்து கொண்டும், மூதூர், தோப்பூர், கிண்ணியா முஸ்லிம்கள் ஊர் ஊராகப் போய் நெல் அறுவடை செய்து கொண்டும், மன்னார், தலை மன்னார் முஸ்லிம்கள் கூலிக்கு மீன் பிடிக்கச் சென்று கொண்டும், எருக்கலம்பிட்டி, யாழ். முஸ்லிம்கள் கொழும்புக்கும் வடக்குக்கும் போக்குவரத்து வியாபாரம் செய்து கொண்டும் இருந்திருப்பர்.

இந்நிலையில் யாழ் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்றி என்ன லாபம் அடையலாம் என்பதைவிட, பிரபாகரன் அனுமதி தந்தால் போதும் என காணும் முஸ்லிம் கொங்கிரஸ்காரர்கள் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1948 முதல் 1976 வரை தமிழ் மக்கள் மீது விழுந்த ஒவ்வொரு அடியின் வலிதாங்காமல் தான் தமிழ் இனம் கிளர்ந்தெழுந்தது. அது ஆயுதப்போராட்டமாக வெடித்தது. நிறைய இழப்புக்களின் பின் இப்போது ஒரு வழியாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது.

1948 முதல் 1976 வரை சிங்கள ஸ்ரீ சட்டம், சிங்களம் மட்டுமே சட்டம், குடியேற்றத் திட்டங்கள் என ஒவ்வொன்றாக தமிழ் மக்களை நெருக்கி, இறுதியாக "தரப்படுத்தல்" என்ற கொடுமை வந்த போது தான், தமிழ் இளைஞர்கள், தமிழ் தலைவர்களின் வாய் ஜாலங்களை எல்லாம் தூக்கித் தூர விசிவிட்டு, ஆயுத ஜாலம் காட்டத் தொடங்கினர்.

இந்தக் கிளர்ச்சியினால் சிங்கள இனம், எதுவுமறியாத சிங்கள இளைஞர்களை இழந்தது, பொருளாதாரத்தை இழந்தது, தலைவர்களை இழந்தது, ஏன் முழுநாடுமே சோபை இழந்தது.

ஆனால் அனைத்தையும் இழந்தும் இன்று வரை சிங்கள அரசுகள் எதையாவது விட்டுக் கொடுத்ததா? குடியேற்றத் திட்டங்களை நிறுத்தினார்களா? தமிழுக்கு சம உரிமை உண்மையாகவே கொடுத்தார்களா? வட-கிழக்கில் சுதந்திரமாக நம்மை நடமாடவிட்டார்களா?

பண்டா-செல்வா ஒப்பந்தம், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், ஜேஆர்-ராஜிவ் ஒப்பந்தம் என ஒவ்வொரு விதமான ஒப்பந்தங்களாக வந்தனவே! இவற்றின் மூலம் சிங்கள அரசுகள் நமக்கு (தமிழ் பேசுபவர்களுக்கு) எதையாவது விட்டுத் தந்ததா? வட-கிழக்கு முதலமைச்சரையும், அவரது சகாக்களையும் கப்பலில் ஏற்றி ஒரிசாவுக்கு விரட்டினார்களே!

அம்பாறை மாவட்டத்தில் 1948 இல் 438 குடும்பங்களாக இருந்த சிங்கள மக்கள், 1971 இல் 32ஆயிரமாக மாறி, இப்போது 148ஆயிரமாகப் பெருகியுள்ளதுடன், தெருவுக்குத் தெரு தனிச் சிங்கள இராணுவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளதே! இவற்றில் ஒரு துரும்பையாவது இந்த விடுதலைப் போராளிகளால் அசைக்க முடிந்ததா? அல்லது, மாறி மாறி வரும் சிங்கள அரசுகளுக்கு வால் பிடித்து முஸ்லிம் இளைஞர்களின் கூரிய சிந்தனைகளை மழுங்கடிக்க முயலும் உங்களைப் போன்ற கோட், சூட் அணிந்த முஸ்லிம் கொங்கிரஸ் போராளிகளால் முடிந்ததா?

முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேற அனுமதிக்க வேண்டும் என பிரபாகரனிடமும், கிழக்கில் நாம் சகஜமாக உலாவ அனுமதிக்க வேண்டும் என கரிகாலனிடமும் பிச்சை கேட்கும் இந்தத் தலைவர்கள்,

முதலில் சிங்கள அரசியல் வாதிகள் தமிழீழத்தை தங்கத்தாம்பாளத்தில் வைத்து கொடுத்து விடுவார்கள் என நினைக்கின்றார்களா? ஆகக் குறைந்தது மாநில சுயாட்சியாவது!!

சொல்லேர் உழவர்கள், வார்த்தை ஜாலத்தாலேயே பாராளுமன்றத்தை கலக்குபவர்கள், வக்கீல்கள். QCக்கள், ட்ரயல் அட்பார்களை வெற்றி கண்டவர்கள் என தார்மீகவழி போராடிய அத்தனை தமிழ் தலைவர்களின தலையிலும் மிளகாய் அரைத்து விட்டு, முடிந்த முடிவு தமிழீழமே எனப் புறப்பட்ட தமிழ் குழுக்களை எல்லாம் விலைபேசி கொழும்பில் வீடு, பணம், ட்ரோபோ இன்டர்கூலர், ஆயுதங்கள் என வழங்கி கொரில்லாக்களை, மனுஷக்குரங்குகளாக்கி, இறுதியில் பசித்தாலும் புல்லைத்தின்னாது என்ற அந்த மிருகத்தையும் விலைபேசி ஆயுதங்கள் கொடுத்து இந்திய இராணுவத்தை எதிர்க்கப் பண்ணி "இளைத்தாலும் சிங்கம் கௌரவத்தை விட்டுக் கொடுக்காது" என்று ஆணவம் பேசும் "சிங்க" அரசுதான் இன்று ஆட்சிக்கு வந்துள்ளது என்பதை முஸ்லிம் கொங்கிரஸ் போராளிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மறந்து விடக் கூடாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதான ஒப்பந்தங்களாக மாறி, சமாதான ஒப்பந்தம் யுத்த நிறுத்த ஒப்பந்தமாகி, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் போது பேச்சுவார்த்தைகள் தொடங்கி ஒவ்வொரு பிரச்சினையாக தூசு தட்டப்படும்.

வட-கிழக்கில் எமது ஆட்சி வேண்டும் என்பார்கள் அவர்கள். இல்லை வடக்கை மட்டும் தான் விட்டுக் கொடுப்போம் கிழக்கில் நாம்தான் மெஜாரிட்டி என்பார்கள் இவர்கள். 1948 சுதந்திரத்துக்கு முன்பிருந்த மாதிரி என்பார்கள் தமிழர்கள். இல்லை இல்லை 1991 குடிசன மதிப்பீட்டுக்குப் பின்பு உள்ளது போல் என்பார்கள் சிங்களத் தலைவர்கள். ஆம்.

பிரச்சினைகளுக்கு பிள்ளையார் சுழிகள் போடப்படும். அதற்கிடையில் பதவி சுகம் கண்ட, உறுமீன் வரும் வரை வாடி வதங்கி இருக்கும் ஏனைய தமிழ் குழுக்கள் குட்டைக்குள் மீன் பிடிக்க முயல்வார்கள் இதற்கிடையில்,

சிஹல உறுமய, பூமிபுத்திர, சிங்கள மகாசங்கம், பௌத்த துறவிகள், ஜே.வி.பி, மகாநாயக்கர்கள் எல்லாம் எரியும் அப்பாவி சிங்கள மக்களுக்கு எண்ணை ஊற்றுவார்கள். இதை எல்லாம் விக்கிரமாதித்தர்களாக வெற்றி கண்டு, பலாலியிலிருந்து புஸ் பைஸிக்கிளில் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் கோண்டாவில், திருநெல்வேலி சந்தி, கள்ளியங்காடு ஊடாக யாழ் டவுன் வந்து, கல்யாணி ஐஸ் கிறீம் இல் ஒரு கூல் கூலாக அடித்து விட்டு ஜாலியாக வேலணைக்கு போக வைத்து, ஆம் யாழ் தமிழர்களே ஒன்று பட்டு விட்டார்கள் என்ற ஒரு சுதந்திரச் சூழ்நிலை தோன்றிய பின்தான், யாழ்ப்பாண முஸ்லிம் யாழ்ப்பாணத்தில் குடியேற வேண்டுமா? இல்லையா? என்பதை யோசிக்க வேண்டும்.

இந்தியா தமது அருகில் இருக்கும் யார் மீது கருணை காட்டுகின்றதோ அவர்களுக்கு கெட்டகாலம் ஆரம்பித்து விடும் என்பதை முதலில் ஸ்ரீலங்காவில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களுடன் சேர்ந்து வெள்ளையரை விரட்டிய ஜின்னா மீது இரக்கப்பட்டு தனியாக பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்தார்கள் அந்நாடு தலைவர்களை இழந்து, தலைவர்கள் இல்லாமல் சீரழிகிறது. முஜிபுர் ரஹ்மான் மீது இரக்கப்பட்டு "முக்தி பாஹினி" இயக்கத்துக்கு பயிற்சி கொடுத்தார்கள். வங்களா தேசம் பிச்சைக்கார நாடாக மாறியது. ஸ்ரீ லங்காவில் தமிழர்கள் மீது இரக்கப்பட்டார்கள், பயிற்சி அளித்தார்கள். இறுதியில் ஸ்ரீ லங்கா தமிழரை இருக்க இடமுமில்லாமல் ஆக்கியுள்ளார்கள். இப்போது இலங்கையில் "எவ்ரிதிங் ஓகே" என்ற நிலை தோன்றினால், டில்லியில் கூடும் RAW க்கும் CBI க்கும் காய்ச்சல் பிடிக்கும். அப்புறம் ஸ்ரீலங்காவில் உள்ள மக்கள் மீதோ அல்லது, ஒரு ஆயுதக் குழு மீதோ இந்தியாவுக்கு இரக்கம் ஏற்படலாம்.

எனவே இங்கிருந்து கொண்டு கரிகாலனுக்கும், பிரபாகரனுக்கும், நோர்வேக்கும், ரணிலுக்கும் அன்னம் விடு தூது, புறா விடு தூது போகும் முஸ்லிம் கொங்கிரஸ் போராளிகளே! தயவு செய்து டில்லியிலிருந்து கொண்டு சட்டாம் பிள்ளை வேலை பார்க்கும் இந்திய மத்திய அரசு என்ன முடிவில் உள்ளது என்பதையும் அறிந்து விட்டு எமது மக்களை பட்டறைக்கு அனுப்புங்கள்.

○

பகுதி - V



CORBIS-BETTMANN



Hulton Deutsch

# முதலாம் உலகப் போருக்குப் பின்னர் சுயநிர்ணய உரிமை பற்றிய விழிப்புணர்வு

*-வி.ரி.தமிழ்மாறன்*

ஒஸ்ரியா- ஹங்கேரி, ஜேர்மனி, பல்கேரியா, ஒற்றமான் பேரரசு போன்றவற்றுக்கு எதிரான நேச நாடுகளின் யுத்தத்தின் பின்னணியில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு இருப்பதாகப் பெரிதாகப் பேசப்பட்டது. குடியுரிமை பற்றிய கோட்பாட்டினையும் மக்கள் குழுக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கான உரிமையினையும் எப்படிச் செயலுருப்படுத்துவது என்பதற்காகவே தாம் யுத்தத்தில் இறங்கியதாகப் பெரும்பாலான நேசநாடுகள் அப்போது கூறிக்கொண்டிருந்தன. ஆனால் நேச நாடுகள் இது விடயமாகப் பேசுவதற்கான ஏதேனும் தகுதியைக் கொண்டிருக்கின்றனவா என்ற சந்தேகத்தை எம்மைப் போலவே அவ்வேளையில் ஜேர்மனியும் ஒஸ்ரியாவும் எழுப்பியிருந்தன. தமது நாடுகளிலும் குடியேற்ற ஆட்புலங்களிலும் இதே நேசநாடுகள் சிறுபான்மையினரையும் வேறு குடியுரிமைக்காரர்களையும் மக்கள் குழுக்களையும் எவ்விதம் நடாத்தின என்பதை வைத்துப் பார்த்தால் இவற்றுக்கு சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசும் யோக்கியதை உள்ளதா எனற வினாவில் உள்ள நியாயத்தை உணர முடியும்.

ஐரிஸ் மக்கள், பின்னிஷ் மக்கள் குழுக்கள், போவார் குடியரசுகள் (தென்னாபிரிக்கா), மற்றும் பிரித்தானிய, பிரெஞ்சு, இத்தாலிய ஆட்சிக்குட்பட்ட வட ஆபிரிக்கக் குடியேற்றங்களில் நேசநாடுகள் நடந்து கொண்ட விதம் இது விடயத்தில் குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு கிரீஸ் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையையும் எளிதில் மறந்துவிட முடியாது.

தோற்கடிக்கப்பட்ட நாடுகளுடன் சமாதான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் என்று வரும் போது மக்கள் குழுக்களின் உரிமை என்பதற்கும் மேலாக வேறு அரசியல் நலன்கள் முக்கியம் பெற வேண்டும். லெனின் வெளிப்படையாகவே வாதிட்டிருந்ததை முன்னர் Brest - Litovsk பொருத்தனை பற்றிக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருந்தேன். ஜேர்மனிக்குச் சில ஆட்புலங்களையும் தேசங்களையும் ஒப்படைப்பது பற்றித் தீர்மானிக்கையில் ரஷ்யாவில் சோசலிஸம் பரவவேண்டும் என்ற அக்கறையினால் லெனின் சுயநிர்ணய உரிமையை முன்னிலைப்படுத்தாமற் செயற்பட்டமை தான் இந்த நிலைப்பாடு.

வேர்சைலெஸ் உடன்படிக்கை என்பது 1919 ஜூன் 28 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்டதாகும். ஜேர்மனியுடனான இந்த உடன்படிக்கையின்படி ஆட்புலங்கள் புதிய அரசுகளான

போலந்துக்கும் செக்கோஸ்லாவாக்கியாவுக்கும் கைமாற்றப்பட்டன. இங்ஙனஞ் செய்கையில் இந்த ஆள்புலங்களிலுள்ள மக்களைக் கலந்தாலோசித்ததுமில்லை. அவர்களின் சம்மதம் பெறப்பட்டிருக்கவுமில்லை. இதே விதத்தில் சீனாவின் ஆட்புலமான கியாசௌ (Kiaochow) மீதான கட்டுப்பாடு ஜப்பானுக்குக் கையளிக்கப்பட்டது. ஆட்புலங்களைப் பிரித்தளிப்பது தொடர்பில் அந்தந்தப் பகுதி மக்களின் கருத்தறிதல் என்பதற்கான எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒஸ்ரியாவுடனான (10 செப்டெம்பர் 1919) உடன்படிக்கையின் பிரகாரம் Tyrol/Alto பிரதேசம் இப்பகுதி மக்களின் விருப்புக்கு மாறாக இத்தாலிக்கு ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் ஒஸ்ரியா வசமிருந்த சில பிரதேசங்கள் போலந்து, ருமேனியா வசமாகின. ஜேர்மனியுடன் கூட்டுச் சேருவதிலிருந்து ஒஸ்ரியா தடுக்கப்பட்டது.

ஒற்றமன் பேரரசுடனான லூசென் உடன்படிக்கையும் (24 ஜூலை 1923) இது விடயத்தில் குறிப்பிடத்தக்கது. இதன் ஏற்பாடுகளின்படி ஆர்மேனியருக்குச் சுதந்திர அரசு கிடையாது என்றும் குர்திஸ்தான் சுயாட்சியும் கற்பனையே என்றும் அடித்துச் சொல்லப்பட்டது.

இவற்றுக்கும் மேலாக ஆட்களை இடமாற்றுதல் என்பதிலேயே அதிக அக்கறை காட்டப்பட்டது.

துருக்கியில் வாழும் கிரேக்கர்கள் கிரேக்கத்துக்கும் அங்ஙனமே கிரேக்கத்தில் வாழும் துருக்கியர் துருக்கிக்கும் இடமாற்றப்படுவதற்கு இந்த உடன்படிக்கை ஏற்பாடு செய்தது.

எனவே முதலாவது உலகப் போரில் வெற்றிபெற்ற சக்திகளின் பூகோள அரசியல், பொருளாதார, கேந்திர முக்கியத்துவ நலன்களுக்கு எதிரான விதத்தில் மக்களின் விருப்பம் அமைவது நிச்சயமான சந்தர்ப்பங்களில் எல்லாம் சுயநிர்ணய உரிமை என்பது பொருத்தமற்றதொன்றெனவே இச்சக்திகளினால் கருதப்பட்டன. இது லெனின் முதல் வில்சன் வரைக்கும் பொருந்துவதாகவே இருந்தது. கருத்தறியும் வாக்கெடுப்பு பொருத்தமற்றது அல்லது நேசநாடுகளின் நலன்கள் பாதிக்கப்படும் என்று வரும்போது அவ்வப் பிரதேச மக்கள் கலந்தாலோசிக்கப்பட்டது கிடையாது. இந்தக் கசப்பான உண்மையை ஒப்புக்கொள்ளும் விதத்தில் வில்சன் 1919 செப்டெம்பர் 17 ஆந் திகதியன்று சன் பிரான்சிஸ்கோ நகரில் ஆற்றிய உரையின் பின்வரும் பகுதி அமைந்திருந்தது:

"தோற்கடிக்கப்பட்ட பேரரசுகளின் ஆட்புலங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த மக்கள் குழுக்கள் தவிர்ந்த ஏனைய ஏனையோரின் சுயநிர்ணய உரிமை பற்றிச் செயற்படுதல் என்பது சமாதான மாநாட்டுச் சிறப்புரிமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை".

ஆயினும் சுயநிர்ணய உரிமை பற்றிய கோஷங்களினால் தான் அக்காலப்பகுதியில் ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் கருத்தறியும் வாக்கெடுப்புக்கள் நடாத்தப்பட்டன என்பது உண்மையேயெனினும் எந்தெந்தப் பகுதிகளில் இந்த வாக்கெடுப்பை நடாத்துவது என்பதை நேசநாடுகள் தீர்மானித்த விதமானது மனம்போனபோக்கில் அமைந்ததாக இருந்தது.

தங்கள் தலைவிதியைத் தாமே தீர்மானித்தல் என்பதிலும் யார் அப்படித் தீர்மானிக்கலாம் என்பதைப் "பெரியவர்களே" தீர்மானித்தனர். இங்ஙனம் பார்க்கும்போது இவற்றின் இந்தச் செயற்பாடானது சுயநிர்ணய உரிமை என்பது ஒரு கோட்பாடாகப் பிரயோகிக்கப்பட வேண்டியது என்பதற்கு முற்றிலும் மாறானதாகவே அமைந்திருந்தது எனலாம். இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் சமாதான உடன்படிக்கையின் மூலம் பிறந்த புதிய அரசுகள்கூட ஜனநாயகவழி அரசாங்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதிலும் நேசநாடுகள் அதிக அக்கறை காட்டவில்லை என்பது தான். ஆளப்படும் மக்களின் சம்மதத்துடனேயே ஆட்சியை நடாத்துமாறு அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கவில்லை.

ஆயினும் சில அரசுகள் சிறுபான்மையினரின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்பது சுயநிர்ணய உரிமை வரைக்கும் செல்லாமல் குழுக்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான யதார்த்தமான வழிமுறையென அப்போது உணரப்பட்டது. ஆனால் இது இன்னொரு புதிய பிரச்சினைக்கு வித்திட்டது. சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாத்தல் என்பது சுயநிர்ணய உரிமைப் பிரயோகமே என்ற தப்பான கருத்து பின்னாளில் வளர்வதற்கும் இந்த ஏற்பாடுகளே வழிசமைத்துக் கொடுத்திருந்தன.

நாடுகள் அவையினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்பு முறைமை என்பது தன்னளவிலேயே இரண்டு பிரதான குறைபாடுகளைக் கொண்டதாக இருந்தது. சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க/ஏற்றுக்கொள்ள விரும்பாதோரின் அடுத்த விருப்புரிமைத் தீர்வாக இது அமைந்திருந்தமை முதலாவது குறைபாடு. கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமேயன்றி "பெரியவர்"களுக்கோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இது பாவிக்கப்படக் கருதப்பட்டிருக்கவில்லை என்பது அடுத்த குறைபாடாகும்.

அத்துடன் நாடுகள் அவையினை உருவாக்கிய கட்டுறுத்துப் பட்டயத்திலும் சுயநிர்ணய உரிமை பற்றிக் குறிப்பேதும் கிடையாது என்பதையும் ஏற்கெனவே பார்த்தோம். வில்சன் இதனை உள்ளடக்குமாறு வலியுறுத்தியிருந்த போதிலும் கட்டுறுத்தினை வரைந்தோர் States என்ற சொற்களுக்குப் பதிலாக Nations என்ற சொற்கள் இருப்பதே போதுமானது என்று சாதித்தனர். இவை இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் மிகக் குறைவே என்று வாதிட்ட பிரிட்டிஷ் பிரதிநிதி Nations என்ற சொல்லை ஏற்கும்படி செய்துவிட்டார்.

ஒலாண்ட் தீவுகளின் தலைவிதி பற்றித் தீர்மானிப்பதற்கான ஆலோசனை சர்வதேசச் சட்டவாளர் குழுவிடம் கோரப்பட்டிருந்தது. இக்கோரிக்கை நாடுகள் அவையினால் விடப்பட்டிருந்தது. இதற்கமையச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

"முதலாம் உலக யுத்த காலத்தில் தெளிவுகுறைந்த ஓர் அரசியல் கருத்தேற்பாகவும் வாய்வீச்சுச் சுலோகமாகவும் சுயநிர்ணய உரிமை பற்றிய விடயம் இருந்து வந்திருந்தாலும் அது சர்வதேசச் சட்ட விதிகளின் ஒரு பகுதியாக அமைந்திருக்கவில்லை".

ஒலாண்ட் தீவுகள் விடயம் நாடுகள் அவையினால் எங்ஙனம் கையாளப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

(தொடரும்)

---

**பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்? -7**

*- பாலரட்ணம்*

# அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றி ஜே.வி.பி. இப்போது ஏன் மூச்சு விடுவதில்லை?

ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசும் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் நாட்டில் நிரந்தரப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து அமைதிக்கான புதிய வரலாறு படைத்துள்ளன.

இந்த அமைதிக்கு நாங்கள் தான் வழிவகுத்தோம். ஜனாதிபதி தான் நோர்வேயின் மத்தியஸ்தத்தைக் கொண்டு வந்தார். நாட்டில் போர் ஓய்ந்து அமைதி நிலவ வேண்டும் என்பதே ஜனாதிபதியின் ஒரே ஆவல் என்று ஒரு கூக்குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கா துணிச்சலுடன் மேற்கொண்ட முயற்சியை ஜனாதிபதி சந்திரிகாவும் முன்னரே செய்திருக்கலாமே?

சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொள்வதாகச் சொல்லிக் கொண்டு




சமாதானத்துக்கான போரை நடத்தியதன் விளைவை இன்று ஜனாதிபதி கண்கூடாகக் காண்கிறார்.

மனிதர்களில் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அந்நிய நாடுகளின் ஆயுதங்களிலும் நவீன போர்ப்படைச் சாதனங்களிலும் அதீத நம்பிக்கை வைத்ததை ஜனாதிபதி.இன்று உணர்ந்தாலும் சொல்ல முடியாத அவஸ்தை!

இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சி வெற்றியளித்து விடுமோ என்ற ஆதங்கம் பேரினவாதிகளிடம் ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்கள் அனைத்தையும் விடத் தயாராக உள்ளார்களா?

தனிநாட்டுத் (தமிழீழக் கோரிக்கை) கோரிக்கையை புலிகள் கைவிடுவதற்கு உண்மையிலேயே தயாராக இருக்கிறார்களா?

இந்தக் கேள்விகளையே பேரினவாதிகளும் பேரினவாதக் கட்சிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கிளறிக் கொண்டே இருக்கின்றன.

இலங்கையில் முதன் முதலாக ஆட்சி யதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் ஏந்திக் கிளர்ச்சி நடத்திய மக்கள் விடுதலை முன்னணியும் இன்று இதே கேள்விகளைக் கேட்டு நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்று தலைநகரிலும் புற நகர்களிலும் கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்து தமது நடவடிக்கையின் மூலம் நாட்டில் அரசுக்கெதிராகவும் சமாதானத்துக் கெதிராகவும் குழப்பத்தை ஏற்படுத்தலாமென்று கருதுகிறது.

இடதுசாரிகள் என்று தம்மைப் பெருமையுடன் அழைத்துக் கொண்டே மக்கள் விடுதலை முன்னணி இப்பொழுது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா யாருடைய அழைப்பு மில்லாமலே மூக்கை நுழைத்துக் கொண்டு வருவதைப் பற்றிக் கண்டும் காணாமலிருப்பது ஏன் என்று தெரியவில்லை.

தமிழீழக் கோரிக்கை பற்றி மக்கள் விடுதலை முன்னணியும் சரி மற்றும் அரசியல்வாதிகளும் சரி குரல் எழுப்புவதைப் பார்த்தால் "தமிழீழம்" என்ற கோரிக்கை இப்போதுதான் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதைப்புலிகள் கைவிடவேண்டு

தொடர்ச்சி 10ம் பக்கத்தில்

பயங்கரவாதத் தடைச் சட்டம்
சமூக கொல்லி ஒன்றின் சமகால அனர்த்தங்கள் - 5

# சட்டப்புலிகள் கோட்டை விட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம்

- சிசைரோ

பயங்கரவாதத் தடைச் சட்டம் தயாராகின்றது என்பதும் அது அவசர சட்டமூலம் என்ற வடிவில் கொண்டுவரப்படப் போகின்றது என்பதும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அப்போது நன்கு தெரிந்தே இருந்தது. ஏற்கெனவே 1978 இல் கொண்டு வரப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம் என்பதை வாபஸ் பெற்றுவிட்டு அந்த இடத்தில் புதிய சட்டத்தை அறிமுகஞ் செய்யத் திட்டமிடப்பட்டது. ஓர் இயக்கத்தைத் தடைசெய்தல் என்பது அந்த இயக்கம் சுதந்திரமாகச் செயற்படுவதைத் தடைசெய்வதாக இருந்தாலும் பொதுமக்களை அது பாதிக்கும் விதத்தில் அமைந்திருப்பதில் சில மட்டுப்பாடுகள் இருக்கும். உதாரணமாக குறிப்பிட்ட ஒரு செயல் குற்றமாவதற்கு முன்னால் அச்செயல் தடைசெய்யப்பட்ட இயக்கத்திற்காகச் செய்யப்பட்டது என்பது நிரூபிக்கப்பட வேண்டியிருக்கும். இதில் வாதிடுவதற்கு நிறையவே ஏதுக்கள் இருக்கும். நீதிமன்றம் ஓரளவு செயற்பாட்டுச் சுதந்திரத்துடன் இயங்கி வழக்குகளை அணுக முடியும். சுருக்கமாகச் சொன்னால் அத்தகைய சட்டமொன்று ஓர் இயக்கத்தைக் குறிவைக்குமே தவிர ஒட்டுமொத்தமாகப் பொதுமக்களைக் குறிவைக்காது. புலித்தடைச் சட்டத்தை அகற்றிவிட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவர எத்தனித்த போது யாருக்குக் குறிவைக்கப்படுகின்றது என்பதை அடையாளங் காண்பதில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோட்டை விட்டுவிட்டனர் என்பது எனது கருத்தாகும். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம், யாழ் கச்சேரிவாயிற் சத்தியாக்கிரகம் என்பவற்றால் மட்டுமன்றி அவ்வப்போது நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்கள் மூலமும் தமிழ் மக்களை மௌனமாக்குதலுக்கான யுக்தி என்பது அரச வன்முறையை ஏதொவொரு விதத்தில் அவிழ்த்து விடல் என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்த நிலையில் தலைமைகள் அதனை நன்கறிந்திருக்கவில்லை என்ற வாதம் அவ்வளவாக நம்பும்படியாக இல்லை என்பதே உண்மையாகும். அரச பயங்கரவாதத்துக்குச் சட்ட முலாமிடப்படுகின்றது என்பது அதியுயர் ஆற்றல்மிகு சட்ட அறிஞர்களைக் கொண்டிருந்த தமிழ்க் கட்சிகள் அந்நேரம் புரிந்து கொண்டிருக்கவில்லை என்பதற்கான காரணமாகப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படலாம். சட்டம் ஒரு வருடத்துக்கே நடைமுறையில் இருக்கும் என்றும் அதனாலேயே அதற்குத் தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் கூட்டணியினருக்கு அப்போது கூறப்பட்டதாகத் தெரிகின்றது. புலித்தடைச் சட்டத்தால் இளைஞர்களது தீவிரவாதத்தை ஒழிக்க முடியவில்லை என்றால் ஓராண்டின் பின்னர் கொண்டுவரப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் அது எப்படி ஒருவருடத்துக்குள் சாத்தியப்படும் என்ற வினாவினைக் கூட்டணித் தலைமை ஜே. ஆரிடம் எழுப்பியதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தைப் போலவே தமிழ்த் தலைமைகளும் அப்போதுள்ள சூழ்நிலையில் இருக்கின்ற


பிரச்சினையை வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகவே பார்த்தனர் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. மறுபுறத்தில் அமைச்சர் தேவநாயகம் போன்றோர் தமது தேசியக்கட்சி அரசியலுக்கு இளைஞர்கள்

பெற்றுப் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் தான் ஆகியிருந்தது. எனவே எந்தச் சட்டத்தை அக்கட்சி நிறைவேற்ற விரும்பினாலும் அதைத் தடுத்து நிறுத்தும் வல்லமை எவருக்கும் அல்லது எந்தக் கட்சிக்கும் அப்போது

இனிச் சட்டமூலத்தைக் கவனிப்போம். சட்டமூலத்தை ஜனாதிபதி உயர்நீதிமன்றின் முக்கிய அமர்வின் முன்னிலையில் ஆலோசனை கேட்டு அனுப்பினார். ஏற்கனவே நான் குறிப்பிட்டதன்படி நீதிமன்றின் பணி மிக

அச்சுறுத்தலாக அமைவதாகவும் அவர்களைக் கூட்டணியினர் தூண்டிவிடுவதாகவும் முறைப்பட்டுக் கொண்டிருந்ததால் கூட்டணிக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமையிருந்தது என்பதும் உண்மையே. தாம் தூண்டிவிடவில்லை என்றால் சட்டத்தை மீறும் இளைஞர்களது செயல்களை எப்படி நியாயப்படுத்துவது என்ற சிக்கல் கூட்டணிக்குத் தொடர்ந்தும் இருந்தே வந்தது. எனவேதான் ஒருவருட காலத்துக்கே சட்டம் கொண்டு வரப்படுகின்றது என்ற போது அதுபற்றி மேலும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று தமிழ்த் தலைமைகள் நம்பியிருக்கலாம். அத்துடன் தம்வசமுள்ள சட்டவல்லுனர்களின் எண்ணிக்கையை வைத்தும் அவர்களுக்கு ஓர் அசாத்தியத் துணிச்சல் ஏற்பட்டிருக்க நியாயமுண்டு. வருவது வரட்டும், நீதிமன்றில் ஒருகை பார்த்து

இருந்திருக்கவில்லை என்பதும் உண்மை தான். சர்வசன வாக்கெடுப்புக்கு விட்டிருந்தாலும் சட்டம் நிச்சயம் நிறைவேறியிருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக தமது எத்தகைய எதிர்ப்பும் ஜனாதிபதியை தயக்கமுறச்


திலக் மாரப்பன

இலகுவானதாக இருந்தது. சட்டமூலத்தின் தலைப்பில் அது அவசர சட்டமூலம் என்று அமைச்சரவையினால் கருதப்பட்டிருப்பதாகவும் எனவே மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகவும் குறிப்பிட்டு ஆலோசனை கேட்டு அனுப்பினால் நீதிமன்றம் அரசியலமைப்பின் உறுப்புரை 120(இ) யின் பிரகாரம் மட்டுமே கருத்துச் சொல்ல வேண்டும் எனப் பார்த்தோம். அதாவது இச்சட்டமூலம் மக்கள் தீர்ப்புக்கு (சர்வசன வாக்கெடுப்புக்கு) விடப்பட வேண்டுமா இல்லையா என்பதையே உயர்நீதிமன்றம் கூறமுடியும். அதற்கும் அப்பாற்போய் கருத்துச் சொல்லத் தேவையிராது. 1979 ஜூலை 17 ஆம் திகதி இச்சட்டமூலம் உயர்நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அன்றைய தினமே கருத்துச் சொல்லுமாறும் கேட்கப்பட்டது. ஏற்கெனவே அவசரமானது என்ற முத்திரை குத்தப்பட்டு அனுப்பி வைக்கட்டுள்ள சட்டமூலம் என்பதால் பிரதம நீதியரசரும் உடனடியாகவே மூவர் கொண்ட அமர்வைக் கூட்டினார். பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன், ஜீ. ரி. சமரநாயக்கா, ஆர். எஸ். வனசுந்தர ஆகியோரைக் கொண்ட அமர்வே இச்சட்ட மூலத்தை ஆராய்ந்தது. அரசாங்கத்தின் சார்பில் சட்டமூலம் பற்றி விளக்கமளிப்பதற்காக அப்போதைய பிரதிச் சொலிசிஸ்டர் ஜெனரல் ஜி. பி. எஸ். டி. சில்வா (பின்னர் பிரதம நீதியரசராக பதவி வகித்தவர்), சிரேஸ்ட அரச சட்டத்தரணி திலக் மாரப்பன பின்னர் சட்டமா அதிபதியாக இருந்து தற்போது பாதுகாப்பு அமைச்சராக இருப்பவர்), அரச சட்டத்தரணி சூரி ரத்னபால ஆகியோர் ஆஜரானார்கள். நீதிபதிகளின் தீர்ப்பு ஒரு பந்தியில் அமைந்து விட்டது. "அமைச்சரவை ஏற்கனவே இதனை மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை கொண்டு நிறைவேற்ற உள்ளதால் மக்கள் தீர்ப்புக்கு இது விடப்பட வேண்டுமா என்பதையே நாம் தீர்மானிக்க வேண்டும். அங்ஙனம் பார்க்கையில் அத்தகையதொரு தேவை இச்சட்டமூலத்துக்குக் கிடையாது" என்பதே தீர்ப்பாகும். மக்கள் தீர்ப்பு அல்லது சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டிய விடயங்கள் யாவை? என்பதை அரசியலமைப்பு உறுப்புரை 83 கூறுகின்றது: உறுப்புரைகள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 11, மற்றும் 30, 62 என்பவற்றுக்கு முரணான ஏற்பாடுகள் சட்டமூலம் ஒன்றிலிருந்தால் அச்சட்டமூலம் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும்.

(தொடரும்).

**அரசாங்கத்தின் சார்பில் சட்டமூலம் பற்றி விளக்கமளிப்பதற்காக அப்போதைய பிரதிச் சொலிசிஸ்டர் ஜெனரல் ஜி. பி. எஸ். டி. சில்வா (பின்னர் பிரதம நீதியரசராக பதவி வகித்தவர்). சிரேஸ்ட அரச சட்டத்தரணி திலக் மாரப்பன (பின்னர் சட்டமா அதிபதியாக இருந்து தற்போது பாதுகாப்பு அமைச்சராக இருப்பவர்), அரச சட்டத்தரணி சூரி ரத்னபால ஆகியோர் ஆஜரானார்கள்.**

விடுவோம் என்று நம்பிக் கொண்டிருந்திருந்திருக்கலாம். எப்படியிருந்திருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பயங்கரவாதத் தடைச் சட்டமூலத்தின் பிரதியைப் பெற்று வாசித்துப் பார்த்தார்களா? ஆம் எனின், அங்ஙனம் வாசித்துப் பார்த்தவர்கள் யார்? அதில் ஆட்சேபனையான ஏற்பாடுகள் உண்டென்றால் அதுகுறித்து அவர்கள் யாருடனாவது கலந்தாலோசனை செய்தார்களா? செனட்டர் சி. நடேசன் கியூ.சி, வி. எஸ். ஏ. புள்ளேநாயகம் போன்ற சட்ட வல்லுனர்களுடனாவது அவசர ஆலோசனை நடாத்தப்பட்டதா என்றால் விடை இல்லையென்றே தான் கூற வேண்டும். சரி, அங்ஙனமாகக் கவனமாகச் செயற்பட்டிருந்தாலும் தம்மால் என்னதான் செய்திருக்க முடியும் என்று கூட்டணி முக்கியஸ்தர்கள் என்னிடம் பின்னாட்களில் பிரஸ்தாபித்ததுண்டு. ஏனெனில் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு ஆறிலைந்து பெரும்பான்மைப் பலமிருந்தது. அத்துடன் மக்களின் ஏகோபித்த ஆதரவை ஐக்கிய தேசியக்கட்சி

செய்யாது என்பதையும் கூட்டணியினர் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். மேலும் வாராது வந்த மாமணிபோல எதிர்க்கட்சித் தலைமையும் தங்கள் கைவசம் வந்திருப்பதால் அதையும் போட்டுடைப்பதற்கு தலைமைகள் தயாராக இல்லாதிருந்திருக்கலாம். எனவே எதிர்ப்புகள் மக்கள் மயப்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமற் போய்-விட்டது. அப்போது நல்லமுறையிற் செயற்பட்டுக்கொண்டிருந்த குடியியல் உரிமைகளைப் பேணும் அமைப்புக்கள் கூட இச்சட்டமூலம் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கவில்லை என்பதை அத்தகைய ஸ்தாபனங்களின் முக்கியஸ்தர்கள் பின்னர் பல சந்தர்ப்பங்களில் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டதோடு சட்டமூலம் அவசரஅவசரமாக நிறைவேற்றப்பட்டமையே தமது கவனக் குறைவுக்குக் காரணம் என்றும் குற்றஞ்சாட்டினர். இந்தப் பின்னணியில்தான் இச்சட்டமூலம் ஏன் அவசரச் சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## அமெரிக்க...

மென்று கேட்பது போலவும் இருக்கிறது.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது.

1920 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் அதிகாரப் பரவலாக்கத்துக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவ முறையை வெள்ளைக்கார அதிகார வர்க்கத்தினர் கொண்டு வந்தனர். கொழும்பில் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இது கருத்து வேற்றுமையைத் தோற்றுவித்தது.

இதன்பின்னர் சோல்பரி கமிஷன் முன் ஜி.ஜி.பொன்னம்-பலம் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சமபலப்பிரதி நிதித்துவம் கோரினார். (இதை சிங்களவர்கள் ஐம்பதுக்கு ஐம்பது என்று வர்ணித்து நிராகரித்தனர்)

இதற்குப் பின்னர் தான் இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் தாயக பூமியை பிறரின் ஆக்கிரமிப்பலிருந்து பாதுகாத்துக தமிழ் மக்கள் தமது மொழி கலை, கலாசாரத்தைப் பாதுகாத்து உரிமைகளுடன் சுதந்திரமாக சிங்கள மக்களுடன் ஐக்கிய இலங்கையில் வாழ்வதற்கு இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி முறை தான் வழிவகுக்கும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ முடியும் என்ற ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் கொங்கிரசின் கொள்கையினால் தமிழினம் அழிந்துவிடும் என்று கூறி செல்வநாயகம் தலைமையில் கொங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவித்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்று பெயரிடப்பெற்ற இக்கட்சியின் கொள்கை "சமஷ்டி ஆட்சி" என்பதால் இது சமஷ்டிக கட்சி என்றும் அழைக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புடன் சுதந்திரமாக தமது பிரதேசத்தில் வாழ்வதற்கு சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கு ஜனநாயக முறையில் முயற்சி செய்வதுடன் இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு காந்திய வழியில் சாத்வீகப் போராட்டத்தையும் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் நடத்துவ தென்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது கொள்கைப் பிரகடனத்தில் அறிவித்தது.

இதன்படி ஜனநாயக முறையில் 1952 ஆம் ஆண்டில் முதல்தடவையாக நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போட்டியிட்டது. ஜி.ஜி.யின் அகில இலங்கை தமிழ்க் கொங்கிரசினதும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியது.

(தொடரும்).

நிகரி 2
NIHARI

# தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்டு ஏழு தடவைகள் சிறை சென்றேன்!

— வைக்கம் முகம்மது பஷீர்



நாற்பதுகளில் தோன்றிய மலையாள இலக்கியத்தின் மறு மலர்ச்சிக்குக் காரணமானவர்களில், தனது "பால்யகால சகி" புதினம் மூலம் வித்தூன்றிய பஷீர் முக்கியமானவர் என்று விமர்சகர்களால் ஒட்டு மொத்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர். தனித் தனியாக வாசிக்கையில் நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு சிறுகதை போன்று இருந்தாலும், சேர்ந்து படிக்கும் போது பாங்குறக் கோர்க்கப்பட்ட மாலை போல அத்தனையும் இணைந்து சிறப்பான புதினம் ஒன்றை உருவாக்குவதும், சிறுகதையோ நாவலோ எதுவானாலும் அதில் நகைச்சுவையோடு கூடிய வசனநடையில் எப்பேர்ப்பட்ட சோகமான விஷயத்தையும் வர்ணிப்பதும், பஷீரின் எழுத்துக்களுக்கு மட்டுமே கைவந்த வித்தை. அவர் இன்று நம்மிடையே இல்லை. அவருடனான நேர்காணல் இது.

***உ**ங்களது இளமைக் காலத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?*

சொல்லட்டுமா? (சிரிப்பு) இளமைக்கு முன்னால் குழந்தைப் பருவத்திற்கே போகிறேன். நான் நெருப்பில் பிறந்தவன் என்றால் நம்புவீர்களா? (சிரிப்பு), நான் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். என் அம்மா நிறைமாத கர்ப்பிணியாக வயற்காட்டில் வேலை செய்து கொண்டிருக்கையில் திடுமென அங்கு நெருப்பு பிடித்துக் கொண்டதாம். அதே தருணத்தில் பிரசவவலியும் எடுத்துவிட, சுற்றிலும் நெருப்பு சுவாலைவிட்டு எரிந்த சூழ்நிலையில் நட்ட நடுவில் நான் பிறந்தேனாம். எப்படி!

*பிறகு?*

குழந்தை. இளமைப் பருவங்களில் வறுமை அதிகமிருந்தது. அந்த விவரங்களெல்லாம் இங்கே வேண்டாம். ஆனால் ஒன்று - என் வாழ்க்கை பரபரப்பான சம்பவங்கள் நிறைந்ததாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சின்ன வயசிலேயே இந்தியாவில் நிறைய பயணித்து பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். ஒரு சமயம் ராஜஸ்தானில் இருந்த போது ஹிந்து சாமியார்க் கூட்டம் ஒன்றோடு பரிச்சயம் உண்டாயிற்று. அனைவரும் திகம்பரர்கள் (அர்த்தம் தெரியுமா? நிர்வாண சஞ்சாரிகள்! என்று கூறிவிட்டுச் சிரிக்கிறார்) அவர்களுடனே ஒரு ஹிந்துவைப் போல நானும் சில காலம் பயணித்தேன், வசித்தேன், பழக்க வழக்கங்களை மேற்கொண்டேன். இதுபோல நானாவித அனுபவங்கள்.

*"கம்யூனிஸ்ட்", "தீவிரவாதி" என்று முத்திரை குத்தப்பட்டு மூன்று முறை நீங்கள் சிறை சென்றதாக...*

(குறுக்கிட்டு) மூன்று அல்ல ஏழு தடவைகள்...

*அந்தச் சிறை அனுபவங்களிலிருந்து பிறந்ததுதானா 'மதிலுகள்" நாவல்?*

அதுமட்டுமல்ல- என்னுடைய அனைத்து எழுத்துக்களுமே ஏதோ ஒரு விதத்தில் என்னுடைய சொந்த அனுபவங்களே. என்னைச்சுற்றி நடக்கும் விஷயங்களே என்னை எழுதத் தூண்டுகின்றன.

*உங்கள் முதல் கதை எது?*

"தங்கம்" என்ற சிறுகதை, எல்லாரும் பொதுவாக ராஜாக்களையும், திவான்களையும் பற்றியுமே எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஒரு பிச்சைக்காரனை மையமாக வைத்து நான் எழுதிய கதைக்கு நல்ல வரவேற்பு இருக்க, முட்டுக்கட்டைகளைப் பொருட்படுத்தாது தொடர்ந்து எழுதமுற்பட்டேன்.

*முட்டுக்கட்டைகள் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?*

பல விஷயங்கள், உதாரணத்திற்கு - 'பால்யகால சகி" என்கிற நாவல் முதன் முதலில் வெளியாகி அமோக வரவேற்புப் பெற்றபோதும், ஒரு முன்னணி விமர்சகர் இது 'க்னுட் ஹாம்ஸல்" (Kanut Hamsels) எழுதிய 'விக்டோரியா" நாவலின் அப்பட்டக்காப்பி என்று முழங்கினார். அன்று தொடங்கியவர் சுமார் 35 வருஷங்களுக்கு ஓயாமல் என் எழுத்துக்களைச் சாடினார். ஆனால் ஒரு வேடிக்கை பாருங்கள் இரண்டு வருஷங்களுக்கு முன் 'விக்டோரியா" மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட போது அதே விமர்சகர் 'பால்யகால சகி காப்பியடிக்கப்பட்டது அல்ல, மலையாள எழுத்தாளர்களில் பஷீர் தலைசிறந்தவர் என்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்றார். (பெரிசாய்ச் சிரிக்கிறார்)

*அவருடைய விஷம் நிறைந்த தாக்குதல் உங்களைக் காயப்படுத்தியதா?*

காயப்படவும் இல்லை, இப்போது புகழாரம் சூட்டியதில் பர்வசப்படவும் இல்லை (சிரிப்பு)

*தற்கால மலையாள இலக்கியத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?*

நான் தீவிரமாக எழுதிய காலத்தில் என்னென்னவோ பிரச்சினைகள் - உலக, உள்நாட்டுச் சண்டைகள், மதப் பாகுபாடு மனத்தாங்கல், சமூக அநீதி - என்று சமுதாயத்தை ஆட்டுவித்துக் கொண்டிருந்தன. அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் என் எழுத்துக்கள் அமைந்தன. இப்போது அப்படியில்லை.

*இன்றைக்கும் பிரச்சினைக்குப் பஞ்சம் இல்லையே?*

மத, ஜாதிச் சண்டைகள், சனத்தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், இளைய தலைமுறையின் விரக்தி... (குறுக்கிட்டு) ஆனால் நாங்கள் அவற்றைக் குறித்து சிந்தித்து எழுதினோம், இன்றைய எழுத்தாளர்கள் எழுதுவதில்லையே!

*இதற்குக் காரணம், சிரத்தை, அக்கறை குறைந்து போனது என்று நினைக்கிறீர்களா?*

இருக்கலாம்...

*எழுத்தினால் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவருவது சாத்தியம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?*

ஓரளவுக்கு... முன்பெல்லாம் நாயர் பையன்கள் மணப்பதற்கு நாயர் பெண்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. நம்பூதிரிப் பிள்ளைகளுக்கு நாயர் பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டதில் அந்த நிலை. தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் குடியினர் வாழும் தெருவில் சுதந்திரமாக நடக்கக்கூட முடியாது. இன்று எல்லாம் மாறிவிட்டன. மாற்றங்கள் நிறைய அளவில் வந்திருக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. தேவையான அந்த விழிப்புணர்வுக்கு இலக்கியம் ஓரளவுக்கு உதவியிருக்கின்றது என்பதும் உண்மை.

*நீங்கள் எழுதியவற்றில் குறிப்பிட்ட எந்தக் கதை பற்றியாவது ஏதாவது கூற விரும்புகிறீர்களா?*

ஒன்று மட்டுமல்ல, எப்போது எழுத உட்கார்ந்தாலும் எனக்குள் தோன்றும் ஒரு உணர்வை விவரிக்கட்டுமா? முன்பெல்லாம் எனக்கு மரணத்தைப் பற்றின சிந்தனை அடிக்கடி வரும். ஒரு கதையை எழுதத் துவங்கியபின் அதை முடிக்கும் முன்னரே இறந்து விடுவேனோ என்கிற தவிப்பு தப்பாமல் உண்டாகும். அதனால் நினைத்ததை ஒவ்வொரு தரமும் எழுதி முடித்தபின் - ஒவ்வொரு எழுத்தின் பிரசவத்திலும் எனக்குள் உண்டான திருப்தி அலாதியானது...

*பெண்கள் நிலைபாடு குறித்து அன்றும் இன்றும் உங்கள் மதிப்பீடு என்ன?*

ஓ! அன்றும் சரி.. இன்றும் சரி பெண்களை நான் மிகவும் நேசிக்கிறேன் (சிரிக்கிறார்)

*அவர்கள் நிலை குறித்து உங்கள் கருத்தைக் கேட்டேன்.*

பெண்களுக்கு இயற்கையிலேயே ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. மாதவிடாய், பிரசவம் என்று வலி அவஸ்தையோடு கூடிய பிரச்சினைகள். அவர்களோடு ஒப்பிடுகையில் ஆண்களுக்கு எல்லா வகையிலும் பாரங்கள் கம்மி...

***புத்திசாலித்தனத்திலும், திறமையிலும் சிறந்தவர்களாக இருப்பினும் தங்கள் சமத்துவத்தை நிலைநிறுத்த, உரிய மரியாதையைப் பெறப் பெண்கள் போராட வேண்டிய நிலையில் இருப்பது உங்களுக்குப் பெரிய அவலமாகத் தோன்றவில்லையா? உங்கள் வீட்டில் பெண்களுக்கு எந்த மாதிரியான சுதந்திரத்தை அளித்திருக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?***

நிச்சயமாய் என் மனைவிக்கும் மகளுக்கும் அவர்கள் விரும்பியதை, அவர்களுக்கு சரி என்று தோன்றுவதைச் செய்ய பூரண சுதந்திரம் உண்டு. நீங்கள் வேண்டுமானால் அவர்களையே கேட்டுப் பாருங்கள்... பெண்கள் வெகு புத்திசாலிகள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். சரியான சந்தர்ப்பம் வாய்த்தால் எந்தத் துறையிலும் பளிச்சிட அவர்களால் முடியும். எம்.எஸ்.சுப்புலஷ்மியை எடுத்துக் கொள்ளுங்கள்... இசைத்துறையில் அவரை விடவும் சாதனை புரிந்த வித்வான் யார், சொல்லுங்கள்? அகதா கிரிஸ்டி எழுதிய 'மௌஸ் ட்ராப்" நாடகம் 35 வருஷங்களுக்கும் மேலாய் லண்டனில் ஓடிக்கொண்டிருக்கவில்லையா?

*நீங்களே உங்களை விமர்சித்துக் கொள்ளுங்கள் என்றால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்?*

பொதுவாக எனக்குப் பல விஷயங்கள் குறித்து விஷய ஞானம் கிடையாது. ஆனால், நான் நல்ல மனம் கொண்டவன் என்பதும், நடுவில் பல வருஷங்கள் குடிகாரனாய் - அல்கஹாலிக்காக - இருந்தபோதும், என் மூளை கலங்கி வாழ்ந்த போதும் கூட யாரையும் புண்படுத்தியதில்லை என்பதும் என்னிடத்தில் எனக்கே பிடித்த குணங்கள்.

*நீங்கள் குறிப்பிட்ட அல்கஹாலிக், மூளை கலங்கின நாட்களைப் பற்றிப் பேசுவதில் உங்களுக்குத் தயக்கமோ ஆட்சேபனையோ இல்லையா?*

கொஞ்சம் கூட இல்லை... என்ன நடந்தது என்று விவரமாகச் சொல்லட்டுமா? சின்ன வயசில் ஒரு நடிகர் வீட்டுக்குப் போயிருந்த போது அவர் கட்டாயப்படுத்தியதில் முதன் முதலாகக் கள் குடித்தேன், பிறகு கராச்சிக்குச் சென்ற சமயத்தில் இந்தப் பழக்கம் தொடர்ந்தது. சில வருஷங்களில் எர்ணாகுளத்துக்கு வந்து ஒரு புத்தகக்கடையைத் துவக்கினேன். தினமும் நண்பர்கள் வந்து சேர்ந்து கொண்டதில் நிறைய குடிக்கத் துவங்கினேன். குடியோடு புகை பிடிப்பதும் அதிமாயிற்று இறுதியில் குடிநோயாளி (Alcoholist) ஆனேன், குடி, மனிதனுள் குழப்பம் என்கிற கதவைத் திறந்து விட்டுத் தெளிவை வெளியே தள்ளிவிடுகிறது என்பதைத் துல்லியமாகப் புரிந்து கொள்ள முடிந்ததும் அப்பழக்கத்தை நிறுத்தப் படாதபாடுபட்டேன். எழுத்தாளர்களுக்குக் குடிப்பழக்கம் இருக்கவே கூடாது. அந்த நாட்களில் நான் எதையுமே எழுதவில்லை, எழுத முடியவில்லை.

*எத்தனை வருஷங்களுக்கு?*

சுமார் நாலைந்து வருஷங்களுக்கு.

*அப்புறம் என்ன நடந்தது?*

எழுத முடியவில்லையே என்கிற தாபத்தில் கடையை மூடினேன், குடிப்பழக்கத்தைச் சிரமப்பட்டு நிறுத்தினேன். ஆனால் அதன்பிறகு தூக்கம் போயிற்று, மனப்பிரமையில் மூழ்கினேன், எல்லாரும் எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்றார்கள். பத்து ஆண்டுகளுக்கும் மேலாய் ரொம்ப அவஸ்தைப்பட்டேன்.

*இம்சைகள் நிறைந்த அந்தக் கால கட்டத்தைப் பற்றி இத்தனை வெளிப்படையாகவும் தயக்கமில்லாமலும் பேசுவது உங்களுக்கு எப்படி சாத்தியமாகிறது?*

(சிரிக்கிறார்) பேசுவது என்ன? "பாத்துமாவின் ஆடு" என்கிற புத்தகத்தின் முன்னுரையில் அத்தனையும் விளக்கமாகவே எழுதியிருக்கின்றேன். பெங்குவின் நிறுவனத்தார் அதைப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

*"பாத்துமாவின் ஆடு" புதினத்துக்கு மக்களிடம் எத்தனை வரவேற்பு இருந்தது?*

அமோகமாய்! நகைச்சுவை இழையோடுகிறது என்று பாராட்டினார்கள்.

*வேறு எதையும் அப்போது நீங்கள் எழுதவில்லையா?*

பைத்தியமாக இருந்த போது "பைத்தியத்தின் உலகம்" என்று ஒரு நாவலை எழுதினேன். ஆனால் அது ரொம்பப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியதால் கிழித்துப் போட்டுவிட்டேன்.

*பிரபலமானவராக இருந்துகொண்டு இப்படி வெளிப்படையாகப் பேசுவதன் மூலம் மக்களிடையே தவறான அபிப்பிராயம் ஏற்படும் என்கிற பயம் உங்களுக்குக் கிடையாதா?*

(சிரிக்கிறார்) பேசுவது என்ன, விலாவாரியாக எழுதவே செய்திருக்கிறேனே!

*உங்களுக்கு இப்போது வயது என்ன?*

நான் ரொம்ப இளமையானவன். எனக்கு 84 வயது என்கிறார்கள். ஆனால், உண்மையில் 24தான்! (சிரிக்கிறார்)

*வறுமை, வேதனையை விவரிக்கும் உங்கள் எழுத்திலும் சரி, இப்போது பேசும் போதும் சரி, நகைச்சுவை இயற்கையாக இழையோடுவது எப்படி?*

அது என் சுபாவம் என்று நினைக்கிறேன். எதையும் நினைத்து நான் அலட்டிக் கொள்வது கிடையாது. அனாவசியமாய் வருத்திக் கொள்வதும் இல்லை. வாழ்க்கை என்பது சந்தோஷம், வேடிக்கை நிறைந்தது என்றே நான் நம்புகிறேன். எதற்காவது தற்காலிகமாய் நான் அடிபடுவது உண்டுதான், ஆனாலும் உடனே அந்த வருத்தத்தை சிரித்து அழித்து விடுவேன். (சிரிக்கிறார்)

*இளைய தலைமுறையினருக்கு, முக்கியமாய் இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?*

இளைஞர்கள், முக்கியமாய் எழுத்தாளர்கள் பிரபஞ்சம் பற்றிய சரியான விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளவில்லை. இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இந்த பூமி மட்டுமே. இது போதாது. நமது பூமியைப் போலவே பல ஆயிரம் பூமிகள், பல பிரமாண்டமான சூரியன்கள், கிரகங்கள், பால்வெளி எல்லாம் அடங்கிய சூரியக் குடும்பம் தான் பிரபஞ்சம். இதை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். கூடவே மரணம் பற்றியும் அவர்கள் தெரிந்து கொள்ள முனைய வேண்டும். மனித வாழ்வு குறுகிய காலம் கொண்டது. எப்போது இறக்கப் போகிறோம் என்பது யாருக்கும் தெரியாது. கடவுள், அவரது சிருஷ்டிகள் குறித்து சிந்திக்க முற்படும் போது மனிதரின் பார்வை விரிவடையும், நிச்சயமாய்.

நன்றி : இலக்கிய மூலம் இந்திய இணைப்பு

## நூல் மதிப்பீடு

-எஸ்.கே.வி.

# பொறியில் அகப்பட்ட தேசம்
# 'ஓங்கி உலகளக்கும்' ஓர் உன்னத முயற்சி






கவிஞர் மு.பொ.அவர்களின் பொறியில் அகப்பட்ட தேசம் நெடுங் கவிதை நூல் தொடர்பாக பேசும் போது இரண்டு முக்கியமான அம்சங்கள் தொடர்பாக நாம் பேச வேண்டும். முதலாவதாக அதன் அரசியல்- அந்த அரசியல் பார்வையின் பிசிரற்ற தன்மை. அதற்கான காரணம் என்பவை. இரண்டாவது, அவரது கவிதை. அது கையாளும் படிமங்கள், காட்சிப்படுத்துகிற தோற்றங்கள், அதன் மொழி என்பவை பற்றியது.

செப்ரெம்பர் 11ம் திகதி நடைபெற்ற உலகைக் குலுக்கிய சம்பவமான அமெரிக்க உலகைச் சந்தைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஒரு எதிர்பார்க்க முடியாத தற்செயல் சம்பவம் அல்ல. அது அமெரிக்காவில் மூன்று நான்கு தசாப்தகால செயற்பாடுகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட நிச்சயம் எதிர்பார்த்திருக்க வேண்டிய ஒரு தாக்குதல். ஜப்பானிய நாகசாக்கி முதல் வியட்நாம், பாலஸ்தீனம் என தொடர்ந்து ஈராக் வரையான உலகெங்கும் வாழ்கின்ற பல்வேறு தேசங்கள் மீதான அமெரிக்க அச்சுறுத்தல் எப்படி இருந்து வந்திருக்கிறது, வருகிறது என்பது உலகறிந்த விடயம். இந்தக் தேசங்கள் ஒவ்வொன்றும் அமெரிக்காவின் சண்டித்தனத்தின் முன்னால் குரல்வளை நசுக்கப்பட்டு அதிகாரம் பறிக்கப்பட்டு விட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவை ஒன்றும் அமெரிக்க மக்களின் கண்களுக்குப் படாத விடயங்கள் அல்ல. உயர்ரக தொழில் நுட்ப பலம் படைபலம், பணபலம், என்பவற்றின் மூலமாக முழு உலகத்தையுமே தனது ஆதிக்கத்துக்குள் அடங்கி நடக்கும் ஒன்றாக மாற்றும் அமெரிக்க அரசுகளின் நடவடிக்கைகட்கு அமெரிக்க தேசம் இன்று வரை உரிய அளவுக்கு எதிர்ப்புக் காட்டியதில்லை. அந்தச் செயலை எதிர்த்து உலகம் பூராவும் எதிர்ப்புக்கள் கிளம்பிய போதும் அவை தொடர்ந்தும் அடக்கப்பட்டே வந்திருக்கின்றன. இவை பற்றிய பிரக்ஞையோ மற்றைய ஒடுக்கப்படும் நாடுகள் தேசங்கள் மக்கள் பற்றிய பிரக்ஞையோ அவற்றின் எதிர்ப்புக் குரல்களோ ஒரு போதும் அமெரிக்காவில் கணக்கெடுக்கப்பட்டதில்லை. மற்றைய தேசங்கள் தம்மீது வளர்த்துக் கொண்டிருக்கும் எதிர்ப்புணர்வு, தொடர்பாக அங்கே அக்கறையுள்ள அனுதாபமுள்ள பார்வை ஒன்று ஒருபோதும் வெளிப்பட்டதில்லை.

செப்.11 நிகழ்வு தொடர்பாக பல கட்டுரைகள் வெவ்வேறு விதமான விவரணங்கள் செய்திகள் படைப்புக்கள் இப்போதெல்லாம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் அமெரிக்காவினால் ஒடுக்கப்பட்ட மக்களிடையேயிருந்து வெளிவந்த படைப்புக்களில் பலதும் இந்தச் சம்பவத்தால் புளகாங்கிதம் அடைவதாகவே அமைந்திருக்கின்றன. அதில் ஒரு நியாயத்தன்மையும் உண்டென்ற போதும் கவிஞர் மு.பொவின் இக்கவிதை அப்படி அமையவில்லை.

பதிலாக அது அமெரிக்க நண்பன் மீது ஒருவகை அனுதாபத்தைக் கொள்கிறது. பயங்கரவாத பூதம் வரங்கொடுத்தவனையே கொல்ல வந்த பஸ்பாசுரனாய் உங்களிடம் வருகிறது என்று சுட்டிக்காட்டுகிறது. அதனை கிள்ளியெறிய தான் இணையத் தயாரென அறிவிக்கிறது.

"நான் உன்னை நோக்கி ஓடி வருகின்றேன்.

எங்கள் இணைவு இப்பூதத்தை வேர்கல்லி எறியாதா?"

என்று கேட்டு பயங்கரவாதப் பூதத்தை ஒழிப்பதில் ஐக்கியப்பட்டு நிற்கத் தயாரென அறிவிக்கிறது.

பொறி, கனவு, விழிப்பு, பழி, வழி, சூறை, விசாரம், புரட்சி என்ற எட்டுப் பகுதிகளாக பிரிபட்டிருக்கும் இந்நெடுங்கவிதை மொத்தமாக அமெரிக்க வரலாற்றின் நியாயமற்ற தன்மையை கோடிட்டுக் காட்டி நிற்பதுடன் இதற்கெதிரான புரட்சி வெடிப்பதன் தவிர்க்க முடியாத தன்மையை சுட்டிக் காட்டியும் நிற்கிறது.

இந்தப் புரட்சியின் குரல் ஒரு பெண்ணின் குரலாக-ஹெலனின் குரலாக-புதுயுக மாதின் குரலாக வெளிப்படுவது வரலாற்றின் புதிய போக்கின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. கவிஞரின் அரசியல் பார்வையின் தெளிவான ஓட்டம் கொலம்பஸ் காலம் முதல் புரட்சியின் எதிர்காலம் பெண்ணுடன் பிணைக்கப்பட்டதாக அமைவது வரை நீண்டு பிசிறற்று இருப்பது கவனத்திற்குரிய ஒன்றாகும். அவரது இந்தத் தெளிவான பார்வைக்கும் ஓட்டத்திற்கும் அடிப்படையாக நிற்பது அவரது தத்துவார்ந்த சிந்தனை. அவரது சிந்தனை அவரே சொல்கிற மார்க்சியத்திற்கும் அப்பாற் சென்று தேடுகிறதென அவர் குறிப்பிடும் பிரபஞ்ச யதார்த்தவாத சிந்தனை இந்தச் சிந்தனையின் பலம். அது வரலாற்று ஓட்டத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தெளிவாகப் புரிந்து கொள்ள உதவும் என்பது தான்.

ஆனால், இதன் பலவீனம், இந்தப் புரிதலிற்கும் அதை அடிப்படையாகக் கொண்டு நடக்கவுள்ள செயற்பாட்டுக்கும் இடையிலான நடைமுறைகளை அதனால் சுட்டிக் காட்ட முடியாமல் இருப்பதே. இது தொடர்பாக ஆராய இது சரியான தருணம் அல்ல என்ற போதும் இந்தச் சிந்தனையின் பிரதான முன்னணிப் படையினர் எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்பதனாலும், இது குணமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாலும், இதன் புரட்சி பற்றிய கருத்தாக்கங்கள் யதார்த்த தன்மையினின்று அதன் பின் விலகிச் செல்ல ஆரம்பிக்கும் ஆபத்து உண்டு என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒரு நல்ல படைப்பாளியின் உருவாக்கத்திற்கு அல்லது நல்ல படைப்பின் உருவாக்கத்திற்கு போதுமானது என்ற முறையில் இச்சிந்தனைக்கும் வரலாற்று முக்கியத்துவம் இருப்பதை மறுக்க முடியாது.

மு.பொ. வின் இக்கவிதையே அதற்கு அரிய சான்றாக அமைகின்றது.

***

இனி மு.பொ. வின் கவிதைக்கு வருவோம். அவரது கவிதையின் வெளிப்பாட்டு முறை, உரத்த வாசிப்புக்கான முறையில் பேச்சோசைப் பண்புடையதாக அமைந்திருக்கிறது. இந்தப் பேச்சோசைப் பண்பும், நவீன புதுக் கவிதைக்குரிய படிம பயன்பாடுகளும், பயன்படுத்தப்படுகின்ற சொற்களும் இந்தக் கவிதையின் நோக்கிற்குப் பலமூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

மு.பொவின் கவிதையின் படிமங்கள் பாரதியின் 'மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள்....' ஆகாவென்றெழுந்துபார் யுகப் புரட்சி.. என்ற பார்வைப் பின்னணியோடு அமைந்தது. சைவப் பின்னணியில் அமைந்த தேவர், அசுரர், குரு என்கிற வகையிலான படிமங்களையும் ஆங்கில இலக்கியம் வழியிலான படிமங்களையும் உள்ளடக்கியதாக கிரேக்க சிந்தனை வழிபட்டவையாக அமைகின்றன. நவீன அமெரிக்காவின் ரம்போக்களையும் 'சூப்பர்மான்'களையும் சைவத்தின் தேவ அசுர படிமங்களுடன் சமாந்தரப்படுத்தி அவர் கையாளும் விதம் ஆர்வத்தையூட்டுகிறது.

இந்தக் கவிதையின் அரசியற் சாரம் மு.பொவின் மொழியில் கவிதையாக வெளிவருகையில் ஏற்படுத்தும் தாக்கம் முக்கியமானது. அது ஆழமான அனுபவங்களையும் சிந்தனைகளையும் இணைத்துத் தொடுப்பதாக அமைகின்றது. ஒரு புறத்தில் அரசியல் சிந்தனையின் போக்கு வெளிப்படுகிறது என்றால், மறுபுறத்தில் வரலாற்றின் அனுபவங்கள் மனித மனதில் அனுபவங்களாக அந்தச் சிந்தனையின் பார்வையை தெளிவுடன் தொற்றிக் கொள்ள வைக்கப்படுகின்றன.

*"புதுயுக வேதமாய் சேயின் செய்தி*

*ஒவ்வோர் இனிதர் மூச்சிலும் திரிந்தது*

*அதனால் உலகின் ஒவ்வோர் அசுரக் குறுக்கத்துள்ளும்*

*அதன் சிரசறுக்கும் இயக்கங்கள் எழுந்து பரவின.*

சாண்டிஸ்டாக, ஸ்பாடிஸ்டாக பில்லோவாக, ஹமாசாக ஜ.ஆர்.ஏ. ஆக அல்ஹைடாவாக, ஐரோப்பிய பசுமைப் புரட்சியாய்

எங்கும் எங்கும் ஏன் எம் ஈழத்திலும் சூரருக்கெதிராக பேரெழுச்சி..."

என்கிற வரிகளில் 'வேதம்' 'சிரசறுத்தல்' 'சூரர்' 'பேரெழுச்சி' என்று வருகின்ற சொற்கள் ஏற்படுத்தும் அனுபவ உணர்வு மிகவும் ஆழமானது. இந்த படிமங்கள் ஏற்படுத்தும் அனுவங்கள் புரட்சியின் போக்கை தர்மத்தின் பாதையாக வெளிப்படுத்தும் ஒரு பாரம்பரிய போக்கின் தன்மையைக் கொண்டதாய் அமைகின்றது.

இந்தப் பாரம்பரிய தர்மத்தை வெளிப்படுத்தும் வெளிப்பாடு வரலாறு பூர்வமான அனுபவங்களை கொண்ட மக்களின் மனதில் ஏற்படுத்தும் பதிவும் அது ஏற்டுத்தும் எதிர்வினையும் மிகவும் சக்திவாய்ந்தவை. பாரம்பரிய நம்பிக்கைகளால் கட்டமைக்கப்பட்டு ஆழமாக வேரூன்றியிருப்பவை. இவற்றை தெளிவாக அடையாளம் காணும் ஒரு கவிஞரால் சக்திமிக்க ஒரு தாக்கத்தை மக்கள் மனங்களில் ஏற்படுத்த முடியும். அந்த அடையாளம் மு.பொ.வுக்கு தெரிந்திருக்கிறது.

அதேவேளை இந்த பாரம்பரிய பின்னணியிலான படிமங்கள் கூடவே பாரம்பரிய இறுகிப்போன கருத்துக்களையும் சேர்த்து விதைத்துவிடக்கூடியவை. இவை மு.பொ.எதிர்பார்க்கும் நல்விளைவுக்கு ஊறு செய்துவிடக்கூடியவை.

சூரர், தேவர் என்ற பிரிப்பு இந்து மத சித்தாந்தத்தின் பிரிப்புடன் சம்பந்தப்பட்டது. அசுரர்கள்-தேவர்கள் என்பதால் அடையாளப்படுத்தப்பட்ட வரலாற்று நாயகர்கள் பெரும்பாலும் இன்றைய உலகின் இனவகைப்பாட்டுடன் சம்பந்தப்பட்டு நிற்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆரிய வழி சிந்தனையானது அசுரர்கள் என்று குறித்து வந்தது இந்தியாவின் தெற்குப் பிரதேசத்தை அண்டி வாழ்ந்த இனங்களையும் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களையும் என்கிற கருத்துக்கள் இப்போது வளர்ந்து வருகின்றன. இந்து தர்ம சாஸ்திரப்படி புலாலுண்ணல், மது அருந்துதல் போன்ற இழி செயல் புரியும் பாதகர்களாக கருதப்பட்ட அசுரர்கள் யாரென்பது குறித்த கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

'கொண்டவன்' இருக்க, 'ஹெலனை' கவர்ந்தது என்பது போன்ற கருத்துக்கள் குடும்ப உறவு தொடர்பான இந்து மத சார்பான நிலப்பிரபுத்துவ சிந்தனையில் வேர் விட்டெழுந்தவை என்ற பிரக்ஞையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். பழைய புராண கால படிமங்களின் பலமும் வீச்சும் பலவீனமடைந்து தவறான புதிய போக்குகள் சிந்தனைகள் வரை உதவக் கூடியவை என்ற நிலை இன்று நிலவுவதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

* * *

இந்த விடயம் மு.பொ. அவர்களின் கவனத்திற்குரியது.

மு.பொ. வின் வரிகள் மிகவும் எளிமையானவை. நேரடியானவை. படிமங்களை அகற்றிவிட்டால் வெளிப்படையானவை. ஆனால், ஆழமான அனுபவத்தையும் உணர்வையும் இயல்பாகவே வெளிப்படுத்திவிடுபவை.

பாருங்கள் :

*"அக் காலத்தின் என் அன்புக்குரிய ஹயவத்தா* (Hiawatta)

*இன்னும் சிறுவனாகவே இருந்திருப்பான்*

*மலைகளிடையே ஒழுகிய நதியில்*

*தோணி ஓட்டிய ஹயவத்தா என் நினைவில் மிதந்தார்*

*"இயற்கையின் மூலமே தாம் உயிர்ப்பதை" எடுத்து*

*லிங்கனுக்குரைத்த சியற்றல்* (Chiefs Seattle) *இன்னும்*

*பிறந்திருக்க மாட்டான்*

*ஆபிரிக்க அடிமைகள் கப்பல் கப்பலாய்*

*வந்துசேர இன்னும் காலம் இருந்தது*

*"அடிமைகள் கனவு" அமெரிக்காவில்*

*கவிந்திருள் போர்க்க*

*இன்னும் நீண்ட நாட்கள் கிடந்தன"*

இந்த வரிகள் உணர்த்தும் வரலாற்றின் அனுபவங்கள் மிகவும் பெரியவை. அவை புதிய மானுடத்தின் விடிவுக்கான பாதையின் பிரதான மைல்கற்கள். மு. பொ.வின் அனாயாசமான இந்த ஓட்டமும், அது வெளிப்படுத்தி நிற்கும் ஆழமும் அவரது பிரதான பலங்களில் ஒன்று.

பொறியில் அகப்பட்ட தேசம் ஒரு ஆழமான பல விரிவுகளை அனுபவமாகத் தரக்கூடிய - எமது சூழலுக்கும் சிறப்பாக பொருத்திப்பார்க்கக்கூடிய - பல வாசிப்புக்களைத் தரக்கூடிய படைப்பு. ○


**25வது ஆண்டு ஞாபகார்த்த சிறப்பு நினைவுமலர் வெளியீடு**

**செப்டம்பர் 10, 2002**

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், மக்கள் நேசனுமாகிய *'காத்தி" என்று சக கம்யூனிஸ்ட் தோழர்கள், சக ஆசிரியர்களால் அன்புடனும், 'காத்தார்" என்று மாணவர்களால் செல்லமாகவும், 'மாஸ்டர்" என்று அயலவர்களால் பாசத்துடனும் அழைக்கப்பட்டு 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என அனைவருக்கும் அறிமுகமாகி இன்றும் அனைவர் நெஞ்சிலும் நிறைந்திருக்கும், தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின்*

**சிறப்பு நினைவுமலர் வெளியீட்டு வைபவம்**

**செப்டம்பர் 14ம் திகதி, சனிக்கிழமை,**

**பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்**

**இடம்: ஒன்ராறியோ அனைத்து தொழிற்சங்க நிறுவனம்**

Ontario Federation of Labour

15 Gervais Drive (Eglinton and Don Mills)

Don Mills, Ontraio

இந் நிகழ்ச்சியில் அன்னாரின் தோழர்கள், நண்பர்கள், பத்திரிகையாளர்கள், உறவினர்கள், சுற்றத்தினர் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நினைவுமலரும், நிகழ்ச்சியும் சிறப்புடன் அமைய தோழர் மு. கார்த்திகேசன் அவர்கள் மேல் அன்பும் மதிப்பும் கொண்டு நெருங்கிப் பழகியவர்கள் அனைவரிடமிருந்தும் கட்டுரைகள், புகைப்படங்கள்(திருப்பிக் கையளிக்கப்படும்), தொடர்புகட்கு: கனடா 416 490 0276 416 224 0362

ஸ்ரீலங்கா-கொழும்பு 01 712 645

நினைவுமலர் குழு

## ஈழத்துத் தமிழ்நூல்களின் கண்காட்சி

# மனதின் நெருடல்கள்


என்.செல்வராசா

கண்காட்சி என்ற பதத்திற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கீழ்க்கண்ட விளக்கத்தைக் கொடுக்கின்றது.

"பார்வைக்காகவும் தகவல் அறிவிப்பதற்காகவும் விற்பனைக்குக் கிடைக்கும் படியாகவும் பொருள்களை ஓர் இடத்தில் விளம்பரப்படுத்தி வைக்கும் தற்காலிக ஏற்பாடு"

நூல் கண்காட்சிகளும் இந்த வரையறைக்கு உட்பட்டவையே. அண்மையில் அருள்மிகு கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் முல்லை அமுதன் என்ற தனி மனிதனின் பாரிய ஈழத்துத் தமிழ்நூல் சேகரிப்பு (பெரும்பாலானவை அவர் விலை கொடுத்து வாங்கிச் சேர்த்தவை என்று அறியும் போது புல்லரிக்கின்றது.) இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் அனுசரணையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

சுமார் 4500 நூல்கள் அங்கு பரவிக்கிடந்ததைக் கண்ணுற்ற வேளை சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் தேசிய நூலகத்தில் இடம்பெற்ற ஒரு 'தேசிய' நூல் கண்காட்சியில் இடம் பெற்ற ஈழத்தமிழர் வெளியீடுகளைப் பறை சாற்றும் சில நூறு வெளியீடுகளின் (பெரும்பாலும் அரசாங்க வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடநூல்கள்) கண்காட்சி தான் என் சிந்தனையில் அநாவசியமாக மின்னி மறைந்து



தொலைத்தது.

ஈழத்தமிழர் நூல்களின் வெளியீடுகள், அவர்களின் புலம் பெயர் வாழ்வின் வசதி வாய்ப்புகள் எழுத்துச் சுதந்திரம் தொழில்நுட்பத் தேர்ச்சி இத்தியாதி காரணிகளால் மடைதிறந்த வெள்ளமாகப் பெருகி வருவது மகிழ்ச்சியே.

இங்கு இந்த வெள்ளத்தில் அள்ளுண்டு வரும் சருகுகளையும், சகதியையும் இச்சிறு குறிப்பில் நான் விமர்சிக்க முயலவில்லை.

மண்டபம் நிறைந்த அறிஞர் கூட்டம் என்று குறிப்பிட முடியாவிட்டாலும் வந்த அனைவரும் அறிவுத் தாகத்தோடு அங்கே வந்திருந்தமை அவர்கள் அமைப்பாளர்களிடம் தாங்கள் தேடி வந்த நூல்களைப் பற்றித் தீவிரமாக விசாரித்ததிலிருந்து புலனாகியது. இரண்டு மணி தொடக்கம் ஆறு மணி வரை கண்காட்சி இடம் பெற்றது. அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அமைப்பாளர்கள் செலவிட்ட நேரமும் உழைப்பும் மிக அதிகமாகப்பட்டது. பயனை அதிகம் எதிர்பாராது, வர்த்தக நோக்கம் எதுவுமின்றி ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி என்ற வகையில் முல்லை அமுதனும் அவருக்கு ஆதரவு நல்கிய இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தினரும், குறிப்பாக இராஜ மனோகரனும் பாராட்டுக்குரியவர்கள்.

ஆயினும் மனதில் சில உறுத்தல்கள். எழுதித் தொலைத்தால் தான் நிம்மதி. இவ்வளவு நேரச் செலவு, பொருட் செலவுடன் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்கள் அதை வகைப்படுத்தி ஒழுங்கு செய்யாமல் விட்டது மன்னிக்க முடியாதது. 4500 புத்தகங்களையும் மேசையில் பரப்பி வைப்பதால் மாத்திரம் கண்காட்சியின் நோக்கம் ஈடேறி விடாது. பார்வையாளர்கள் நூலை எளிதில் பார்வையிட எவ்விதமான ஒழுங்குகளும் செய்திருக்கவில்லை. ஒரு நூலைத்தேடி முழு மேசையையும் வலம் வந்த வண்ணம் இருந்த பலரை எதிர் கொள்ள முடிந்தது.

எளியதொரு பகுப்பு முறையில் நூல்களுக்கு இலக்கமிட்டு அந்த இலக்க ஒழுங்கில் எதிர்காலத்தில் நூல்களை நூலகங்களில் வகுப்பது போன்று மேசைக்கு மேசை பிரித்து வைத்தால் வாசகரின் நேரத்தை மீதப்படுத்தலாம்.

வாசகருக்குரிய நூலை வாசகர் அடையவும் நூலுக்குரிய வாசகரை நூல் அடையவும் எவ்வளவு குறுகிய நேரம் செலவிடப்படுகின்றதோ அதில் தான் கண்காட்சி வெற்றியளிக்கின்றது. கண்காட்சியில் இருந்த பாக்கியநாதனின் இரு நூல்கள் (தூவியின் தசாம்சப் பகுப்பு முறை, நூலகர் கையேடு) இத்தகைய எளிய பகுப்பாக்கத்துக்கு உதவக் கூடியவை.

விற்பனை கண்காட்சியின் ஓர் முக்கிய அம்சம். ஆனால் கண்காட்சியில் உள்ள நூல்களிலிருந்து விற்பனைக்கென உள்ள நூல்களைத் தெளிவாகப் பிரித்து வைத்தால், காட்சிக்குக் கொண்டு வந்த அனைத்து நூல்களும் நழுவாமல் பத்திரமாக வீடு போய்ச்சேர வாய்ப்புண்டு. அத்தகைய விற்பனைப்பிரிவு அன்று தெளிவாக இல்லாததால் கண்காட்சியில் இருந்த நூல்கள் அனைத்தும் விற்பனைக்கே என்ற அறியாமையில் ஓடித்திரிந்து நூல்களைப் பொறுக்கி ஏமாந்தவர்களையும் காண முடிந்தது. விற்பனைக்குரிய நூல்களிலிருந்து தேர்ந்து தத்தமது நூல்களை வாங்க விரும்புபவர்கள் தங்கள் பட்ஜட்டுக்கேற்ப நூல்களைத் தேர்வு செய்ய உரிய முறையில் விலை விபரமும் ஒரு விளம்பரமாக விற்பனைப்பகுதியில் இருந்தால் பயனுள்ளதாக இருக்குமல்லவா?

எமது தமிழ் இனத்தின் சாபக்கேடுகளில் ஒன்று சமூக நோக்கிலான பாரிய முயற்சிகள் எதுவும் நிறுவனமயப்படுத்தப்படாமையாகும். ஒரு நிறுவன ரீதியில் இத்தகைய சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான ஒரு ஆவணக் காப்பகம் நிறுவப்பட்டு தமிழ் நூல்களுக்கான ஒரு சர்வதேச வைப்பகமாக அது வளர்ந்து உலகெங்கும் வெளியாகும் ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தி வைக்க முன்வரும் ஒரு சமூக நல அமைப்பு இன்றுவரை எம்மத்தியில் உதயமாகவில்லை. இருக்கும் அமைப்பகளுக்கும் இதைவிட முக்கியமான பல 'பணிகள்' உள்ளதால் இத்தகைய 'வேலை மெனக்கெட்ட' முயற்சிகளில் தம் பெறுமதி வாய்ந்த நேரத்தை அவமே செலவிட அவை தயாராகவும் இல்லை.

குரும்பசிட்டி கனகரத்தினம், முல்லை அமுதன் போன்ற தனி நபர்களின் ஆக்கபூர்வ முயற்சிகளை நம்பித்தான் தமிழினம் தன் நூலியல் தேவைகளுக்கு முகம் கொடுக்கப் போகிறதா? ○



# ஒரு சிறுமியின் கதை!

எனது அலுவல் காரணமாக நான் அங்கு சென்றிருந்த போது அவளைச் சந்தித்தேன். முதலில் என்னை அவள் பக்கம் இழுத்தது அவளுடைய பார்வை தான். அந்தப் பார்வைக்குள் நிறைந்த அர்த்தங்கள். அளவில்லாத ஏக்கங்கள், நிறைந்த சோகங்கள்.

அவளுக்கு வயது ஆறு இருக்கலாம். ஆயினும் அதனையும் விட வயது குறைந்த பிள்ளை போன்றே அவள் காணப்பட்டாள். அவள் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமியாக இருந்தாள். ஆயினும் அழகாக சிரித்தாள்.

அவளுடைய கண் இப்பவும் எனக்குள்ள இருக்கின்ற மாதிரி இருக்கிறது. அவள் வாயைத் திறந்து என்னிடம் ஏதோ சொல்ல வெளிக்கிட்டாள். ஆனால் அவளால் முடியவில்லை.

அவளை நான் அதற்கு பிறகு சந்தித்த போது அவள் ஊனமுற்ற பிள்ளையைப் போல் இரண்டு காலும் பலவீனமாய்ப் போய் வேறொருவரின் கையைப் பிடித்தபடி தத்தித்தத்தி நடந்து வந்தாள். நான் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

சில நாட்களின் பின்னர் ஒரு முறை அவளை நான் சந்தித்த போது, அவள் என்னை வந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள். எனக்கும் என்னை அறியாது அவள் மீது ஒரு நேசம் இருந்தது.

அங்கு பல பேர் இருந்தாலும் அவளைப் பற்றி அறிவதற்கு நான் ஆர்வமாய் இருந்தேன். இது எனது தனிப்பட்ட அவள் தொடர்பான ஈர்ப்பு காரணமாக இருக்கலாம். பின்பு நானே அவளைப் பற்றி அறிவதற்காக மற்றவர்களுடன் கதைத்தேன்.

அவர்களின் வீட்டில் 7 பிள்ளைகள். மிகவும் வருமானம் குறைந்த குடும்பம். குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கு முடியாத கஸ்டான சூழ்நிலை. ஆயினும் யாராவது அவளது தகப்பனாரிடம் உங்களுக்கு இனிமேலும் பிள்ளைகள் பிறக்காமலிக்க ஏதாவது செய்து கொள்ளலாமே என்று கூறினால், எங்கள் வீட்டு விடயம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று வெடுக்கென்ற பதில் வரும்.

அவள் வீட்டில் ஐந்தாவது பெண் பிள்ளை. வழக்கமாக தமிழ் சமூகத்தில் ஐந்தாவது பெண்பிள்ளை என்றால் கெஞ்சினாலும் கிடைக்காது என்று சொல்வார்கள். அப்படி ஐந்தாவதாக பெண் பிள்ளை பிறந்தால் நல்லது என்றும் சொல்வார்கள். ஆயினும் எனக்கு நிறையவும் கவலையாக இருந்தது. இந்தப் பிள்ளை இப்படி இருக்கிறதே என்று.

அவள் சின்ன வயதிலேயே குழப்படியான சிறுமியாக இருந்திருக்கிறாள். அதற்கு அவளுடைய தகப்பன் அவளை அடிப்பார். அவளது குழப்படிக்காக தொடர்சியாக அவளை அடித்து அடித்துத்தான் தற்போது அவள் இந்த நிலைக்கு வந்திருக்கிறாள் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தார்கள்.

அவளால் பேச முடியாது என்றும் எந்த விடயத்தினையும் உணர்வு ரீதியாக வெளிப்படுத்த முடியாது என்றும் மேலும் அங்குள்ளவர்கள் தெரிவித்தார்கள்.

அவள் இப்போது யாராவது கிட்ட வரும் போது தனது கைகளை நீட்டுவாள் அடிக்கச் சொல்லி. யாராவது அடித்தாலும் சுரணை அற்றவளாக இருப்பாள்.

அவளுடைய இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? அவளது சிறுபிள்ளைத்தனமான குழப்படிகளா? அல்லது அவளை எப்படி அணுகுவது என்று தெரியாத பெரியவர்களின் முட்டாள்தனமான தண்டனை வழங்கலா?

அவளுடைய பெற்றோரால் அவளைப் புரிந்து கொண்டிருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. அவளுக்கான பாசத்தினைக் கொடுத்தால் ஓரளவிற்காவது அவள் சுகம் அடைவாள். ஆயினும் அதற்கான சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அவள் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணாக இருப்பதால் வீட்டில் இப்படியான பிள்ளைகளை யாரும் ஒழுங்காகப் பார்த்துக் கொள்ள மாட்டார்கள். சில வேளைகளில் வீட்டில் அவளைக் கட்டி வைப்பார்கள். அப்படியான சூழ்நிலை அவளுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை.

அதேநேரம் இவர்களைப் பராமரிக்கும் அமைப்புகளிடம் அவளை ஒப்படைத்தாலும் அங்கிருக்கும் ஐம்பதோ அறுபது பிள்ளைகளுடன் அவளும் ஒருத்தியாகவே இருக்க முடியும். இதனால் அவளது அடிப்படைத் தேவைகள் வேண்டுமானால் பூர்த்தியாகலாம். ஆனால் அவளுக்கு உளவியல் ரீதியான மனோபலத்தினை யாராலும் கொடுக்க முடியாது.

இப்படியான பிள்ளைகளுக்கான தீர்வு என்ன? இவர்களுடைய எதிர்காலம் என்பது இருண்டதாக இருக்கப் போகின்றது. இவர்களை இப்படியே விட்டுவிடப் போகின்றோமா?

நாங்கள் இன்று பெரிதாகப் பேசிக் கொள்கிறோம் வாழ்க்கையின் தரம் (Quality of life) மிகவும் உயர்ந்துவிட்டதாக. ஆனால் உண்மையில் அப்படி அல்ல. தொழில் நுட்பம் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளது.

பிள்ளைகளை கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றி பெரியவர்கள் புரிந்து கொண்டு வைத்திருப்பது என்பது தவறான புரிதலே. ஒரு பிள்ளையை அடித்துத் தான் கட்டுப்படுத்த வேண்டும் என்றோ வழி நடத்த வேண்டும் என்றோ இல்லை.

இது படித்த பெற்றோர், படிக்காத பெற்றோர் என்ற வேறுபாடின்றி எல்லோர் மட்டத்திலும் காணப்படும் கொடுமை. எமது படிப்பென்பது வாழ்க்கையுடன் இணைந்ததாக இல்லாதது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

நாம் எப்படி எமது குழந்தைகளை வளர்க்கப் போகின்றோமோ அதைப் போலவே எங்கள் குழந்தைகளும் தங்களது குழந்தைகளை வளர்க்கின்றன. உண்மையில் எமது வளர்ப்பு முறையில் ஒரு திருப்பம் வர வேண்டும். எமது பிள்ளைகளை எப்படி நடத்துவது என்று தெரியாததாலேயே இப்படியான தவறுகள் நடக்கின்றன.

இப்படிச் செய்தால் எனது பிள்ளைக்கு வெற்றி கிடைக்கும். அத்தோடு எனது பிள்ளைக்கு என்பதை விட எனக்கு வெற்றி. அதைத் தான் பார்க்கிறோம். நான் நல்ல ஆளாக இருக்க வேண்டும். அதாவது எனது பிள்ளைகளை நல்லவர்களாக ஆக்குவதன் மூலம் நாம் நல்ல பெற்றோர் என்று சொல்வது அல்லது எமது குடும்பம் நல்ல குடும்பம் என்று சொல்வது. இதை நோக்கியே பெற்றோர்கள் பிள்ளைகளை நகர்த்துகின்றார்கள்.

முதலில் நாம் எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டி இருப்பது அன்பை எப்படி செலுத்துவது என்பதைப் பற்றியே. எமது சமூகத்தினைப் பொறுத்தவரை அன்பைச் செலுத்துவது என்பது பற்றி சரியான அணுகுமுறை இல்லை.

பிள்ளையின் நலன் கருதி செயற்படுகிற நிலை வர வேண்டும். அது வருவது சுலபம் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகத் தான் இதை மாற்ற வேண்டும். ஆகக் குறைந்தது இப்போது இருக்கின்ற இளைய சமூகமாவது இதைப் பற்றி யோசிக்க வேண்டும். யோசிப்பார்களா?

~ ஞானதீபா

# வீடு என்பது

ஒத்தகருத்துள்ள சொல்: 'வீடு - இல்லம், மனை", 'ரீச்சர்" கேட்கிறபோது அன்று தொட்டு இன்றுவரைக்கும் இதுவே தான் பதில்.

வீட்டை... எப்படியெல்லாம் அழகுபடக் கூறமுடியும்?

வீடு எவ்வளவு அழகானது! இதுதானே வாழ்வின் உறைவிடம். உறைவிடமின்றிய மனித வாழ்வு எப்படியிருக்குமென்பது அனுபவத்தில் காண்கிற போதுதான் புரிகிறது. இது அனுபவ உண்மை.

இப்போது சில சந்தேகம். வீடு என்பது இல்லமா? மனையா? இதை எப்போதும் இப்படியே அழைக்க முடியுமா?

அவன் கற்றவைகளை மறக்கவில்லை.

மீண்டும் ஞாபகத்திற்கு வரவழைத்தான். பெருமுயற்சி.. தெளிவில்லை.. சந்தேகம். இந்தச் சந்தேகம் ஏன் எழவேண்டும்? யாரிடம் இதைத் தீர்த்துக் கொள்வது? ஆரம்பக்கல்வி 'ரீச்சர்" இறந்து பல வருடங்களாகிவிட்டன.

கற்குவியலாகக் குவிந்து கிடக்கும் வீட்டுக்கு இப்போது வேறு பெயர்? இல்லம்? மனை?

அந்த எண்ணம் தவறானது அல்ல. நிறைய நியாயங்கள் அதில். அவன் நினைத்ததுபோல் எதுவுமே அங்கு இருக்கவில்லை.

வீடுகள் கற்குவியல்களாகி, காடுகளாகி, எதிர்ப்பதம் தேடிக் கொள்கின்றன. இதற்கு யாரிடம் பதில் கிடைக்கப் போகிறது? இது ஏன் இப்படி, இவ்விதம் ஆனது?

'மாற்றமென்பது எளிதில் நிகழக் கூடியதல்ல, அது நீண்ட" பிரயத்தனத்திலும், முயற்சியிலும் தான் தங்கியிருக்கிறது. யாரோ கூறியது ஞாபகத்திற்கு வந்தது. இந்த மாற்றங்கள் எல்லாம் இலகுவில் இப்போது நடந்து முடிகிறது. ஒன்றை ஆக்கும் போது ஏற்படுகின்ற உழைப்பின் வலு, அதன்பெறுமதி அதை அழிக்கும்போது ஏற்படுவதில்லை. அவன் அப்போது நினைத்தது இதைத்தான். காரணமின்றி துவைத்துக் கிடக்கும் முன்னைய காலத்து வாழ்விடம். அது அழிவுற்றுப் போனதன் உளைச்சல்.

அவன் ஆவலோடு வந்தபோது கனவுகள்... கற்பனைகள்... நெஞ்சம் நிறைந்த கனக்க... அந்தக் கண்கொண்டு பார்க்க முடியாத கொடிய காட்சி: நெஞ்சு வெடித்து விடும் போல்... நெஞ்சு கனத்து வெம்பி அழ: அவன் முகப்பில் நின்றிருந்தான். காற்று மூசிக்கொண்டிருந்தது. அதனோடு தனித்த விசும்பல். நீண்ட பெருமூச்சு. அவன் கண்ணில் நீர்முட்டி வழிந்தது. ஆறுதல்தர எவருமற்று...

'அம்மப்பாவின் நீண்ட உழைப்பு... பிறகு அம்மாவிற்குச் சீதனம்... பிறகு அக்காவுக்கு சீதனம்... பிறகு?

அவன் மெல்ல ஒரு அடி எட்டி நடந்தான். ஓரத்தில் 'மிதிவெடி அபாயம்" தொங்க விடப்பட்டிருந்தது. மற்ற அடி எடுத்துவைக்க கால் இயங்க மறுத்திற்று. சற்றுநேர ஓய்வு, பயம் கலந்த நிலை.

இதயம் நிமிடத்திற்கு எழுபத்திரண்டின் இருமடங்காய் துடித்திற்று. மறு அடி எடுத்து வைக்காத அவனது பார்வை அந்த வீட்டின்மீது இல்லை. குவிந்து கிடக்கின்ற பெயரிட முடியாத ஒன்றின் மீது.

வீட்டின் தனித்த சுவர் ஒன்று... அதில் அரைவாசிப் பகுதியைக் காணமுடியவில்லை. அதை மட்டும் ஏன் விட்டு வைத்துள்ளனர்?

அதில் தனித்த பறவையொன்று குந்தியிருந்துவிட்டுப் பறந்து சென்றது. அது கூட சிறகசைத்த களைப்பினால் தான் ஓய்ந்திருந்து பறந்திருக்க வேண்டும்.

பார்வையின் ஒளி சுவரில் மோதிப் பட்டுத் தெறித்தது. நத்தைகள் சுவரில் பீச்சியடித்திருந்தன. அவை நகருகின்றபோது அவற்றின் உடலில் இருந்து வெளிவரும் சுரப்பி ஒன்றினது வளைந்து நெளிந்த கோடுகளின் வரைபு. அவைகூட காலம் பட்டிருந்தன.

பலமாக ஊதித்தள்ளுகின்ற காற்றிலும் அந்த தனிச் சுவர் எக்கணமும் சரிந்து போகலாம். அதில் பாரிய பொத்தல். அது 'ஷெல்" துளைத்த அடையாளமாகத்தான் இருக்கும்.

வீடிருந்த இடத்தில் பற்றைக் காடாய் சடைத்து வளர்ந்திருந்தது காண்டை. பாம்புகளைத் தவிர வேறு எவையும் வாழத் தகுதியற்றுக் கிடக்கும் இடம்.

கவச வண்டிகளினதும், புல்டோசர்களினதும் அழியாச் சுவடுகள். இவைதான் இந்த வீட்டிற்கு கொள்ளி வைத்திருக்க வேண்டும். இது கடும் பிரயத்தனங்களின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது தான். இது கூட சில வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். இப்படிக் காலம் கழிந்த பிறகும் அதன் சுவடுகள் இறுகப்பதிந்தபடி.. இவையெல்லாவற்றையும் செய்து முடித்த அந்த புண்ணியவாளன் நிறைய இது பற்றிக் கற்றிருக்க வேண்டும். அதனால்தான் இதை அதிக கரிசனையுடன் மிச்சமின்றிச் செவ்வனே செய்து முடித்திருக்கிறான். பரிசு, பட்டிகள், பதக்கங்களுடன்...

பிறமொழியொன்று சுவரை ஆக்கிரமித்திருந்தது. அந்த மொழிக்கான தெளிவான விளக்கத்தைக் கேட்பதற்கு அப்போது எவரும் அங்கிருக்கவில்லை. சற்று நாட்களுக்கு முன்னர், அங்கு தங்கியிருந்து விட்டுப் போனவர்களின் கைவண்ணமாகத்தான் அது இருக்க வேண்டும். அதன் அழகு அவனை வஸீகரிக்குமாப் போல் சுவரில் அழகுக்கு அழகு சேர்க்க சன்னங்கள் ஒழுங்கின்றி பரந்து பட்டுத் தெறித்தபடிக்கு...

அந்த எழுத்துக்கள் எவ்வளவு அழகாக வளைந்து நெளிந்து காட்சி தருகின்றன. அந்த மொழியின் எழுத்துக்கிருக்கும் அழகு அவர்களின் உள்ளத்தில் இல்லாமல் போயிற்றே.

அவர்களின் மொழியிற்கூட வீட்டிற்கு எப்படியெல்லாம் அழகுப் பெயர்களைச் சூட்டுகிறார்கள்? அந்த மொழிக்காரர்களுக்கெல்லாம் ஏன் இவை புரியமறுக்கின்றன? தங்களுடையவற்றை எப்படி தம் தேசத்தில் அழகுப்பொருட்களாக்கி அலங்கரித்துக் கொள்கிறார்கள்? வீடு - தங்களால் மட்டும் இழக்க முடியாதாம்? பிறகு அவர்கள் மற்றவர்களின் துன்பத்தில் ஏன் இன்பம் காணுகிறார்கள்?

வீடு, அம்மாவின் சீதனம், அம்மாவின் பெற்றோர் அதை மனமுவந்துதான் சீதனமாகக் கொடுத்தனர். அது பெற்றோரது படிப்படியான உழைப்பின், வளர்ச்சியின் குறியீட்டுச் சின்னம். அம்மாவுக்குத்தான் அதை வழங்கவேண்டுமென்கிற ஒரே குறிக்கோள். அது நிறைவேறியது. அம்மம்மாவுக்கு மனத்திருப்தி.

வீடு, தனக்குக்கிடைத்த போது அம்மா, அதை தனக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருதினான். அம்மா தன் காலத்தில் முடிந்தவரை வீட்டை பாதுகாத்து, அழகுபடுத்தியே வந்திருக்கிறாள்.

பிறகு, அக்கா தனக்கே அந்த வீடு உரித்தாகப் போவதான பாவனையில் செயற்பட்டாள். அந்த வீடு தனக்கே கிடைக்க வேண்டும் என்கிற அவா அவளிடம். வீட்டை அழகாக வைத்திருப்பதே அவளது முதல்தர வேலை. மனதிற்கு இதம் தேடி எந்தநேரமும் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கும் புதிய பாடலை முணுமுணுத்தபடியே எல்லா வேலையையும் செய்வாள். சமையல் அறையின் வேலையிலிருந்து முற்றம் கூட்டும் வரையிலும் அவளது வாய் ஓயாது. தம்பி இடையிடையே குறுக்கிட்டு அக்கா பாடும்போது தன் வாய்க்குவந்தபடி பாடித்தள்ளுவான். ஆனால் அக்காவுக்கு அருகில் இருக்கமாட்டான். சில சமயங்களில் அக்காவின் கைகளில் இருப்பவை அவனைத் துரத்திச் சென்று பதம் பார்க்கும்.

அவள் தன் இஷ்டப்படியே எல்லாவற்றையும் செய்து முடிப்பாள். பிடிவாதக்காரப் பெண். "ஒருத்தரும் என்ர வேலையிலை பங்கெடுக்கத் தேவையில்லை. என்ர வேலை எனக்குத் தெரியும்" என்று எல்லோரையும் தடுப்பாள். அதனால் அவளது செயலில் எவரும் தலையிடுவது மிகக்குறைவு.

"மூத்தவளுக்குத்தான் வீடு குடுக்கவேணும். பெடியளுக்கு என்னத்துக்கு வீடு. அவங்கள் தாங்களே தேடிக் கொள்வாங்கள்" அம்மாவும் அப்பாவும் குசுகுசுத்தபோது அது அவளின் காதில் விழுந்திருக்க வேண்டும். அதனால்தான் வீட்டின் மீது அவளது கவனிப்புக்கள் இப்படி அதிகமாயிருந்தன.

அக்கா தனக்காய் சீதனமாய்ப் பெற்ற வீடு, திருமணமாகி மூன்று வாரந்தான் அதில் இருந்தாள். நாலாம் வாரம் அதைத் தனிக்கவிட்டு ஊரோடு கூடி அக்கா.. அத்தான்.. அம்மம்மா.. அப்பா..



அம்மா.. தம்பி.. அவன் எல்லோரும் கூடவே ஓடினர்.. அந்தவீட்டைப் பிரிந்து எங்கோ தொலைவில் விழித்திருந்த நீண்ட பொழுதுகள்...

எங்கோ ஒரு திண்ணையில் குந்தியிருந்து வீட்டின் நினைவில் சங்கமித்தபடி எல்லோரதும் நினைவுகளும் மூழ்கித்தவிக்கும.

காலங்கள் நீட்சியாக கரைந்தன. உயிர்க்கூடுகள் அங்குமிங்குமாக அந்தரித்தலைந்தன. வாழ்க்கை பெரும் சுமையாகியது. பொழுதுகள் ஒவ்வொன்றும் விடியாதவையாகவே இருந்தன. குடும்ப அங்கத்துவ எண்ணிக்கைகள் இறங்குவரிசையில் சென்று கொண்டே...

அவன் பிறந்து மூன்றாவது மாதத்திலேயே அம்மப்பா பரலோகம் போய் விட்டாராம். அவரது முகம் தெரியாத பருவம், பின்னாளில் வீட்டின் சுவரில் அவர் புகைப்படமாக காட்சியளித்ததைத்தான் அவனால் பார்க்க முடிந்திற்று. அவர் தான் அந்த வீட்டைக் கட்டியதாக அம்மம்மா கூறினாள்.

அதற்கு அவரது உழைப்பு அதிகமாகவே இருந்தது. வீட்டிற்கான நிலையம் பார்ப்பது, அத்திவாரக் கற்கள் போடுவதிலிருந்து கூரைக்கு ஓடு போடும் வரை தானும் ஒரு வேலையாளாகவே செயற்பட்டாராம். எப்படி அதை நல்லபடி அமைக்க முடியுமோ அதுவே அவரது முழுமூச்சு.

'சாமிப்பட அறைக்கு வேப்பம் பலகையிலதான் கதவு போடவேணும்" என்கிற அம்மம்மாவினது நம்பிக்கைக்காக அவர் அலைந்த இடம் கொஞ்சமல்ல.

இதை அம்மாவின் வாயிலிருந்து அவன் புரிந்து கொள்ள முடிந்தது. வீட்டைக் கட்டி முடிக்க எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்! எவ்வளவு காலம் பிடித்திருக்கும்! நிறையச் சிரமங்களுக்கு மத்தியில் தான் கட்டி முடித்திருப்பார்.

தான் கட்டிய வீடு, அதில் தான் உயிர் பிரிந்தாக வேண்டும் என்கிற அவா. அது நிறைவேறியது. அம்மப்பா வாழ்வில் முழுவதையும் நிறைவாக்கிய வெற்றிதான்.

வீடு கட்டி முடிந்த களையோட களையா நல்ல நாள் பார்த்தாராம் அம்மப்பா குடிபுகுதலுக்கென்று. சின்னப்பச் சாத்திரியார் தானாம் அப்ப வலுகெட்டிக்காரன். சொன்னால் தவறாத சோதிடக்காரன் அவரென்று அம்மம்மா அடிக்கடி சொல்லுவா. அம்மப்பா நாள் குறிக்கப்போனதும் சின்னப்புச் சாத்தியாரிட்டத்தான். புது வீட்டுக்குச் சோடிச்சு அலங்காரம் பண்ணினது கட்டைராசுவாம். கட்டைராசு கைப்பட்டால் காணும் காட்சி நூறு கோடி. வெளிவாசல்ல வாழைக்குலைகள் கட்டினதைப் பற்றி ஊரெல்லாம் பல நாள் திகைச்சுக் கதைச்சுதாம். நீர்வேலிக்குலையளை வண்டில் கட்டிப்போய் ஏத்திக் கொண்டுவந்து கட்டினாராம் கிழவர். சாமம் பொழுதென்று பாராமல் கிழவர் உழைத்த உழைப்பை அம்மம்மாவும் அம்மாவும் குரல் தளுதளுக்கக் கூறக்கேட்டிருக்கிறான். புது வீட்டுக்கு வந்த சனம் வீட்டைச் சுத்திப்பார்த்து கதைச்ச கதைகளை அம்மம்மா எப்படி மனப்பாடமாக்கி வைத்திருந்தா என்று அவனுக்கு ஆச்சரியம்! வீட்டுக்குப் 'பெயின்ற்" அடிச்சது நாகநாதி, அதுக்குப் பிறகு நாகநாதியின்ர மவுசு இயக்கச்சி வரைக்கும் பரவிச்சு என்றா அம்மம்மா. அந்த வீட்டப்பார்த்து அயல் ஊர்களில் கூட அதுமாதிரிக் கட்டினார்களாம் பலர், புது வீட்டுப் போட்டோகூட பல காலம் பத்திரமாகக் கிடந்தது.

"புதுசாக் கட்டின வீட்டில் முதல் காரியம் நடக்கப் போகுது. அவளுக்கெண்டு கட்டின வீடு. எவ்வளவு செலவழிஞ்சாலும் பரவாயில்லை. பெரிசாத்தான் கலியாணத்தைச் செய்ய வேணும்" என்று அம்மப்பா சொல்லி ஏற்பாடு நடந்ததாம். இந்தத் தடவை நாகநாதியோடு மகனும் வந்து வர்ணம் பூசினான் கட்டைராசுவுக்குப் பதிலாக அம்மாவின் சினேகிதிகளும் உறவுக்காரப் பெடியங்களும் வந்து அலங்காரம் செய்தார்களாம். பெண்பார்க்க வந்த அப்பா வீட்டையும் பார்த்து வியந்தாராம். "என்னை முதல் பிடிச்சுதோ இல்லை வீட்டை முதல் பிடிச்சுதோ"" என்று அம்மா பல தடவை அப்பாவைக் கேட்டது அவனுக்கு ஞாபகம். அம்மாவின் கல்யாணத்தோடு திரும்பவும் வீடு புதுக்கோலத்தில் திளைத்தது. எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய 'பாஷனில்" வீட்டை அம்மப்பா கட்டியிருந்தார். வீட்டுக்குப் 'பிளான்" கீறினது மலாயன் பென்சனியர் ஒருத்தராம். கல்யாணப் போட்டோவுடன் வீட்டையும் தனியாக ஒரு படம் எடுக்க வேண்டுமென்று எடுத்துக் கொண்டாளாம் அம்மா. அப்பாவுக்கும் கூட அது தனிச்சந்தோசம் தான்.

அக்காவின் சாமத்தியச் சடங்கு பிறகு கல்யாணம் என்ற போதெல்லாம் புதுக்கோலம் பூண்டது வீடும்தான். அக்காவை பெண்பார்க்க வந்திருந்த அத்தான் 'இந்த வீடு எப்ப கட்டினது?" என்று கேட்டது அம்மம்மாவுக்குத் தனி மகிழ்ச்சி "சோக்கான பெடியன். வலுகெட்டிக்காரன் போல கிடக்கு. எனக்கு நல்லாப் பிடிச்சுப் போச்சுது

~ சத்துருக்கன் ~

பெடியனை" வீட்டுக்கதை கதைத்த உடனேயே அத்தானை அம்மம்மாவுக்கு எந்த விசாரணைக்குமப்பால் பிடித்துக் கொண்டது. இந்தக் கலியாணத்துக்கு வீடு காலத்தோடு மாறி இளமையாகியிருந்தது. புதிய குளிர்ச்சியான நிறம். சரிகையின் மினுமினுப்பாய் ஒளிரும் அலங்காரம். வெளிநாட்டுப் பொருட்களால் அக்கா சிருங்காரித்திருந்தாள். பூங்கன்றுகளின் நளினம் அது ஒரு புதுமணப் பெண்ணின் நிறைவோடிருந்தது. கல்யாணப் படங்களோடு வீடியோவிலும் அது தன்னைப் பதித்தது.

நிலாக்காலங்களில் முற்றத்தின் முன்னே அது மோனத்தில் கிடக்கும். வெளியில் நின்று ஒரு தலமாக உருகும். மழை நாட்களில் கிறக்கத்துடன் மழையில் நனையும்.

அவனுக்கு கத்தி அழவேண்டும் என்றிருந்தது. குரல் நடுங்கித் துடித்தது. கண்களில் நீர் திரண்டு வழிந்தது.

அம்மா அக்காவுக்கு வீட்டை சீதனமாக்கிய பிறகும் அது தனக்கானதல்ல என்ற நினைப்பேயன்றி அழுது புலம்பினாள்.

அக்காவுக்கும் அத்தானுக்கும் தம் சொத்துப் பறிபோயிற்றே என்ற ஆறாத மனத்தவிப்பு. காலம் சலிப்புத் தட்ட "வீட்டபோகக்கூடிய நிலமை வந்தால் நீங்கள் என்ர வீட்டில போயிருங்கோ, பிரச்சினை தீர்ந்த பிறகு நாங்கள் இஞ்சாலுக்கு வாறம். அதுவரைக்கும் நாங்கள் அங்கால போகப்போறம்" என்று கூறி இந்த மண்ணின் வாடை பிடிக்காதபடி வெளிநாடு போயினர் அக்காவும் அத்தானும். அத்தான் தன் உயிரைப் பற்றித் தான் எப்பவும் நினைப்பவராச்சே, உயிர் உடலைவிட நேரிட்டாலும் என்ற பயப்பீதி. இதனால்தான் அவரை மனம் வேறுவழிக்கு திசை திருப்பியிருக்க வேண்டும். வெளிநாடு சென்றபிறகு அவருக்கு உயிர் பற்றிய பிரச்சினை இருக்கவில்லை.

வெளிநாடு சென்ற பிறகு, அக்கா எழுதும் கடிதம் ஒவ்வொன்றிலும் அடிக்கடி எழுதிக் கொள்வது. தன் வீடுபற்றித்தான்.

நிலமை எப்படியிருக்கிறது? என் வீடு எப்படி? ஏதாவது சேதம் ஏற்பட்டுள்ளதா? வீட்டிற்கு போய் வரக்கூடிய நிலமை இருக்கிறதா? வெகுவிரைவில் போய் இருக்கலாமா? இவைதான் கடிதத்தை நிறைத்திருக்கும்.

இவைகளைப்பற்றி அவளுக்கு எப்படிப் புரியவைப்பது? அவளது கேள்விகள் நியாயமானவைதான். இவற்றுக்கான பதிலை எப்படி வரையறை செய்வது? இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து இந்தப் போருக்குள்ளேயும் வாழ்ந்த பெண் "போரின் இழப்புக்களை எல்லாம் கண்ணெதிரே கண்டு கொதித்தவள். இப்போது ஒன்றுமே புரியாதவளாகி..."

அவனுக்கு அக்காவை நினைக்க பரிதாபமாக இருந்தது! ஒன்றும் விளங்காதவளாக, நிலமை புரியாதவளாக இருக்கிறாளே என்ற பார்வை அவளில், வீட்டார் எல்லோருக்கும்.

அக்காவின் மனம் அமைதிபெற 'வீட்டுக்கு பிரச்சினை வராது போய்வருவது தான் சிரமம். பிரச்சினை சற்றுக் குறையும் போல் தெரிகிறது தீர்ந்தால் போய்விடுவோம். அவன் மறுபதில்ல எழுதி அனுப்பிவிடுவாள், ஒரு சமாதானத்திற்கு. அக்காவின் அக்கறை, வெளிநாடு சென்றபிறகும் முழுதாய் வீட்டின் மீதுதான். அத்தானும் தன் சொத்தில் அதிக கவனம்.


வெளிநாடு சென்றபிறகு எவருக்குமே வராத அக்கறை இவர்களுக்கு மட்டும் ஏன் இப்படி வலுவாக...

அந்த வீடு தங்களுடையது தான் என்பதான ஞாபகப்படுத்தலாகவும் அது இருக்கலாம் அவன் எண்ணிக் கொண்டான்.

அம்மம்மா தன் சொத்து மூன்றாவது தலைமுறைக்கு மாறி விட்டதான மனத்திருப்தியில் வாழ்ந்தாள். பிறகு, வீடு இழந்த துயரில் நோய்பிடித்து உயிர் துறந்து போனாள். அவளது கனவுகள் கரைந்து போனதெண்ணி அம்மா சாவீட்டில் புலம்பித் தள்ளினாள்.

அம்மம்மாவின் பொக்கு வாய் நிரம்ப வெற்றிலை பாக்கு கடவாயில் இருந்து சிவப்புச்சாயம் வழிய புறுபுறுத்தபடி எப்போதும், அவள் தன் கை பொத்தி வீட்டின் நிலமதிராமல் பாக்குரலில் பாக்கிடிக்கும் அழகு. அதுவே ஒரு தனி ஞாபகம்.

அம்மம்மா பாக்கிடிக்கும் போது நிலத்தில் குழி விழுந்து போகுமென அக்கா புறுபுறுப்பாள். அவள் தன் பொக்குவாய் திறந்து "என்ர புருஷன் கட்டின வீடு" அதில எனக்குத் தான் முதல் பங்கிருக்கு..." அம்மம்மாவின் வார்த்தைகள்



அக்காவை சுடுமாப்போல் இருக்கும் அக்கா, அம்மம்மா அறளைபேந்து போய்க் கதைக்கிற கதைதான் இது வென்று வேறு கதையின்றி ஒதுங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வீட்டின் மூலையில் இறுதிவரை தன் கணவர் படுத்துறங்கிய கட்டிலிலேதான் அவளது படுக்கை.

"நான் இந்த வீட்டிலதான் சாகவேணும் என்ற மனிசன் சாகும் வரைக்கும் வாழ்ந்த இந்த மண்ணிலதான் என்ர உயிரும் போகவேணும். நான் செத்தாப்பிறகு என்ர படத்தை அவற்றை படத்துக்குப் பக்கத்திலை தான் தூக்கவேணும்"".

இவைகள் தான் அவளது வாய்ச்சொற்களில் அதிகம் ஒலிப்பவை. அவளது ஆசைகள் நியாயமானவை. ஆயினும் ஒன்று கூட நிறைவேறாமல் போனது மனதுக்கு இழப்புத்தான்.

அவளது கனவுகள் அவற்றிற்கு எவராலும் வலுச்சேர்க்க முடியாமல் போயிற்று. அப்பாவுக்கு அவளது கணக்கு பிசகிவிட்டதான கவலை.

அப்பா அந்த வீட்டின் முன்னைய காலத்தை பெரும் பேறாகவே கருதி வாழ்ந்தார். அதன் உறவில் நிம்மதி அடைந்திருந்தார். அது மலையேறிப் போனதான நினைப்பு இருந்தும் எப்பவும் வெகுவிரைவில் போய்விடுவோம் என்கிற நம்பிக்கையில் திளைத்திருந்த காலம். அப்பா அவனை தன் பிரதிநிதி ஆக்கிவிட்டு கண்காணாத தேசத்துக்கு போய்விட்டார். மாமாவீட்டுக்குச் சென்றுவரும் வழியில் குண்டொன்றின் அதிர்வில் அவர் இதயம் இறந்தது.

மூக்கினாலும், காதினாலும் குருதி வழிந்தபடி நடுவீதியில் அப்பாவின் சாவு, எல்லோருக்கும் திகைப்பாகவே இருந்தது. கடும் உழைப்பு, எதிலும் விடாமுயற்சி, ஐம்பது வயது தாண்டாத துடிப்பு. எல்லாம் அடங்கிப் போனதாய்.

அம்மா காலத்துக்கு காலம் வரும் இழப்புகளுக்குகெல்லாம் துவண்டு போனாள். அவளது வாழ்வு ஒடுங்கிப் போனது. இழப்புக்களே வாழ்வாகிற்று. சதா வேதனையோடு அவளது வாழ்வு.

யாரால் என்ன செய்யமுடியும் இதற்கு? ஆறுதல். அதுகூட சிறிது காலத்திற்குத்தான்.

தம்பி துள்ளித்திரிகிற வயதில் அந்த வீட்டின் முகட்டிலெல்லாம் பம்பரமாய் சுழன்றடித்தான். வீட்டை அலங்கோலம் செய்வது அவனது பணி. அதற்குப்பிறகு அக்காவிடம் கன்னம் பறக்க வேண்டித் தள்ளுவது அதற்கான பரிசு. வீட்டை இழந்து வந்த பிறகு எப்போதும் அந்த வீடு பற்றியே பேசுவாள். பிறகு அப்பாவின் அடி, உதைகளுக்கெல்லாம் தப்பித்துக் கொள்ள மறைவிடமின்றி தவித்து காலம்...

ஒரு நாள், தம்பி எவருமே அறியாதபடிக்கு எங்கோ போய் விட்டான். பல நாட்களின் அலைவுகளுக்குப் பிறகுதான் அவன் போன வழியை அறியமுடிந்தது.

தன் ஊர், சுற்றும், வீடு எல்லாம் இழந்துபோனது அவனுக்கு ஏதோ உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த விளைவின் முடிவுதான் அது.

பின்னர் இராணுவத்துடனான சண்டையொன்றின் பின் மரணித்த செய்தியுடன் அவனது உடலை மட்டும் தான் காணமுடிந்தது. குடும்பத்தைச் சந்திக்காத அந்த நான்கு வருடத்தில் அவன் தன்னால் முடிந்தவற்றைச் சாதித்திருப்பான்.

தம்பியை இழந்த கவலை வாட்டிற்று அம்மாவுக்கு, இன்னும் அதிகமாகவே... எனினும் தம்பியின் இழப்பு நியாயத்திற்கானது.

அவனை நினைத்தால் இப்போது நிம்மதிப் பெருமூச்சு அவனில்.

அது ஜடம். உயிரற்ற கற்குவியல்களின் கூட்டம். இனி எதையுமே அதனிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அதற்காக உழைக்க நீண்ட காலம் தேவைப்படும். அதற்கு உயிரூட்ட, உயிராய் அதனோடு வாழ எவ்வளவு காலம் வேணும். அதை மீள் நிலைக்கு எப்படிக் கொண்டுவர முடியும்? அவன் தனித்த ஒண்டிக்கட்டை. அவனால் என்ன செய்யமுடியும்?

அவன் நிதானமாகவே சிந்தித்துச் செயற்பட விரும்பினான். முதலில் அக்காவுக்கும் அத்தானுக்கும் ஒரு நீண்ட கடிதம் எழுதுவதா?

தன் சொத்துச் சொத்தென்று வாழ்ந்த அக்கா, அவள் எப்படி இந்தச் செய்தியை தாங்கிக் கொள்ளப்போகிறாளோ!


இதை அம்மாவுக்கு எப்படிச் சொல்லமுடியும்? சந்தோசத்தின் உச்சியில் நின்றபடி என்னை அனுப்பி வைத்தாளே அம்மா. இந்த இழப்புக்கு எப்படி முகம் கொடுக்கப் போகிறாளோ! அவனது மனம் நிலையின்றிச் சுழன்றடித்தது, ஒரு புயற்காற்றாய்.

வீட்டை விட்டு ஓடிப்போன போது பசுமாடு கட்டையில் கட்டியிருந்தது... நாய் தாழ்வாரத்தில் குழிதோண்டி குடங்கிப் படுத்திருந்தது... சுவரில் தொங்க விடப்பட்டிருந்த அம்மப்பாவின் உருவப் படம்... அம்மா - அப்பாவின் திருமண வாழ்த்து மடல்... அக்கா - அத்தான் திருமண வாழ்த்துமடல் இவை யெல்லாம் எங்கு போயினவோ! இவற்றை எங்கு தேட முடியும்?

அம்மப்பாவின் புகைப்படமொன்று மாமாவிடம் இருக்க வேண்டும். மற்றவைக்கு என்ன செய்வது.?

முதலில் அந்த நிலத்தில் கொட்டில் போட்டுக்கொள்வது. அதன் பிறகு. அம்மப்பாவின் உருவப்படம்... அதற்கருகில் அம்மம்மாவினது... அப்பாவினது... தம்பியினது... எல்லாவற்றையும் நிரையாகவே தொங்கவிட வேண்டும்.

**நன்றி :**
**வாசல் ஒவ்வொன்றும்**



## கணம் ~ தலைக்கவசங்கள் ~ கனவு

அவனும் நானும் தனியே நின்றோம்
இறுக்கமான இருள், இரவு பயமுறுத்தியது
நான் ஊடுருவிப் பார்த்தேன்
மதில் மேல் வரிசை வரிசையாய் தலைக்கவசங்கள்
அவனைச் சுரண்டினேன் சத்தமெழாமல்
"அங்கேபார் மதில்மேல் தலைக்கவசங்கள்"
அவன் மதிலைப் பார்த்தான் - எனினும்
என்னைப்போல் பயமடையவில்லை
"எனக்கொன்றும் தெரியவில்லை
எல்லாம் வெறும் பிரமை" என்றான்
எனக்கே என்மீது சந்தேகம் எழுந்தது
"ஒரு வேளை தலைக்கவசங்கள் பிரமைதானோ?"
"இல்லை நான் தேவகணம் பிசாசுகளைப்
பார்க்கக்கூடியவள்" நான் சொன்னேன்
"நானும் தேவகணம் பிசாசுகளைப்
பார்க்கக்கூடியவன்" ஆனால்
எனக்கொன்றும் தெரியவில்லை"
அவன் சொன்னான்
எனினும் என் பயம் நிலையாகவேயிருந்தது!

கனவிலே தெரிந்தன வரிசை வரிசையாய்
தலைக்கவசங்கள்
திடுக்கிட்டு விழித்தேன் - அவன் ஏற்கெனவே
விழித்தெழுந்து உட்கார்ந்திருந்தான்
தலையைத்தாங்கிப் பிடித்திருந்தன கரங்கள்
அவன் மீது கைவைத்தேன் உடல் நடுங்கிற்று
அவனும் பிசாசுகளைப் பார்த்திருக்கவேண்டும்
அல்லது
கனவில் வரிசை வரிசையாய்
தலைக்கவசங்களைக்
கண்டிருக்க வேண்டும்.

- சிவராகன் -

## தாய் நிலம்

எனது பாதங்களுக்கே தெரியாது
எனக்கொரு தாய்நிலம் இருப்பதாக
உதைக்கும் பொழுதும்,
கோடரியால் வெட்டும் பொழுதும்,
தோண்டும் பொழுதும்
மௌனமாகவே இருந்தது.
குழந்தை முதல் பருவம் வரை
நான் செய்யும் ஊமை சில்மிஷங்களை,
குருட்டு சித்திரங்களை ரசித்திருந்தது
புரிய முடியாத எனது மொழி
ஆடல், பாடல், குடிசை மேய்ந்த சிறுவீடு
தாய் தந்தையரின் சோகச் சுமைகளை
தாங்கி நின்றது.
எனக்கே தெரியாது
எனது தாய் நிலத்தின் பெறுமதி
அடையாளத்தை, வாழ்வியலை
பிறக்கப் போகும் எனது குழந்தையின்
உரிமையை காட்டி நின்றுற்று!
பூத்துக்குலுங்கும் மாமரத்துக்குயிலின்
ஓசையைக் கேட்கவோ?
எனது கிளை, வேர்களை ஆழப்படுத்தவோ?
சிற்றெறும்பு, பூச்செடி சுதந்திரமாய்
பூத்துக்குலுங்கி வாழவோ?
எனது இனத்தின் ஆள்புலத்தை
நிர்ணயிக்கவோ?
உலக வரைபடத்தில் எங்கோ ஒரு மூலையில்
எனது அடையாளத்தை வேற்று நாட்டு மனிதனுக்கு
காட்டவோ?
எனக்கு வேண்டும் தாய்நிலம்
என்னையும்,
எனது இனத்தையும்
ஒரு நாடோடியாகவோ? அல்லது
நதிகளின் ஓரத்தில் வாழ்ந்த
கூடார மனிதனாகவோ நாளை?
எவரும் பேசக் கூடாது!



- வில்சன் சுதாகர் -

## நிகழ்வுகள்

- கங்கா -

# பெண்களுக்கு அழகு சேலையா? சல்வாரா?

# பேண்கள் தினத்தில் ஊடகங்களின் போறுக்கித்தனம்!

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மலையகப் பெண்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்று மார்ச் 9ம் திகதி பொகவந்தலாவை டின்சின் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. சமூகத்திலும் குடும்பத்திலும் மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மையமாக வைத்தே இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலக்கியத்தில் பெண்கள், இலங்கையில் பெண்கள் அமைப்புக்களும் அவற்றின் செயற்பாடுகளும், பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகள், சமூக ரீதியாக பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஊடகங்களில் பெண்கள், மலையக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் பெண்ணிய முனைவுகளும் எனும் தலைப்புகளில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வழமையான கூட்டங்கள் நடைபெறும் முறையிலிருந்து சற்று வித்தியாசமான முறையில் நிகழ்வுகள் முழுவதும் கலந்துரையாடல் முறையிலேயே இடம்பெற்றது. பங்குபற்றிய அனைவரும் தயக்கமின்றி தமது கருத்துக்களை முன்வைக்க இது பெரிதும் துணையாகவிருந்தது. ஒவ்வொருவரும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றி பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

குடும்ப வன்முறைகளுக்கு மலையகம் மட்டும் விதிவிலக்கல்ல என்பதை பறைசாற்றும் வகையில் பரவலான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன, இடம்பெற்றுவருகின்றன. குடும்ப அந்தஸ்து, கௌரவம், கருதி இவ்வாறான சம்பவங்கள் வெளிவராமலேயே போய்விடுவதும் அவற்றுக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையும் இல்லாமல் போவதும் கவலைக்குரிய விடயங்களாகும். சம்பவங்களில் பாரதூரமான விளைவை



ஏற்படுத்தியவை மட்டும் ஆங்காங்கே தலைகாட்டி வெறும் ஊடகச் செய்திகளோடு மட்டும் நின்றுவிடுகின்றன. கடந்த வருடம் தகப்பனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட 12 வயது சிறுமியொருத்தி பின்னர் தீயிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவமே குடும்ப வன்முறைகளின் உச்சத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. (சிறுமியின் தாய் மத்திய கிழக்கில் தொழில் புரிகிறார் என்பதும் தகவலுக்காக குறிப்பிட வேண்டியுள்ளது) குடும்பத்தின் வறுமையும், செழிப்பான வாழ்வை நாடியும் வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்கள் இறுதியில் தங்கள் குடும்பமே சிதைவுற்று நிர்க்கதியான நிலைக்கு ஆளாகின்றனர்.

சமூகத் தளத்தில் மாணவிகள் ஆசிரியர், அதிபர் மற்றும் சக மாணவர்களால் சேஷ்டைகளுக்குள்ளாவதும், பாலியல் வன்முறைக்குட்படுத்துதலும், கடத்துதலும் பழிவாங்க ஆயுதமாகக் கையாளப்பட்டு வருவதும் மலையகத்தின் இன்றைய நிகழ்வுப் போக்காக மாறிவருகிறது.

பெருந்தோட்டத் துறையில் ஈடுபடும் பெண் தொழிலாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஒரு பெண்மணி தனது அனுபவத்தைக் கூறினார். குறிப்பாக ஆண் கண்காணிப்பாளர்களால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிப் பேசப்பட்டது. தோட்ட உயரதிகாரிகளால் தோட்ட சேவையாளர்களின் பதவியுயர்வு, இடமாற்றம் என்பவற்றை வழங்குவதற்கு அவர்களது மனைவி, பிள்ளைகளை பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்த கேட்கும் நிலை இங்கு காணப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் இணங்கிப் போகாதவிடத்து அவர்கள் எதிர்மறை விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேர்வதும் இயல்பாகிப் போயுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டது.

நூற்றுக்கு 44 வரையான பெண்களுக்கு நிரந்தர கருத்தடை முறை மலையகத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே பெண்களின் உரிமையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக மட்டுமல்லாமல் மலையக தேசத்தின் நீடித்த இருப்புடனும் தொடர்புபடுத்தி கலந்துரையாடப்பட்டது. சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்ட வகையில் இக்கருத்தடை முறையை மலையகத்தில் செயற்படுத்தி வருகின்றது. தொழிலாளப் பெண்களுக்கு சலுகைகளைக் காட்டியும், அவர்களை மூளைச் சலவை செய்தும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. இது மலையக தேசத்தின் நீடித்த இருப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் என்ற வகையில் தொழிற்சங்கங்களில் அதிக எண்ணிக்கையான பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களின் அதிகாரச் செயற்பாடு பெயரளவிலானதாகவே இன்றுவரை இருந்து வருகின்றது. சகல அதிகாரத்தையும் ஆண்களே கையிலெடுத்து செயற்படுத்துபவர்களாகவும் அவர்களது நலன்சார்ந்த விடயங்களுக்கு தொழிற்சங்க பெண்களை பயன்படுத்திவருவதுமே நிகழ்கின்றது.

இதைவிட ஊடகங்களில் பெண்களை சித்திரிக்கும் விதம் பற்றியும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டது. மார்ச் 8ம் திகதியை நினைவுபடுத்தும் வகையில் எமது ஊடகங்கள் எவ்வாறு பெண்களை வர்த்தகப் பண்டமாக்கினர் என்பது எல்லோரும் அறிந்ததே. பெண்கள் குறித்த சமூக அக்கறையோடு வழங்கப்பட்ட தலைப்புக்கள்: "பெண்களுக்கு அழகு சேலையா? சல்வாரா? என்பன போன்றதாகவே இருந்தன. இவற்றுக்கெதிராக கூட்டாக நடவடிக்கை எடுக்க அக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள் தீர்மானித்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒன்றாகும்.

மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடல் தொட்டுச் சென்றது எனலாம். கலந்துரையாடலின் இறுதியில் பெண்களுக்கெதிராக நடைபெறும் வன்முறைகள் மற்றும் சமத்துவமின்மைகளுக்கெதிராக கூடியிருந்த பெண்கள் குழுவாக செயற்பட முன்வந்து "அதிர்வுகள்" மலையகப் பெண்கள் அமைப்பு என்கின்ற ஒன்றையும் உருவாக்கினர்.

படித்த மத்தியதரவர்க்க ஆசிரியர் கலாசாரம் ஒன்று மலையகத்தில் பரவி வருவதை இங்கு இனங்காணக்கூடியதாக இருந்தது. ஓரிருவரைத்தவிர இதில் பங்குபற்றியவர்கள் அனைவரும் ஆசிரியர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களை குறைத்து மதிப்பிடுவதும் தம்மை உயர்வாகக் கருதும் போக்கும் வெளிப்பட்டு நின்றது.

கருத்தியல் தளத்தில் பெரும் பின்னடைவையே இவர்கள் எதிர்கொள்கின்றார்கள் என்பது அவர்களது கருத்துக்களிலிருந்து வெளிப்பட்டது. ஆணாதிக்க சித்தாந்தத்தின் காவிகளாகவே இவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய ஒன்று. கருத்தியல் ரீதியாக நிலவும் ❍

- நிர்மா -

# தமிழாலயத்தின் கலைச்சாரல்

"வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும்" எனும் வாசகத்தை தமது தாரக மந்திரமாகக் கொண்டியங்கும் தமிழாலயத்தினரின் "கலைச்சாரல்" எனும் நிகழ்வு கடந்த மார்ச் 17ம் திகதியன்று சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

தலைமையுரையை ஆற்றிய விழாத் தலைவர் கு.றஜீவ் நிர்மலசிங்கம், 'கல்லூரி கற்றல் காலத்தை நிறைவு செய்த திறமைமிகு மாணவர்களின் பங்களிப்பினூடாக தமிழ் கலாசார பாரம்பரியங்களை, விழுமியங்களை கட்டிக்காப்பதற்காகவும், சமூகசேவைகளைப் புரிவதற்காகவும் தமிழாலயம் தன்னை அர்ப்பணிக்கின்றது என்றார்.



"தொலைவினிலே தெரிகிறது தொட்டு விடுவோமா? எனும் தலைப்பில் கவிச்சமர் இடம் பெற்றது. தொட்டுவிடுவோமா என்ற தலைப்பில் சி.ஐ.ஆ.சியாம், எஸ்.கார்த்திகா, ஏ.ஆர்.றிகாஸ் ஆகியோரும் தொலைவினிலே என்ற தலைப்பில் ரி.தமிழமுதன், எஸ்.தஷந்திறிரேகா, பி.எஸ்.செந்தூரன் ஆகியோரும் கவிச்சமர் புரிந்தனர்.

இதில் யதார்த்தத்தை வெளிப்படுத்தி, துடிப்புமிக்க இளம் ரத்தங்கள் சமர்புரிந்தனர்.

இன்றைய அரசியல் நிலைமைகள் அவர்களுடைய கவிப் பொருளாயிற்று.

கவிதையில் இன்றைய அரசியல் நாயகர்கள் எல்லோரும் வந்து போனார்கள். யதார்த்தத்தில் அவரவர் பங்கிற்கேற்றபடி கவிதையிலும் வாழ்த்தும் எள்ளலும் பெற்றுக் கொண்டனர்.

கட்டுநாயக்கா சம்பவத்திலிருந்து பொங்கு தமிழ் வரை நடைமுறைச் சம்பவங்கள் எல்லாம் அவர்கள் பாடு பொருளாயின.

இங்கிருப்பது இனப்பிரச்சினையல்ல மலேரியா பிரச்சினையே என ஐ.நா.சபையில் முழங்கிய மானத்தமிழன் (?) கதிர்காமர், வீ.பி. இல்லையெனில் பொங்கு தமிழெங்கே போன்ற வாசகங்கள் மேடையில் முழங்க கரகோஷங்கள் காதைப் பிளந்தது. கவியரங்கிற்கு கோபால கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

மேலைத்தேய, கீழைத்தேய இசைச் சங்கமத்துடன் பல்லியம் எனும் இசைநிகழ்ச்சி இடம்பெற்றது. இவ் மென்மையான இசையால் அரங்கம் அமைதியடைந்திருந்தமை இதன் மீதான ரசனையை வெளிப்படுத்தியது. பரிசு பெற்ற ஓர் சிறுகதையிலிருந்து படைக்கப்பட்ட இறவாதவர்கள் எனும் நாடகம் போரின் பாதிப்பை மையமாக வைத்து அரங்கேற்றப்பட்டது. இராணுவ அட்டூழியங்கள், வெட்டுப் புள்ளி,, பட்டினி, பாலியல் வல்லுறவு, அங்கவீனம், உடமையிழப்பு, உளவியல் பாதிப்பு, சொத்தையெல்லாம் விற்று வெளிநாடு செல்ல ஆயத்தமாகி கொழும்பில் தங்கியுள்ள வேளை பயணமுகவரால் ஏமாற்றப்பட்டு தாக்கப்படல், பிற்பொக்கட் என பல்நோக்கை மையப்படுத்தி முடிவும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப்பட்டது. இளஞ் சமூகத்தின் துணிவுமிக்க இப்படைப்பு அனைவராலும் மனம் திறந்து பாராட்டப்பட வேண்டியதொன்று.

இந்நாடக இயக்கம் ஏ.ஆர்.திருச்செந்தூரன். தமிழர் பண்பாடுகளை கட்டிக்காப்பதில் நாம் தோற்றுப் போயுள்ளோமா? எனும் பிரதான தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெற்றது. இதில் வாதிகளாக தோற்றுப்போயுள்ளோம் எனும் தலைப்பில் கே.கலாகரன், கே.சிவகுமாரன், எஸ்.கணபதிப்பிள்ளை ஆகியோரும் தோற்றுப்போகவில்லை எனும் தலைப்பில் பிரதிவாதிகளாக எஸ்.பி.நாகநாதன், எஸ்.ராஜகுலேந்திரா, கே.கே.உதயகுமார் ஆகியோரும் வாதிட்டனர்.

தமிழ் பண்பாடு தோற்கவில்லை என்று வாதிட்டோர் அது எவ்வாறு உடன் கட்டை ஏறல்கள் போன்ற பிற்போக்குத் தனங்களைக் கைகழுவி விட்டு தன்னை மறுசீரமைத்தக் கொண்டது என்று எடுத்துக் காட்டிப் பேசினர்.

தோற்றது என்று வாதிட்டோர் இளம் சமூகத்தின் திசைமாறும் பாதை தொடர்பாக தன் பெரும் மனக்கவலையினை வாதி கே.கலாகரன் வெளிப்படுத்தினார். பேராசிரியர் கா.சிவத்தம்பி பண்பாடு பற்றி கூறிய "பண்பாடு அடிப்படையானது என்றாலும் புறநிலையானது. சமூக மாற்றத்திற்கு ஏற்ப சிற்சில மாற்றங்களை உட்கொள்ளக்கூடியது" என்பதனையும் எடுத்துகூறி அதற்கேற்ப தமது வாதத்தினை பிரதிவாதிகள் தொடர்ந்தனர், நகைச்சுவையான பேச்சுக்களுடன் உணர்ச்சிபூர்வமான பேச்சும் இடம்பெற்றது. பட்டி மன்றத்திற்கு பேராசிரியர் சோ. சந்திரசேகரம் நடுநிலை வகித்தார்.

கலாஷேத்ரா மாணவிகளின் பரதநாட்டியமும் கண்களிற்கு விருந்தாக அமைந்தது. பெரும் இலக்கினை நோக்காகக் கொண்ட தமிழாலயத்தினரின் பயணம் தொடர தமிழ் பற்றாளர்களின் பங்களிப்பு நல்கப்பட வேண்டியது அவசியமானதொன்றே. ❍

- எம்.கே.எம்.ஷகீப்

பலஸ்தீனின் இரண்டாவது மக்கள் எழுச்சி (இந்தி-பாழா) தொடங்கி கிட்டத்தட்ட 17 மாதங்களாகின்றன. இதுவரை 1500க்கு மேற்பட்ட பலஸ்தீனியர்களும், 350 வரையிலான இஸ்ரேலியர்களும் பல்வகையான தாக்குதல்களால் கொல்லப்பட்டிருக்கிறர்கள். பேச்சுவார்த்தைகள், சமரசங்கள், ஆலோசனைகள் என பல்வேறு யுத்தகால பக்க நிகழ்வுகள் நடந்தாலும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பும், அதை எதிர்க்கிற மக்கள் எழுச்சியும் ஓய்ந்ததாக இல்லை. நாளாந்தம் அரபுப் பத்திரிகைகளின் முன், உட்பக்கங்களை பலஸ்தீனியச் செய்திகளே இடம்பிடித்து வருகின்றன. தினமும் பலஸ்தீனியக் கொடியில் சுற்றப்பட்ட இளைஞர்களின் சடலங்களைப் பார்க்க

வெளியே உலகம் இன்னும் இதுபற்றி ஒன்றும் செய்யாமல் கையாலாகாத்தனமாய் இருக்கிறது. இந்த அநீதிகளுக்கெதிராக அது இன்னும் உரிய முறையில் குரல் கொடுக்கவில்லை. இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்பு அநீதிகளை எதிர்கொள்ள அது இன்னும் தயாராக இல்லை. இந்த அனைத்தையும் பார்த்து தன் எதிர்ப்பைக் கூட காட்ட முடியாதிருக்கிறது இன்னும் அதனால். இன்னொரு வயதான யுத்தக் குற்றவாளியான ஷரோனை நீதிக்கு முன் கொண்டு வரமுடியாமல் இருப்பதும் இந்த உலகு தான். சுதந்திரமாக பத்திரிகையாளர்களுடன் கேளிக்கையான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு உலவிவருகிறார் அந்த முதிர்ந்த குற்றவாளி.!

இதெல்லாம் ஒருபுறம். மறுபுறம் நான் இங்கு எனது அலுவலகத்தில், அங்கு (பலஸ்தீனில்) தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் நபர்களின் எண்ணிக்கைகள் புதிது புதிதாய் வந்து கொண்டிருக்க இருந்து கொண்டிருக்கிறேன்.

பாலில்லாத குழந்தைகள், செலவுக்கு வழியில்லாத மனைவிகள், பல பிள்ளைகளுடன் மனைவிகளைப் பறிகொடுத்த கணவன்கள், தந்தைகள்.. தங்கள் ஞாபகங்களில் வைத்திருக்க இறந்து போனவர்களின் கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தை மட்டுமே சுமந்து திரிகிற எத்தனை தாய்மார்கள், தங்கள் விருப்பத்துக்குரிய தொலைக்காட்சித் தொடரைப் பார்க்க முடியாது போன எத்தனை மனிதர்கள்...

இறந்து போனவர்களின் சடங்குகளுக்காக இன்னும் இன்னும் தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சவப்பெட்டிகள் மேலும் மேலும் தயாராகின்றன. இடிந்து போன வீட்டின் சுவர்களின் எங்கோ ஓர் முலையில் தொங்கவிடுவதற்காக தினமும் எத்தனையெத்தனையோ புகைப் படங்கள் சட்டமிடப்பட்டு வருகின்றன. மேலும் மேலும் ஏக்கங்கள், துயரங்கள். கண்ணீருடன் கழிய புதிது புதிதாய் இரவுகள்.. காற்றில் எதிரொலித்துச் சுற்றுகிற புதிது

பின்னால் என்னால் சரியான வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ள முடியாதிருக்கிறது. பலஸ்தீனில் இருக்கிற எனது உறவுகளுடனான எனது தொலைபேசி அழைப்புக்களின் அதிகமான நேரங்களை மௌனந்தான் போர்த்தியிருக்கிறது.

எனது சகோதரனின் கார் அவரின் வீட்டுக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த போது குண்டுத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. அவர் ஒரு மருத்துவத்தாதி. இஸ்ரேலியத் தாக்குதலால் காயப்படுபவர்களுக்குச் சிகிச்சையளிக்க ரமல்லாஹ்வில் எப்போதும் சுற்றிக் கொண்டிருப்பவர் அவர். பாவித்த ஆனால் அவருக்குப் புதியதான அந்தக் காரை வாங்கியதையிட்டு நான் அவருக்கு வாழ்த்துச் சொல்ல இருந்தேன். ஆனால் நான் அவருடன் அதற்காகத் தொடர்பு கொண்ட போது அந்த ஷெல் சில அடிகள் தூரத்திலிலுள்ள அவரின் வீட்டிலோ அல்லது உறங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளிலோ விழுந்து வெடித்திருக்கவில்லை. அவரின் காரில் விழுந்து

இஸ்ரேல் பலஸ்தீனியக் கைதிகளின் கைகளில் நீல நிறத்தில் எழுதி அவர்களை வேறுபடுத்தி அடையாளப்படுத்தி வைத்திருக்கிறது எனறு தெரிவித்திருக்கிறது.

15-60 க்குமிடைப்பட்ட ஆயிரக் கணக்கான பலஸ்தீனியர்களை வதைமுகாம்களில் அடைத்து வைத்திருப்பதாக அது மேலும் தெரிவித்திருக்கிறது. ஆனால் இது உலகில் எவரையுமே உசுப்பிவிடவில்லை போலத்தான் இருக்கிறது.

நூற்றுக் கணக்கில் சிறுவர்கள், மருத்துவத்துறையினர் உட்படவானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும், இஸ்ரேலிய இராணுவத்தினர் தாங்கள் நுழைகிற ஒவ்வொரு முகாம்களிலும், கிராமங்களிலும் தங்களது வழமையான பாணியிலான கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகளை நடாத்துவதாகவும், தண்ணீரை மாசுபடுத்தல், மின்சார தொலைபேசி வசதிகளில் இடையூறு ஏற்படுத்துதல், வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கல், அம்புலன்ஸ்களின் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்துதல், காயப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கவிடாமல் தடுத்தல் என பல அடாவடித்தனங்களில் இறங்கி வருவதாகவும் இந்த இஸ்ரேலிய மனித உரிமைகள் அமைப்பு கூறியுள்ளது.

இன்னொருபுறத்தில், தங்கள் சுதந்திரத்திற்காக போராடுகிற மக்களை மௌனப்படுத்துகிற அப்பாவிகளுக்கெதிரான ஓர் அநீதியான ஆக்கிரமிப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள பல இஸ்ரேலியர்கள் குறிப்பாக சில இஸ்ரேலிய இராணுவத்தினர் விரும்புகிறார்களில்லை. தன் சொந்தக் காலில் நின்று தன் இருப்புக்காகப் போராடிவரும் பயங்கரவாத நாடு என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிற ஒரு தேசத்தின் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பை தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாக பல இராணுவத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

பலஸ்தீனச் சாவுகள், அங்கு இடம்பெறும் மிக மோசமான நிகழ்வுகள் ஏன் பலரிடத்தில் மிக அற்பளவான கோபத்தை மாத்திரமே ஏற்படுத்துகிறது என்பதையிட்டு எனக்கு ஆச்சரியமான கேள்வியாய் எழுகிறது. ஏன் இஸ்ரேலின் அடாவடித்தனங்கள், யுத்தக் குற்றங்கள் ஒரு பயங்கரவாதத்திற் கெதிரான பட்டியலில் இடம்பெறாதிருக்கிறது என்பதும் எனக்கு ஆச்சரியம் கலந்த கேள்வியே! அமெரிக்க மக்களுக்கு, தங்கள் சொந்த வரிப்பணத்தின் மூலம்தான் உதவிகளைப் பெற்று இந்த அநியாயங்களை இஸ்ரேல் புரிகிறது என்பது நன்றாகவே தெரிந்திருக்கிறது. ஆனால், அவர்கள் ஒருவகை அசமந்தத்துக்குட்பட்டிருக்கிறார்கள். இதுவும் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஏன் பலஸ்தீனக் குழந்தைகளை மனிதர்களாகக் கருதுகிறார்களில்லை?, ஏன் பலஸ்தீனத் தாய்மார்களுக்கு மேற்குலகத் தாய்மார்களிடமிருந்து அனுதாபங்கள் கிடைப்பதில்லை? என்பதெல்லாம் எனக்கு கேள்விகளாக விரிகிறது. இப்படி ஆச்சரியங்களும் கேள்விகளும் மில்லியன் கணக்கில் இருக்கிறது. ஆனால் விடைகள்..?

இந்தாருங்கள் இந்தக் கணக்கையும் இப்போது புதிதாய் சேர்த்துக் கொள்ளுங்கள் - மேற்குக்கரை மற்றும் காசாப் பகுதியில் 36 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

எனது எழுத்துக்கள் ஓலங்களாக மாறிப் போவதற்கு முன்னால் நான் எழுதுவதை நிறுத்துவது நல்லது என நினைக்கிறேன்.. ஆனால் ஓலங்களை இந்த உலகம் கேட்குமென்றிருந்தால்....!

# உலகத்தால் என் ஓலங்களைக் கேட்க முடியுமாகயிருந்தால்...



முடிகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னால் பலஸ்தீன வாலிபன் ஒருவனை பகிரங்கமாக வீதியில் வைத்துக் கொன்ற நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக AFP நிறுவனம் படம்பிடித்து பகிரங்கமாக்கியிருந்ததை பார்க்க முடிந்தது. சில நாட்களுக்கு முன்னர் சவுதி, இஸ்ரேலை அரபு நாடுகள் கூட்டாக அங்கீகரிப்பதன் மூலம் பிரச்சினைகளை பெருமளவு தீர்க்கலாம் என்று ஆலோசனை வழங்கியிருந்தது. என்றாலும் இது பல தரப்பிடமிருந்து எதிரும் புதிருமான விமர்சனங்களுக்குட்பட்டது. குறிப்பாக ஹமாஸ் பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தது. இப்படிப் போகிற பலஸ்தீன நிகழ்வுகளுடன் தொடர்பான ஒரு கட்டுரை கீழிருக்கிறது. ரம்ஸி பரோத் என்கிற பலஸ்தீனின் முக்கிய பத்திரிகையாளரின் எழுத்துக்கள் இவை. இவர் Palastine Chronicle என்கிற இணையப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவுள்ளார்.

மிருக்கத்தனம் உச்சத்துக்கு வளர்ந்து விட்டது. அநீதி முன்னெப்போதும் இந்தளவு ஆழமான்தாகவும் ஆக்கிரமிப்புத்தனமாகவும் இருந்ததில்லை. எண்ணிக்கையற்று பலஸ்தீனியர்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுகிறார்கள் இப்போது. கைது செய்யப்படும் அப்பாவிகளை அடைத்து சித்திரவதை செய்வதற்காக வதைமுகாம்களை நிறுவி வருகிறது இஸ்ரேல். கைதிகளின் கைகளிலே அவர்களை அடையாளப்படுத்த நீலநிறத்தில் அடையாளமிடத் தொடங்கியிருக்கிறார்கள். பெண்களும் குழந்தைகளும் இரக்கத்தனமற்று கொல்லப்படுகிறார்கள்.

ஜபாலியாவில் 19 பேர், ஜெனினில் 23 பேர், பலாதாவில் 13, ரமல்லாஹ்வில் 5 என கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை வந்து கொண்டிருக்கிறது. சில கணங்களில் இன்னும் சில எண்ணிக்கைகள். ஜெனினில் 12. இது புதிதா அல்லது ஏற்கனவே வந்ததின் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட எண்ணிக்கையா? எனக்கு குழப்பமாகயிருக்கிறது. இதை உறுதி செய்து கொள்ள அரபு ஊடகங்களின் பக்கம் செல்கிறேன். அவை புதிது. சுடச் சுட வந்த செய்திகள். பலஸ்தீனக் கொடியில் சுற்றப்பட்ட பல சடலங்களை நான் அந்த ஊடகங்களில் புதிது புதிதாய் தினமும் பார்க்கிறேன்.

எனக்கு அழுகை முட்டிக் கொண்டு ஒரு சிறு ஓலமாக இதயத்தை விட்டு எப்படியோ தப்பி சத்தமாய் வெளியே வந்து விடுகிறது. இதைக் கேட்கிற என்னோடிருக்கிறவர்களில் யாராவது "ஆ யு ஓகே?" என்று கேட்கிறார்கள். நான் சமாளித்து "ஓம், கால் மேசையில் முட்டி விட்டது" என்கிறேன். ஆனால் இப்படிப் பார்த்தால் இந்தச் செய்திகளுடனும், இந்த எண்ணிக்கைகளுடனும் போனால் இப்போதெல்லாம் எனது கால்கள் அடிக்கடி மேசையில் முட்டிக் கொள்கிறது என்று தான் சொல்ல வேண்டிவரும்.

மிக மிக அப்பாவிகளான எத்தனையோ பேர் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கனவுகளுடனும், நம்பிக்கைகளுடனும் வாழ்ந்த எத்தனை பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்! தங்கள் பொழுதை ரீவி திரையின் முன்னால் கழித்துக் கொண்டிருக்கிற எத்தனை சிறுசுகள் கொல்லப்பட்டிருப்பார்கள்.?

புதிதான துவக்கொலிகள் எங்கோ யாராவது ஒருவனின் தலையிலோ, இதயத்திலோ, அல்லது உடம்பின் எங்காவது ஒரு பாகத்திலோ குறிவைத்து இறங்கிக் கொண்டு. சிலது வெறுமனே இவைகளை விட்டு விலகி எங்காவது வெறுமை நோக்கி...

எனது தொலைதூரத் தொலைபேசிகளின் அழைப்புக்களும் அதிகரிக்கின்றன. "தந்தையே, எப்படியிருக்கிறீர்கள்?, முகாமில் பல பேரைக் கொன்று விட்டதாகக் கேள்விப்படுகிறோமே.?" என்கிறேன். "நன்றாகயிருக்கிறேன். ஆனால் அபாச்சி உலங்குவானூர்திகள் மீண்டும் வந்து விட்டதென நினைக்கிறேன். சத்தம் கேட்கிறதா கேள்" என்று பதில் தருகிறார் தந்தை!. பூம் பூம் சத்தங்கள்.. பெரும் குண்டோசைகள்...

எனக்கு சரியான கவலையாக, மனச் சோர்வாக இருக்கிறது. ஒரு வானூர்தி வந்து குண்டுகளைப் போட்டுச் சென்ற பின்னால் எனக்கு துடிப்பு வந்துவிடுகிறது. இந்த நேரத்தில், தன் பக்கத்து வீடுகளில் நூறாவது தடவைக்கு மேலாகவும் குண்டுகள் போடப்பட்ட ஒரு தந்தைக்கு அது பற்றி ஒரு மகனாக நீங்கள் எப்படி என்ன சொல்வீர்கள்? அவருடன் என்ன கதைப்பீர்கள்? "நம்பிக்கையோடு இருங்கள்" என்று தான் நான் இப்போது தொலைபேசி உரையாடல்களில் கடைசியாகச் சொல்கிற வார்த்தைகளாக இருக்கின்றன. பின்னர் "எங்கள் இதயங்கள் உன்னோடுதான் இருக்கின்றன, பிரார்த்தித்துக் கொள்" என்கிறார்கள்.

ஆனால் இப்போது கொலைகள் எல்லாம் படுகொலைகளாக கூட்டுக் கொலைகளாக மாறிய

வெடித்திருந்தது!

இவற்றையெல்லாவற்றையும் கோபப்பட வைப்பது என்னவென்றால் யாரும் எதுபற்றியும் கவலைப் படாமல் கரிசனைப்படாமல் இருப்பது தான். அதிலும் குறிப்பாக பலஸ்தீன நிகழ்வுகள் பற்றி யாரும் பெரிதாக இப்போது அக்கறைப்படுகிறார்களில்லை. அமெரிக்க ஊடகம் பலஸ்தீனர்கள் எதிர்த்தாக்குதலுக்காக இஸ்ரேலியர்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களை பெரிதுபடுத்துகிறது. ஐரோப்பாவும் தனது இராஜதந்திரப் பண்பாடுகளை இழந்து வருகிறது. அது இருந்திருந்தவாறே இஸ்ரேல் மீது கண்டனங்களைத் தெரிவிக்கிறது. தயங்கித் தயங்கியே பல கண்டனங்கள், வெளிப்பாடுகள் வருகின்றன. ஆனால் அவை அரசியல் பெறுமதியற்றதாகவே பெரும்பாலுமிருக்கிறது. உலக அரசியல் நிரல்களை அமெரிக்காவே கையாண்டு வருகிறது. அதிலும் மத்திய கிழக்கின் அரசியல் அமெரிக்காவின் ஆட்டல்களே. அமெரிக்க அரசாங்கம் கண்களை மூடிக் கொண்டிருக்கிறது. சிறுவர்களைக் கொல்கிற இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு அது பலவிதங்களில் ஆதரவு அளித்துக் கொண்டிருக்கிறது. ஷரோனுக்கு இருந்திருந்தவாறே சுயகட்டுப்பாட்டுக்குள் இருக்குமாறு சொல்கிறது. பலஸ்தீனியார்களைப் பார்த்து நீங்கள் தாராளமாகச் சாவுங்கள் என்கிறது.!

இஸ்ரேலிய மனித உரிமைகள் அமைப்பான B'tselem -இது அமெரிக்காவின் பெரும் மனித உரிமைகள் அமைப்புக்களை விட தன் சொந்த நாட்டின் மேல் பலத்த விமர்சனங்களை வைத்திருக்கிறது-

# மணிரத்தினமும் ஈழத்தமிழர் பற்றி படம் எடுத்திருக்கிறாராம்!

- யஷோ-

ஈழத்தமிழர் பிரச்சினையை மையமாகக் கொண்டு மணிரத்தினத்தின் இயக்கத்தில் அண்மையில் வெளிவந்த படம் கன்னத்தில் முத்தமிட்டால். இப்படத்தில் மாதவன், சிம்ரன், நந்திதாதாஸ், கீர்த்தனா ஆகியோர் நடித்துள்ளனர். இப்படத்தின் கதை, திரைக்கதை, இயக்கம்-மணிரத்தினம், வசனம்-சுஜாதா, இசை-ஏ.ஆர்.ரகுமான் ஒளிப்பதிவு-ரவி.கே.சந்திரன், தயாரிப்பு-ஜி.சீனிவாசன்

அண்மைக் காலத்தில் ஈழத்தமிழர் சம்பந்தமாக தமிழ்நாட்டிலிருந்து திரைப்படங்கள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. தெனாலி, நந்தா, காற்றுக்கென்ன வேலி என்று இந்த வரிசை நீள்கிறது. (இதில் நந்தா திரைப்படத்திற்கு இலங்கையிலிருந்து சுவிஸ்சர்லாந்து நாட்டிற்குப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் ஒருவர் நிதியுதவியிருக்கிறார் என்பதும் ஒரு தகவல்) இந்த வரிசையில் இப்போது களமிறங்கியிருப்பவர் மணிரத்தினம்.

தெனாலி படத்தினூடாக ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் விரிந்த ஒரு சந்தை இருக்கிறது என்பதை மணிரத்தினத்திற்கு அறிமுகப்படுத்தியவர் கமல்ஹாசன் தான்.

தனக்கும் பிரச்சினை இல்லாமல் போட்ட முதலுக்கும் பழுதில்லாமல் அதேநேரம் புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழர் சந்தையையும் கணக்கில் கொண்டு கமல் செய்த படம் தான் தெனாலி.

மணி ரத்தினம் மட்டும் என்ன குறைந்தவரா? அவர் களமிறங்கியதில் இப்போது வந்திருக்கிறது கன்னத்தில் முத்தமிட்டால்.

கன்னத்தில் முத்தமிட்டால் என்ன சொல்கிறது?

பொறியியலாளரான மாதவன் மனைவியின் பெயரில் கதை எழுதி வருகிறார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள். மூத்தவள் பெண். இந்த ஒன்பது வயதுக் குழந்தை கீர்த்தனா அவர்களுடைய குழந்தை இல்லை. இலங்கையிலிருந்து அகதியாக தப்பி இராமேஸ்வரம் வந்த நந்திதாதாஸின் குழந்தை. நந்திதா குழந்தையைப் பெற்று விட்டு மீண்டும் இலங்கை சென்று விடுகிறாள். இதை அவசரம் அவசரமாக அவளுடைய பிறந்த நாளின் போது சொல்லி விடுகிறார்கள் பெற்றோர். கீர்த்தனா தன் சொந்தத் தாயைப் பார்க்க வேண்டும் என அடம் பிடிக்க, மாதவன் மனைவியுடனும் கீர்த்தாவுடனும் இலங்கை வருகிறார். கொழும்பில் ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மயிரிழையில் தப்பி நந்திதாவைத் தேடி மாங்குளத்திற்கு பஸ்ஸில் செல்லுகிறார்கள். இவர்களுக்கு உதவுபவர் ஒரு சிங்கள நண்பர், டொக்டர். மாங்குளத்திலும் ஒரு சண்டையில் ஒருவாறு உயிர்தப்பி விடுதலைப் புலி உறுப்பினராக



இருக்கும் நந்திதாவைச் சந்திக்கின்றனர். நந்திதாவிடம் அவளது மகள் கீர்த்தனாவை காட்டுகிறார்கள். நந்திதா கொஞ்சம் கதைத்து கொஞ்சம் அழுது கொஞ்சமாக முத்தமிட்டுவிட்டுச் செல்கிறாள்.

மணிரத்தினம் இந்தப் படத்தின் மூலம் என்ன சொல்ல வருகிறார் என்பது தான் பிரச்சினை.

ரசிகர்களைக் கவருவது என்பது மணிரத்தினத்திற்கு கைவந்த கலை. இதை அவரது அனைத்துப் படங்களிலும் காணமுடியும். தனது படத்தில் நடிக்கும் நடிகர்களை மிகத் திறமையாகப் பயன்படுத்தி அவர்களின் நடிப்பாற்றலை முழுமையாக வெளிக்கொணரும் திறனும் மணிரத்தினத்திற்கு உண்டு. இதைக் கன்னத்தில் முத்தமிட்டால் படத்திலும் காண முடியும். ஆனால் அவர்களின் நடிப்பு மூலம் அவர்கள் எந்தளவு தூரம் ஈழத்தமிழரின் பிரச்சினையை அதன் யதார்த்த நிலையை மணிரத்தினம் வெளிக்கொணர்ந்துள்ளார் என்பது கேள்விக்குறியே.

ஈழத்தமிழர் எல்லாம் தொட்டால் ஒட்டிவிடும் கறுப்பு நிறத்தவர் என்பது போலவும் இந்தியத் தமிழர் ஏதோ சிவந்தவர்கள் என்றும் மணிரத்தினம் நினைக்கிறார் போலும். சாதாரண ஈழத்தமிழரையும் விடுதலைப் புலிகளையும் கறுப்பாகக் காட்டுவதும் செயற்கைத் தனமான ஒரு தமிழைப் பேசுவதும் (அது நிச்சயமாக யாழ்ப்பாணத் தமிழ் அல்ல என்பது யாவருக்கும் தெரியும்) ஏன் என்று தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் ஒரு அன்னியரை -சிங்களவரைக் கண்டதும் அடித்து இழுத்துக் கொண்டு போவது போல காட்டுவது ஏன்? எத்தனையோ சிங்களவர்கள் இப்போது வன்னி சென்று பத்திரமாகத் திரும்பி வருகிறார்கள் என்பதும் புலிகளின் தடுப்புக்காவலிலிருந்த சிங்களப்படையினர் கூட மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டு பல வருடங்களின் விடுவிக்கப்பட்டனர் என்பதை மணிரத்னம் அறியாரா?

விடுதலைப் புலிகள் பயிற்சியில் ஈடுபடுவதைக் காட்டும் போது பயிற்சியில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களாகவே காட்டப்படுகிறார்கள். அப்படியானால் விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ளவர்களெல்லாம் சிறுவர்கள் என்று சொல்வது தான் மணிரத்னத்தின் நோக்கமா? அவ்வாறு சொல்லதனூடாக அவர் எதைச் சாதிக்க விரும்புகிறார்?



(இலங்கையில் பத்திரிகைகள் உட்பட சில ஊடகங்கள் இப்படத்தை அற்புதமான படம் என சிலாகித்துள்ளன. அவற்றின் சிலாகிப்பின் பின்னணி பற்றியும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும்.)

உண்மையில் இந்தப் படத்தைப் பார்க்கும் ஒவ்வொரு ஈழத்தமிழருக்கும் தெரியும் எவ்வளவு தூரம் இது யதார்த்தத்தைச் சொல்கிறது என்று. இந்தப் படத்தைப் பற்றி இந்தியத் தமிழர்கள் வேண்டுமானால் சில புலம்பெயர்ந்த தமிழரும் சிலாகிக்கலாம். அபாரம் எனப் புகழலாம். மணிரத்தினம் ஒரு சாதனை செய்துவிட்டார் எனலாம். ஆனால் ஈழத்தின் யதார்த்தத்தினை அறிந்த, அதன் வரலாற்றைப் புரிந்தவர்களால் ஒரு போதும் முடியாது.

சரி கன்னத்தில் முத்தமிட்டால் எதைச் சாத்தித்திருக்கிறது? நந்தா, காற்றுக்கென்னவேலி போன்ற திரைப்படங்கள் உருவாக்கிய ஈழத்தமிழர் பற்றிய குறைந்தபட்ச கரிசனையைத் திசை திருப்பியிருக்கிறது.

இது தான் மணிரத்னத்தின் சாதனை.

பம்பாயில் மணிசா கொய்ராலா உயிரே பாடலுக்கு துப்பட்டா வழுவ மார்புகள் குலுங்க ஓடி வருவது போல இதில் 9 வயது கீர்த்தனாவின் சட்டையும் காற்றில் மேலே கிளம்புகிறது.

இது தான் மணிரத்னத்தின் முத்திரை.

சரி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அவர் தரும் தீர்வு என்ன? ஈழத்தில் நடக்கும் பிரச்சினைக்குக் காரணம், ஆயுத வியாபாரம். ஆயுத வியாபாரிகளால் தான் இப்பிரச்சினை நடக்கிறது. தீராமலும் இருக்கிறது.

இந்தப் பிரச்சினை எப்போ தீரும் எனக் கேட்கும் போது, சொல்கிறார், ஆயுதங்களையெல்லாம் கொண்டுபோய் கடலில் கொட்டினால் தான் அது தீரும் என்று. அட இவ்வளவு நாளும் இது எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டதே மிஸ்டர் மணிரத்தினம்.!

நன்றி ஐயா உங்களுக்கு!

## மலையக கல்வி ஆய்வரங்கம் -2002

புதிய பண்பாட்டு அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள மலையகக் கல்வி ஆய்வரங்கம் 2002 எதிர்வரும் 29-03-2002 அன்று ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி கல்லூரி கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணியிலிருந்து நடைபெறவுள்ளது. இவ்வாய்வரங்கம் நான்கு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. இதில் பின்வரும் ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

**அமர்வு 1**

"ஆரம்பக் கல்வியும் மலையகமும்" - முத்து சிவஞானம்

"பொதுக் கல்வியும் மலையகமும் - மா. கருணாநிதி

**அமர்வு 2**

"உயர்கல்வியும் மலையகமும்" - பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

"தொழில் சார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் மலையகம்" - பேராசிரியர் மு. சின்னத்தம்பி

**அமர்வு 3**

"ஆசிரியர் கல்வி வாய்ப்புக்களும் மலையகமும்" - சு.முரளிதரன்

"கல்வி முகாமைத்துவ நெருக்கடிகளும் மலையக தமிழ் பாடசாலைகளும்" - தை. தனராஜ்

**அமர்வு 4**

"இலங்கையில் இடைநிலை உயர்நிலை கலைத் திட்டமும் மலையகத் தமிழர்களும்" - கலாநிதி துரை மனோகரன்

ஆய்வுரைகளின் பின் கருத்துரைகளும் இறுதியாக கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. இவ்வாய்வரங்கிற்கு அனைவரது பங்குபற்றலும், பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தோழர் கே.டானியல் நினைவு ஆய்வாடல்

இலங்கையின் இடதுசாரி இயக்கச் செயற்பாட்டாளரும், தலித் இலக்கியத்தின் முன்னோடியும் சமூகப் போராளியுமான தோழர் கே.டானியல் அவர்களின் நினைவாய் ஆய்வாடல் ஒன்றை நடாத்த எண்ணியுள்ளோம். இவ் ஆய்வாடலில் பல்வேறு சிந்தனைகளின் மீதான தோழர் கே.டானியலின் ஆளுமைகளையும், கவனங்களையும் அவர் தம் போராட்ட அனுபவங்களையும் வெளிக் கொணர விரும்புகின்றோம். எனவே இவ் ஆய்வாடலில் சமூக அக்கறையாளர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**காலம்:-** 12.05.2002 (ஞாயிறு)
காலை 9.00 - இரவு 8.00 மணி வரை

**இடம்:-** 50, Place Torcy,
75018 Paris
Metro: Marx Dormoy

**மேலதிக தொடர்புகளுக்கு:-**

DANIEL NINAIVU AAIVAADAL
27, RUE JEAN MOULIN,
92400, COURBEVOIE,
FRANCE

Email :- Daniel ninaivu@hotmail.com

**தொலைபேசி :-** 0033142633176
0033149978983
0033561550013

**ஒருங்கிணைப்பு:-**

* உயிர்நிழல் (Exil)
* அசை - சமூக அசைவுக்கான எழுத்தியக்கம்
* ஐரோப்பிய கிழைத்தேச தொடர்பு மையம்
* கலை இலக்கியப் பேரவை (ஐரோப்பா கிளை)

# யார் இதைச் சொல்லி வைப்பார் ?

புலிகள் தாம் ஒரு பயங்கரவாதக் குழு அல்ல என்பதை நிரூபிக்க வேண்டும் என்று அமெரிக்க அரசின் தென்னாசிய விவகாரங்களுக்கான பதில் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா கூறியிருக்கிறார். புலிகள் சமாதான முயற்சியில் தாம் விசுவாசமாக ஈடுபட்டு வருவதாகவும், தாம் ஒரு பயங்கரவாத குழுவாக இருந்த தில்லை நிரூபிக்க வேண்டும் என்றும் அவர் கடந்த வாரம் யாழ் சென்று திரும்பியபின் தெரிவித்திருந்தார். அமெரிக்காவினால் தயாரிக்கப் பட்டிருக்கும் 'பயங்கரவாத இயக்கங் களின் பட்டியலில் இருந்து அது தனது பெயரை அப்புறப்படுத்திக் கொள்ள விரும்பினால் இது மிகவும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட் டிருந்தார்.

புலிகள் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகிறார்களோ இல்லையோ என்பதை ஒரு புறும் விட்டுவிடுவோம் அவர்கள் அந்தச் சொல்லால் தமது செயல்கள் அழைக்கப்படுவதை ஒரு போதும் விரும்பமாட்டார்கள் என்பது தெரிந்த விடயம். ஆயினும் பயங்கர வாதத்திற்கு அமெரிக்கா வைத்தி ருக்கும் 'வரைவிலக்கணத்தின்" அடிப்படையில் புலிகள் பயங்கர வாதிகள் தான் என்பது வெளிப்படை இங்கே எமது கேள்வி இதுதான்.

அமெரிக்காவின் 'பயங்கரவாத" வரைவிலக்கணம் சரியானது தானா? அல்லது அமெரிக்கா தான் விரும்பி யவர்களை பயங்கரவாதிகளாக முத்திரை குத்துவதற்காக உருவாக்கப் பபட்ட ஒன்றா? பின்னையதே உண்மை என்கிறார்கள் உலக அரசியல் ஆய்வாளர்கள்.

பயங்கரவாதம் ஒரு பொதுவான கருத்தின் அடிப்படையில் பயன்படுத் தப்படும் ஒரு சொல்லாக இல்லை. அமெரிக்கா செய்து வரும் பயங்கரவாத நடவடிக்கைகள், அதன் 'ஜனநாயக" அரசியல் இலக்கின் காரணமாகவும் 'பயங்கரவாதிகளை ஒழித்தல், என்ற அரசியல் செயற் திட்டம் காரணமாகவும் நியாயப் படுத்தப்பட்டு விடுகிறது. முழு உலகையும் இதை ஏற்க வைக்கும் மாபெரும் பிரசாரங்களை அமெரிக்கா கணம் தோறும் எல்லாத் தொடர்பு சாதனங்களினூடாகவும் பரப்பி வருகிறது.

அப்படியானால், மக்களால் ஏற்கப்பட்ட, நியாயப் படுத்தப்படக் கூடிய, முதுகெலும்பற்ற ஐ.நா.வால் 'பாஸ்" பண்ணப் படக் கூடிய ஒரு செயற்பாடு அல்லது நடவடிக்கை எத்தனை ஆயிரம் படு கொலை களையும், சொத்தழிவுகளையும் மேற் கொண்டாலும் அது பயங்கரவாதம் அல்ல என்றாகிவிடும். என்று கொள்ளலாமா?

அப்படியானால், ஐ.நா. ஏற்கா விட்டாலும் புலிகள் முதல் பின் லேடன் வரை எந்த அரசியல் குழுவும் செய்யும் தாக்குதல் நடவடிக் கைகளும் பயங்கரவாதம் என அழைக்கப்படக் கூடியவை அல்ல தான்.

இதை அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு யார் சொல்லி வைப்பார்?

○

## புலியைப் ..........

அமெரிக்காவுக்குப் புலி பூனை-யாவது விருப்பத்தைத் தரும்.

அமெரிக்காவைக் கண்டிக்க முற்பட்டவர்கள், சொல்லியிருக்க வேண்டிய முக்கியமான விடயத்தைச் சொல்லத் தவறி விட்டார்கள்.

புலிகளுடனான பேச்சு வார்த்தை, புலிகள் பற்றியதல்ல, இலங்கைத் தமிழர்கள் பற்றியது. இலங்கைத் தமிழர்கள் இன்று தமது ஆட்சிநிலை, அரசியல் அந்தஸ்துப் பற்றி இலங்கை அரசுடன் பேசுவதற்குப் புலிக-ளையே முன்நிறுத்துகின்றனர். புலிகளோடு பேச முடியாதென்ற இலங்கை அரசு அவர்களிடம் தான் பேச வேண்டும். என்று தமிழ் மக்கள் சொல்கிறார்கள்.

தமிழ்த் தேசிய முன்னணியும் சம்பந்தப்பட்டவர்களும் செல்ல வேண்டும் "கயிற்றை விட்டு விட்டு வாலைப் பிடிக்காதீர்கள்" என்று

இந்த உண்மை அண்மைக் காலத்துப் புலி விசுவாசிகளுக்குத் தெரிந்ததிலும் பார்க்க, அமெரிக்கா-வுக்கும், ரணிலுக்கும் நன்கு தெரியும்.

அவர்கள், பேச்சு வார்த்தை-களினூடேயும், பேச்சுவார்த்தைகளின் பொழுதும், புலிகளை மாற்ற விரும்பு-கின்றனர்.

புலிகளுக்கும் தம்பொறுப்பு விளங்குகின்றது. தங்களைப் பற்றிய பற்றிய ஒரு குற்றச் சாட்டுத் தமிழர்-களுக்குப் பாதகமாகப் பயன்படுத்-தப்பட விடக்கூடாது என்பது அவர்களுக்குத் தெரியும். (தமிழ்ச் செல்வனின் தொலைக்காட்சிப் பேட்டி)

இதுதான் அரசியல் என்பது. ஒன்றைச் சொல்லி விட்டு ஒன்றைச் செய்வது மாத்திரமல்லாமல், ஒன்றைச் சொல்வதற்காக இன்னொன்றைச் சொல்லுவதும் அரசியல் "தர்மம்" தான்.

புலிகள் பூனையாவது இன்று சிலருக்கு (அல்லது பலருக்கா) தேவைப்படுகிறது.

வடமாராட்சியில் ஒரு பழமொழி உண்டாம்.

"சாதுரியப் பூனை தயிரிருக்கச் சட்டி நக்கும்"

○

# யார் எதிர்பார்ப்பு வெல்லும்?

"யாழ்ப்பாணத்திற்கு பஸ் ஓடப்போகிறது" எல்லா இடங்களிலும் அடிபரும் கதை இது அதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. பல பஸ் கொந்தக் காரர்கள் பஸ் ஓட்டுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். ஒரு வழிப் பயணத்துக்கான கட்டணம் 400 ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் போக முடியும் என்றாலும் ஒவ்வொரு வரும் தத்தம் தேவைகளின் அடிப்படையில் தமது பயணத்தை திட்டமிட தொடங்கிவிட்டனர். கொழும்பிலுள்ள பிரபல கம்பணிகள் தமது வியாபார முகாமையாளர்களையோ சந்தைப்படுத்தல் முகாமையாளர்களையோ யாழ் அனுப்பத் தொடங்கிவிட்டன. விமான மூலமாக சென்று இப்போதே யாழ் நகரில் தமது பொருட்களை விநியோகம் செய்வோரை கண்டு பிடிக்கவும் அதற்கான ஆரம்ப ஒழுங்குகளை செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள் அவர்கள்.

ஆக, சமாதான சூழல் நாட்டின் எல்லோர் மத்தியிலும் பலத்த எதிர்பார்ப்பையும் சந்தோசத்தையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது. ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் இது ஒரு புதிய தலையிடியாக மாறி விட்டிருக்கிறது. அவர்களில் முக்கியமானவர்கள் யுத்த சூழலை பயன்படுத்திக் கொண்டு அரசியலும், அரசியல் மூலமான பிழைப்பும் நடாத்திய அரசியல் வாதிகள் குறிப்பாக தமிழர் கட்சிகள். இவர்கள் சமாதானத்திற்கு தாம் எதிரல்ல என்று அறிவித்தாலும், அதிக இடையிலே குழம்பி விடாதா என்று ஏக்கம் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்க அரசுக்கும் ஜனாதிபதிக்கும் சர்வதேச கழகத்திற்கும், புலிகளின் ஜனநாயக மறுப்பு பற்றிய தகவல்களை தருவதில் முன்னணியில் நிற்பவர்கள் இவர்களே என்று தெரிய வருகிறது.

இன்னொரு பிரிவினர், வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி, சுவை கிடைக்குமா? கிடைக்காதா என்று எதிர்பார்த்திருப்பார்கள். இவர்கள் வெளிநாடு சென்றதிற்கான பிரதான காரணம் இங்குள்ள அரசியல் சூழல் என்பதை விட பொருளாதார காரணங்கள் என்பது வெளிப்படை.

இப் பொருளாதார காரணங்களும் யுத்த சூழலால் உருவானவை என்பது வேறு விடயம்.

மூன்றாவது பிரிவினர் யுத்த காலத்தில் புதிதாக உருவான ஒரு தொழில் பிரிவினர் அதன் மூலமாக புதிய தொழில் வாய்ப்பைப் பெற்றவர்கள்.

இவர்கள் எல்லோரிடமும் எழும் கேள்வி, சமாதானம் சரிவருமா?

மக்களிடமும் இதே கேள்வி தான் எழுகிறது. சூழல் அதன் அர்த்தம் வேறு இதன் அர்த்தம் வேறு.

ஆனால் இவர்கள் யாரும் சரிவரக் கூடாது என்று நினைக்கிறார்கள் என்று சொய்வதற்கில்லை.

சரி வரக் கூடாது என்று நிணைக்கிற இருவர் இருக்கிறார்கள். ஒருவர் ஜனாதிபதி மற்றவர் அமெரிக்கா. அவர்களது நடவடிக்கைகள் இதைத்தான் உறுதி செய்கின்றன.

யார் எதிர்பார்ப்பு வெல்லப் போகிறது? விடை புலிகளதும் ரணிலதும் கையில்தான் உள்ளது.

## புலம் பெயர்ந்த......

எந்த நாடுகளிலிருந்து அனுப்பப்படுவார்கள் என்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன.

இதே சமயம் கடந்த வாரம் இந்தக் கேள்விகளுக்கு சிறிது ஆறுதலளிக்கக் கூடிய பதிலாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

"இலங்கையில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற போதிலும் தற்போதைக்கு பெருமளவில் அகதிகள் நாடு திரும்புவதற்குக் காலம் கனிந்துவிடவில்லை என்ற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரகம் கடந்த 19 ஆம் திகதி தெரிவித்திருந்ததையே நான் மேலேகுறிப்பிட்டிருக்கிறேன்.

## வாசகர் செ(ா)ல்லடி

# வேண்டாம் இந்துத்துவம்

அம்பாறை தமிழ் மக்கள் பிரச்சி னைகள் பற்றி நிகரி 8வது இதழில் நிராஜ் டேவிட் என்பவர் எழுதி யிருந்த குறிப்பை பார்க்கக் கிடைத்தது. அம்பாறையில் முஸ்லிம் தரப்பினால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சி னைகள் பெரிதும் அறியப் படாத தாகவே உள்ளன. இதுவரையில் வெளிவந்திராத விடயங்களை பார் வைக்குக் கொண்டுவந்த நிராஜ் டேவிட்டின் முயற்சி வரவேற்கத் தக்கதாகும். தமிழ் தரப்பினால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதை கதைத்திடுமளவுக்கு முஸ்லிம் தரப் பினால் தமிழர்கள் பாதிக்கப்பட்டது கதைக்கப்படாதிருக்கிறது எனக் குறிப்பிடும் நிராஜ் டேவிட்டின் ஆதங்கம் நியாயமானதே.

எனினும் அம்பாறைத் தமிழர் களின் பிரச்சினைகளை ஈற்றில் அம்பாறை இந்துக்களின் பிரச்சினை யாக இவர் குறுக்கிவிட முயல்வது தான் ஆபத்தானதாக உள்ளது. இப்பிரதேசத்திலுள்ள இந்துக் கோயில்கள் முஸ்லீம்களால் அழிக்கப் பட்ட சம்பவங்களை இந்தியாவி லுள்ள விஷ்வ இந்து பரிஷத் போன்ற தீவிரவாத இந்து அமைப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, சர்வதேச சங்கடத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கும், ஸ்ரீலங்கா அரசிற்கும் ஏற்படுத்தும்படியான முயற்சிகளையும் எவரும் மேற்கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார்.

ஈழத்தமிழரின் பிரச்சினைகளை ஈழத்தமிழ் சைவர்களின் பிரச்சி னையாக அடையாளப்படுத்துதல், ஈழத்தமிழ் சைவர்களை (உண்மையில் ஈழத்தமிழர்கள் சைவத்தை பின்பற்றும் பிரிவினரேயன்றி இந்துத்துவத்தை அல்ல) இந்தியாவில் வன்முறை மூலம் மேலாதிக்கம் செலுத்தும் இந்துமத வெறியாட்ட சக்திகளுக்கு நெருக்கமானவர்களாக, அவர்களின் தயவிற்கு பாத்திரமானவர்களாக சித்திரிக்க முயல்வதும் நம்மவர்களில் சில தரப்பினரிடையே தூக்கலாகவே காணப்படுகிறது.

இந்தியாவில் இந்துமதவாத கட்சியான பி.ஜே.பி.யின் ஆட்சி நிலவ வேண்டும் என்பதில் தாயகத்தில் வாழும் நமது மக்களில் சில பிரிவினரும் புலம்பெயர் மக்களில் ஒரு பகுதியினரும் தீவிர ஆர்வம் கொண்டுள்ளனர். பி.ஜே.பி. இந்துத்துவ கட்சி, அதனால் ஈழத்தில் இந்துக்கள் பாதிக்கப்படுவதை எதிர்த்து அது தலையீடு செய்யும், ஈழத் தமிழரில் எண்ணிக்கை பெரும் பான்மையான இந்துக்களின் அரசு - தமிழீழ அரசு அமைந்திட அது ஆதரவு வழங்கும் என இவர்கள் நம்புவதே இதற்குக் காரணமாகும்.

விஷ்வ இந்து பரிஷத், சிவசேனை, கரசேவக் ஆகிய இந்து மதவெறி அமைப்புகளும் அவற்றின் பிரதிநிதியான பி.ஜே.பி. அரசாங்கமும் இந்தியா எனும் அரச கட்டமைப்பின் நலன்களுடன் தமது இந்துத்துவ மேலாதிக்க நலன்களை பிணைத்துக் கொண்டுள்ளன. தனித் தமிழீழ அரசு அமைவதை இந்திய அரசு தனது அகன்ற பாரத நலன்களுக்கு அடிப்படையில் எதிரானதாக காண்கிறது. இந்த இந்திய அரசை தாங்கி நிற்கும் இந்துத்துவ பிராமணிய பிரிவின் பாதுகாவலர்களான இந்து மதவெறி அமைப்புகள் தனி தமிழீழம் அமைவதற்கு ஒருபோதும் குரல் கொடுக்க மாட்டார்கள் என்பதுவே அடிப்படை உண்மையாகும். ஆனால் இவ் இந்து மதவெறி பாசிசப் பிரிவினருக்கு உலகெங்கும் இந்துமத ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் எனும் வெறிக்கொள்கை இருப்பதால் அவர்கள் ஈழத்தமிழ் இந்துக்களை மதம் சார்ந்து எப்பொழுதும் தமது ஆதிக்கக் குடையின் கீழ் வைத்திருக்க முயல்கிறார்கள். அதற்காக ஈழத்தமிழ் இந்துக்களுக்காக அடிக்கடி அனுதாப அறிக்கைகள் விடுத்துக் கொள்வார்கள்.

ஈழத்தமிழ் தேசியம் என்பது விடுதலை அரசியலை பண்பாகக் கொண்டுள்ளது. அது எல்லாவிதமான மதவெறி ஆக்கிரமிப்புகளுக்கும் எதிரானது. தமிழீழ தாயகத்தில் நிலவும் தமிழ் முஸ்லீம் முரண் பாடானது தேசிய தளத்திலான முரண்பாடாகும். அது தமிழ் - முஸ்லீம் தரப்புகள் கதைத்து தீர்த்தாக வேண்டிய பிரச்சினையாகும். இதை இந்து - முஸ்லீம் பிரச்சினையாக உருமாற்ற முயல்வதும், தமிழீழ தாயகத்தில் எண்ணிக்கை சிறுபான் மையாக இருக்கும் முஸ்லீம்களை அச்சுறுத்திட இந்தியாவிலுள்ள இந்து மதவெறி பாசிச சக்திகளை துணைக் கழைத்துக் கொள்ள முயல்வதும் நமது விடுதலையை அடிப்படை யிலேயே அர்த்தமற்றதாக்கிவிடும்.

இந்திய அரசு நமக்கு விடுதலை வாங்கித்தரும் எனும் மாயைகள் நமது மக்களிடம் 87 இந்திய ஆக்கிரமிப் புடன் தகர்ந்த போயிற்று. அதேபோல் இந்தியாவில் செயற்படும் இந்து மதவெறி சக்திகளும் நமது இறைமைக்கு என்றும் ஆபத்தா னவை என்பது நமது மக்களின் அனைத்துத் தரப்பினராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மை ஆகும்.

- அருவி

## சமாதானத்தை.....

கண்டித்து காந்தியவழியில் அன்னை பூபதி சாத்வீகப் போராட்டம் நடத்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்த தினத்தை மட்டக்களப்பில் மக்கள் ஆண்டு தோறும் பக்தி பூர்வமாக அனுஷ்டித்து வருவது வழக்கம்.

நிரந்தர போர் நிறுத்தம் அமுலுக்கு வந்து நாட்டில் விரைவில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக் கையுடன் இவ்வருடம் அன்னை பூபதி நினைவு தினத்தை பிரார்த் தனையுடன் நினைவுப் பூங்காவும் நிறுவதற்கும் திட்டமிடப்பட்டது.

அன்னை பூபதியின் பூதவுடல் அடக்கம் செய்த நாவலடியில் பூங்கா ஒன்று அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பா டுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முரணானது என்று மட்டக்களப்பு படை அதிகாரி அரசாங்க அதிகாரிகளை அழைத்து பூங்கா நிறுவக்கூடாது என்று அறிக்கை விடுத்தார்.

இதற்கு மட்டக்களப்பு அரச அதிபர், மாநகர ஆணையாளர் ஆகியோர் எதிர்த்து விளக்கம் கூறிய போதிலும் படை அதிகாரி அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பின்னர் மட்டக்களப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களும் படை அதிகாரியின் இச் செயலைக் கண்டித்திருந்தார்.

இதே சமயத்தில் தான் கிரானில் அன்னை பூபதி நினைவாக பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவற்கு போட்டிருந்த பந்தலை விஷமிகள் சிலர் குலைத்து விட்டனர். இதைப் படையினரே செய்ததாக பொதுமக்கள் குற்றம் சாட்டி இச்செயலைக் கண்டித்து நேற்றைய ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர்.

போர் நிறுத்தப்பட்டு நாட்டில் அமைதி நிலவும் இச்சமயத்தில் மட்டக்களப்பிலுள்ள படையினர் இந்த அமைதியை நீடிக்க விடமாட்டார் களோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

○

## பெண்கள் .......

vi ம் பக்கத் தொடர்ச்சி

பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட பெண்கள் அமைப்பு துணை செய்யுமானால் மலையக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பது கடினமானதல்ல.

○

Registred as a Newspaper

# நிகரி

NIHARI

83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk

## ரணிலிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பு

தேர்தல் முடிவுகளை மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் ஒரு 'காட்டி" யாகக் கொள்ளலாமா?

கொள்ளலாம் என்று மட்டு மல்ல, அதுவே மக்களின் அபிலாசைகளை அளவிடுவதற்கான ஒரே காட்டி என்றுதான் பாராளுமன்ற அரசியல் மரபைப் பேணும் அரசியல் அறிஞர்கள் கருதி வருகின்றனர்.

இது உண்மை என்றால், நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மிகவும் தெளிவாக ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இன்று எடுத்துவரும் சமாதானத்தை நோக்கிய முயற்சிகள் அறுதிப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் ஐக்கிய தேசிய முன்னணி பெற்றுள்ள வெற்றியானது, மக்களின் பேராதரவு ரணிலின் இன்றைய அரசியற் செயற்பாட்டுக்கு கிடைத்த பாராட்டு என்று சொல்லலாம், தவிரவும் ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகள் தொடர்பாக கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளை அவர்கள் கணக்கெடுக்கவில்லை என்பதையும் இந்த முடிவுகள் உணர்த்தி விட்டிருக்கின்றன என்று கொள்ளலாம்.

மக்கள் விடுதலை முன்னணி முதல் சிஹல உறுமய ஈறாக உள்ள, அனைத்து இனவாத சக்திகளும் கூட்டாக எதிர்த்துவரும் ரணில் பிரபா உடன்படிக்கை, மற்றும் சமாதான செயற்பாடுகள் அனைத்தையும் ஏகோபித்த விதத்தில் மக்கள் நிராகரித்து விட்டிருக்கிறார்கள். இந்த முடிவு, ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியற் தலைமைக்கு விழுந்த பேரடி மட்டுமல்ல, அவருக்கு கிடைத்த மீள எழமுடியாதளவுக்கு பலமான அரசியற் தோல்வியும் கூட.

பாராளுமன்ற ஜனநாயக மரபை உதட்டளவில் மட்டும் உச்சரிக்கின்ற நமது ஜனாதிபதி தவிர்ந்த வேறுயாராக இருந்தாலும் இந்த முடிவைக் கேட்டவுடன் தனது தலைமைப் பதவியையும் ஜனாதிபதிப் பதவியையும் இராஜினாமாச் செய்துவிடுவார்கள்.

ஆனால் சந்திரிகா அப்படிச் செய்யமாட்டார். இவர்களைப் போன்றவர்கட்காகத்தான் இளங்கோ 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று" என்று கூறினார் போலும்! அறம் கூற்றாகும் வரை அவர் அதிகாரத்தில் இருக்கத்தான் செய்வார்.

இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால், மக்களின் இந்த மாபெரும் ஆதரவைப் பெற்ற பிரதமர் ரணில் தலைமையிலான அணிக்கு, ஜனாதிபதி சந்திரிகாவை விட அதிகமான பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டிய கடப்பாடு இந்த முடிவின் மூலம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நாட்டில் சமாதானம் நிலவுவதற்கான அடிப்படை யுத்தத்தை நிறுத்துவது, வடக்குக் கிழக்குக்கு பொருட்களை தடையின்றி அனுப்புவது, பாதை திறப்பது போன்ற செயல்களில் தங்கியிருக்க வில்லை. இவையெல்லாம், சமாதான நிலமை ஏற்படுவதற்கான சூழ் நிலையை உருவாக்குவதற்கான நிகழ்வுகள் மட்டுமே. இத்தகைய செயல்களைத் தான் சாமாதானம் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்குதான் பல சலுகைகளை வழங்கியிருப்பதாக கூறியிருந்தார். இவைகள் ஒன்றும் சலுகைகள் அல்ல, இவை தமிழ் மக்களின் - இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் - உரிமைகள் என்பதை அவர் காணத் தவறியிருந்தார். ரணில் விக்கிரமசிங்க இன்று எடுத்துவரும் இந்த நடவடிக்கைகளையும் கூட 'அளவுக்கதிகமான சலுகைகளை வழங்கி விட்டீர்கள்" என்று எதிர்க் கட்சியினர் கூறி எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், இவை உண்மையில் வெறும் சமாதான நிலைமை உருவாவதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு அவசியமான விடயங்கள் மட்டுமே.

அடிப்படையான விடயங்கள் அல்ல இவை.

பொங்கு தமிழ் எழுச்சி விழாக்கள் தோறும் மக்கள் திரண்டெழுந்து வந்து முழக்கமிடும் கோரிக்கைகள் தான் உண்மையில் அடிப்படையான விடயங்கள்.

இந்தக் கோரிக்கைகளை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்களின் போது தென்னிலங்கை முழுவதும் சந்திரிகா அணியினரும் பிற இனவாத சக்திகளும் கூறி சிங்கள மக்களை அவற்றிற்கு எதிராக திருப்ப எவ்வளவோ முயன்றனர்.

ஆயினும் மக்கள் அவை குறித்து அக்கறை காட்டவில்லை.

ஆக, இந்தக் கோரிக்கை கட்கும் சிங்கள மக்களது எதிர்ப்பு இல்லை என்று கொள்ளுதல் சாத்தியமே.

எனவே, ரணில் மக்கள் தமக்கு அளித்துள்ள ஆதரவை, ஜனாதிபதி சந்திரிகா போல 'அவமாக்காமல்" பொறுப்புணர்வுடன் பெற்று செயற்பட பயன்படுத்த வேண்டும். இதுவே நிரந்தர சமாதான சூழலுக்கான அடிப்படையாக அமைய முடியும் ரணில் செய்வார் என நம்பலாமா?

## நிமலராஜனின் கொலையாளிகளை ஈ.பி.டி.பி மறைத்து வைத்திருக்கிறதா?

ஆர். தயாபரன்

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சாட்சியாகக் கருதப்படும் "ஜெகன்"ஐ உடனடியாக குற்றப்புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்குமாறு யாழ் நீதிமன்று டக்ளஸ் தேவானந்தாவிற்கு உத்தரவொன்றினைப் பிறப்பித்துள்ளது. ஈ.பி.டி.பி.யின் அங்கத்தவரான "க.ஜெகதீஸ்வரன் எனப்படும் ஜெகன்"னையே பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அறிக்கைப் பிரகாரம் அவர்களிடமே ஒப்படைக்க நீதிமன்று பணிப்பு விடுத்துள்ளது.

படுகொலைச் சம்பவ தினத்தன்று இரவு சம்பவ இடத்திற்கருகில் உள்ள ரயில்வே கடவைப் பகுதியில் துவிச்சக்கர வண்டியொன்று கைவிடப்பட்டிருந்தது. கொலையாளிகளால் கைவிடப்பட்டிருந்ததாக நம்பப்படும் இத்துவிச்சக்கர வண்டி "மக்கள் சமாதானப் பேரவை"க்குச் சொந்தமானதென விசாரணைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு ஈ.பி.டி.பி.யில் இருந்து விலகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.இராமேஸ்வரனினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இவ்வமைப்பின் உறுப்பினராக இருந்த ஜெகன் எனப்படும் க.ஜெகதீஸ்வரன் அங்கிருந்து ஈ.பி.டி.பி.க்கு தப்பி ஒடிச் சென்றிருந்தவேளை மேற்படி துவிச்சக்கர வண்டியையும் திருடிச் சென்றுவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நிமலராஜன் படுகொலைச் சம்பவத்தை நெப்போலியன் மற்றும் முரளி தலைமையிலான குழுவினரே திட்டமிட்டு நடாத்தினார்களென்று சந்தேகிக்கப்படுகின்றது. இவர்களே தாக்குதலிற்கென ஸ்ரீதர் திரையரங்கில் இருந்து எடுத்துச் சென்ற இத்துவிச்சக்கர வண்டியை கைவிட்டுச் சென்றிருக்கலாமெனவும் நம்பப்படுகின்றது. இத்துவிச்சக்கர வண்டி தொடர்பான தகவல்களைப் பெறுவதன் மூலம் விசாரணையை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் முற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் ஜெகன் பொலிஸாரிடம் சிக்கினால் பல தகவல்கள் கசியலாமென்ற அச்சத்தினால் ஜெகனை நெடுந்தீவுப் பகுதியில் ஈ.பி.டி.பி.யினர் மறைத்து வைத்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கொலைத்தாக்குல் சம்பவத்தின் முக்கிய நபரான நெப்போலியன் நெடுந்தீவில் இருந்து கடற்படையின் உதவியுடன் இந்தியா தப்பிச் சென்று விட்டதாக நம்பப்படுகின்றது. இந்நிலையில் ஜெகனையும் இந்தியா அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நிமலராஜன் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவரென நம்பப்படும் "முரளி" ஊரெழுப் பகுதியில் உள்ள 51வது படையணி முகாமில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர் இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் "பிக்கப்" வாகனத்தில் "பலாலி" வீதிப் பகுதியில் சாதாரணமாக நடமாடி வருவதாக தெரிய வருகின்றது.

## ஏன் இந்தப் பாகுபாடு?

- அலையோவியன்

மன்னாரில் நம்மைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமற்றதும் அருவருப்பானதுமான ஒரு புதுவித நோய் ஒன்று அபாயகரமாக ஆரம்பித்துள்ளது. சமாதானத்துக்கான எதிர்பார்ப்புகள் தோன்ற ஆரம்பித்துள்ள நிலையில் இது நிச்சயமாக ஆரோக்கியமானதல்ல.

அது மன்னாரில் ஏட்டிக்கு போட்டியான மதம் சார்ந்த நடவடிக்கையாகும். கடந்த 10ம் திகதி மாலை 6 மணியளவில் மன்னார் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளதும் மன்னார் நகரின் நுழைவாயில் பகுதியுமாய் உள்ள இடத்தில் சடுதியாக கல், மண் மற்றும் ஆட்களுடன் ஒரிரு அருட் தந்தையர் கூடினர். இங்கு என்ன நடக்கப் போகின்றது என ஊகிப்பதற்கு முன்பே ஓர் இடத்தில் அத்திவாரம் வெட்டப்பட்டு கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஏறத்தாள நள்ளிரவு 11 மணியளவில் 8 அடி உயர நான்கு அடி அகலமான தூபி ஒன்று கட்டப் பட்டது. அடுத்த நாள் பார்க்கையில் அவ் 8 அடி தூபியின் மேல் அழகிய மடு அன்னையின் திருவுருவம் ஒன்று அங்கு வைக்கப்பட்டு தோரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதை அனைவரும் காணக்கூடியதாக இருந்தது.

"வீதிகள் தோறும் பள்ளிகள் செய்வோம்" என்பது போல் இவ்வாறு ஆலயங்கள், தெய்வத் திருவுருவங்கள் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும். அது பிழையாகாது. ஆனால் ஏன் இரவோடிரவாக, அவசர அவசரமாக கட்டப்பட்டது?

இத்திருவுருவம் வைக்க கட்டப்பட்ட இடம் ஓர் அரசாங்க காணியாகும். இவ்விடத்தில் இந்து மத விக்கிரகம் வைப்பதற்கு சிறிய கோயில் ஒன்றைக் கட்டுவதற்கு இரகசிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இவ்விடயம் மெல்ல கசிய ஆரம்பித்ததை அடுத்தே "வேதசாட்சிகள்" மரித்த இம் மண்ணின் நுழைவாயில் பகுதியில் இந்து ஆலயம் இருப்பதா? என்ற ஆதங்கத்தில் (போட்டியில்) இத் திருச்சொரூபம் இங்கு அவசர அவசரமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வைரவர் கோயில் விவகாரத்தில் புகையும் இரு மதங்களுக்கிடையிலான விரோத உணர்வு இதன் மூலம் மேலும் புகைய ஆரம்பித்துள்ளது.

பல இனமக்கள் சென்று வழிபடும் மடுத்திருப்பதி பகுதியில் இதுவரை ஒரேயொரு தொலைபேசி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதுவும் பொதுமக்களின் பாவனைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் ஆலய பாவனைக்கு மாத்திரமே உள்ளது. இங்கு பண்டிகை காலத்தில் மாத்திரமல்லாது ஏனைய காலத்திலும் மக்கள் சென்று வருவது வழக்கம். அத்தோடு அப்பிரதேசத்தில் பல்வேறு குடும்பங்களும் உள்ள நிலையில் தொலைபேசி இல்லாததால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

ஆனால் அண்மையில் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி நிகழ்வுக்காக ஆறு தொலைபேசி 'பூத்'கள் அமைக்கப்பட்டு மக்கள் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளன. ஏன் இந்த பாரபட்சம்? இவ் விரண்டும் யார் கட்டுப்பாட்டிலும் இல்லாத யுத்த சூனிய பிரதேசங்கள் தானே?

## அரை நூற்றாண்டின் பின் சரிந்த அத்தனகல

-குவேனி

51 வருடகாலம் கட்டிக்காக்கப்பட்டு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல்ல கோட்டை சரிந்தது.

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ.சு.க. 1951 முதல் 2002 மார்ச் 19 வரை அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் நிலைநாட்டி வந்த அரசியல் அதிகாரம் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலுடன் கைநழுவிப் போனது. நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 5821 அதிக வாக்குகளைப் பெற்றதன் மூலமாக ஐ.தே.மு. இப்பிரதேசத்தில் தனது அரசியல் அதிகாரத்தை நிறுவி பெரும் அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

2002 டிசம்பர் 5 பொதுத் தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு. கட்சி தலைமையிலான பொதுசன முன்னணி 49.5 மூ வாக்குகளில், அதாவது 39, 531 வாக்குளைப் பெற்றிருந்தது. இதில் 9913 அதிக வாக்குகளைப் பெற்றதன் மூலமாக இத்தொகுதியில் வெற்றியீட்டியது. இத் தேர்தலின் போது ஜனாதிபதி சந்திரிகா அத்தனகல தேர்தல் தொகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடவோ, தாமே நேரில் வாக்களிக்க சென்றதன் மூலமாக தமக்கான வாக்களார்களை உற்சாகப்படுத்தவோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை உள்ளூராட்சி தேர்தலின் போது ஜனாதிபதி இரு நாட்கள் அத்தனகல்லவில் தங்கியிருந்ததுடன் வாக்களிக்க வாக்குச் சாவடிக்கு சென்றதன் மூலமாக தமது ஆதரவாளர்களையும் உற்சாக மூட்டும் முயற்சிகளையும் எடுத்துக் கொண்டார். எனினும் தேர்தல் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்துவிட்டன:

அத்தனகல்ல தேர்தல் தொகுதி கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு. ஐ.தே.க. 33,375 (51.14 வீதம்), பொதுசன முன்னணி 27,552 (41.39 வீதம்), ஜே.வி.பி 5107 (7.67 வீதம்). இதன்படி ஐ.தே.க. 12 ஆசனங்களையும், பொதுசன முன்னணி 9 ஆசனங்களையும், ஜே.வி.பி. 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.